Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 03 ஞாயிற்றுக்கிழமை (19.08.2012) பக்கங்கள் 20 ஓசை – 322

விஷானி நகை மாளிகை

மங்கையர் மனம் கவரும் தங்க நகைகளுக்கு



இல. 187, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
0212219510 (C/1675)



எது என்று தெரியாமல்... (05)



கனவு இல்லத்தை வரைய... (12)

மறவன்புலோவில் தும்புத் தொழிற்சாலை



(13)

சிறுநீரக நோயைத் தடுக்க



(04)

கள்ளு விற்பனை வீழ்ச்சி



(14)

## இலங்கைத் தமிழருக்காக தி.மு.க. ஆட்சியை இழக்கவில்லை

### உண்மையை புட்டு வைக்கிறது ஜூனியர் விகடன்

(சென்னை)

இலங்கைத் தமிழருக்காக இரண்டு முறை ஆட்சியை இழந்த கட்சி தி.மு.க. என அதன் தலைவர் கருணாநிதி உட்பட அக்கட்சியைச் சேர்ந்த பலர் கூறி வருவதில் எவ்வித உண்மையும் இல்லையென ஜூனியர் விகடன் தெரிவித்துள்ளது.

இலங்கைத் தமிழருக்காக இரண்டு முறை ஆட்சியை இழந்த கட்சி தி.மு.க. என்கிறாரே ஸ்டாலின்? என வாசகர் ஒருவர் கேட்ட கேள்விக்கு, இது தவறான தகவல். 1976, 1991 ஆகிய இரண்டு முறை தி.மு.க.வின் ஆட்சி தமிழகத்தில் கலைக்கப்பட்டது. பிரதமர் இந்திரா காந்தியின் அவசர நிலைப் பிரகடனத்தை துணிச்சலாக கருணாநிதி எதிர்த்தார். அதனால்தான் அவரது ஆட்சி அப்போது கலைக்கப்பட்டது. இதுதான் உண்மை. அந்தக் கால கட்டத்தில் இலங்கைப் பிரச்சினை எழவும்

(19) ஆம் பக்கம் பார்க்க

## முஸ்லிம் சகோதரர்களுக்கு அமைச்சர் பெருநாள் வாழ்த்து

(யாழ்ப்பாணம்)



ஒரு மாத காலமாக நோன்பிலிருந்து இஸ்லாத்தின் முக்கிய கடமைகளில் ஒன்றை நிறைவேற்றி புனித ரமழான் திருநாளைக் கொண்டாடும் சகோதர முஸ்லிம் மக்களுக்குத் தனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறார் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா. அவர் தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

எமது மண்ணில் முஸ்லிம் சகோதர மக்கள் விரட்டப்பட்ட ஒரு கொடிய காலகட்டம் நடந்திருக்கிறது. இது குறித்து எமது மக்கள் என்ற ரீதியில் நான் பெரிதும்

(19) ஆம் பக்கம் பார்க்க

# மகிந்த-மன்மோகன் ஈரானில் சந்திப்பு

(கொழும்பு)

ஜெனிவாவில் இடம்பெற்ற ஐ.நா. மனித உரிமைகள் மாநாட்டில் அமெரிக்கா கொண்டு வந்த இலங்கைக்கு எதிரான பிரேரணையை இந்தியா ஆதரித்து வாக்களித்த நிலையில், இலங்கை, இந்திய நாடுகளுக்கிடையில் ஏற்பட்டுள்ள விரிசல் நிலையை சீர்செய்யும் வகையில், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடன், ஜனாதிபதி மகிந்த ஈரானில் பேச்சுக்களை நடத்தவுள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஈரான் தலைநகர் தெஹ்ரானில் எதிர்வரும் 26 ஆம் திகதி அணிசேரா நாடுகளின் மாநாடு இடம்பெறவுள்ளது. இந்த மாநாட்டில் கலந்து கொள்ள வருகை தரும் இந்தியப் பிரதமருடனேயே ஜனாதிபதி பேச்சு நடத்தவுள்ளார்.

அத்துடன் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் உட்பட இலங்கையின் தற்போதைய நிலைமைகள் குறித்தும் இனப்பிரச்சினைக்கான தீர்வினைக்காணும் வகையில் உருவாக் கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்துகொள்ள வேண்டுமெனவும் இதற்கு இந்தியாவின் பங்களிப்பு அவசியமானதெனவும், ஜனாதிபதி எடுத்துரைப்பாரெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இருவருக்குமிடையிலான சந்திப்பின்போது இலங்கையில் அதிகரித்து வரும் சீன முதலீடுகள் தொடர்பாக இந்தியப் பிரதமர் தனது கரிசனையை வெளிப்படுத்துவாரெனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## காப்புறுதி செய்த நிலையிலும் நட்டஈடு கிடைக்கவில்லை

### கிளிநொச்சி வர்த்தகர்கள் விசனம்

கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்தத்திற்கு முன்னர் வர்த்தக சங்கத்திற்கு உட்பட்ட ஒவ்வொரு வியாபார நிலையமும் காப்புறுதி செய்யப்பட்ட நிலையில் வன்னியில் இடம்பெற்ற யுத்தத்தில் அநேகமான வர்த்தக நிலையங்கள் சேதமடைந்தும் முற்றாக அழிவடைந்த நிலையிலும் உள்ள நிலையில் அதற்கான நட்ட ஈட்டினைக் குறித்த காப்புறுதி நிறுவனம் தரவில்லை எனக் கிளிநொச்சி மாவட்ட வர்த்தகர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## ஐந்து ஏக்கர் சவுக்கங்காடு வடமராட்சியில் எரிந்து நாசம்

(பருத்தித்துறை)



பருத்தித்துறை மணற்காடு குடத்தனைப் பிரதேசத்தில் அமைந்துள்ள சவுக்கு மரக் காட்டில் நேற்று முன்தினம் இரவு பற்றிய தீயினால் ஐந்து ஏக்கர் பரப்பளவிலான சவுக்கம் காடு அழிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் இரவு பரவிய தீயைக் கட்டுப்படுத்த எடுத்த முயற்சி பலனளிக்கவில்லை எனவும், வறட்சியான காலநிலை மற்றும் கடும் காற்றுக் காரணமாக தீ வேகமாக பரவியதாகவும் யாழ்.கட்டளைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

சட்டவிரோதமான முறையில் மரங்களை வெட்டிக் கடத்துபவர்களே இந்தத் தீயைப் பற்ற வைத்திருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. மணற்காடு குடத்தனைப் பிரதேசத்தில் கடமையிலிருந்த

(19) ஆம் பக்கம் பார்க்க

## மனித உரிமைகள் அதிகாரிகள் அடுத்த மாதம் இலங்கையில்

ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவை அதிகாரிகள் குழு அடுத்தமாதம் 14ஆம் திகதி இலங்கை வரவுள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

ஐ.நா. மனிதஉரிமைகள் ஆணையாளர் பணியக அதிகாரிகளை இலங்கையின் மனித உரிமைகள் நிலையை நேரில் பார்வையிடுவதற்கு அனுமதிக்க முடியாது என்று அரசாங்கம் இதுவரை கூறி வந்தது.

தற்போது, அரசாங்கம் அதற்கு அனுமதி கொடுத்துள்ள நிலையிலேயே, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் மூன்று அதிகாரிகளைக் கொண்ட குழு அடுத்த மாதம் 14 ஆம் திக்தி கொழும்பு வரவுள்ளது.

இந்தக் குழுவினர் இலங்கையின் வடக்குப் பகுதிகளுக்கு மட்டுமன்றி, தென்பகுதிக்கும் சென்று அங்குள்ள மனிதஉரிமைகள் நிலை குறித்து மதிப்பீடு செய்யவுள்ளனர்.

## நிரந்தர நியமனமற்ற உதவி ஆசிரியர்கள்

(அச்சுவேலி)

யாழ்.மாவட்டத்தில் உள்ள பல்வேறு பாடசாலைகளில் சில வருடங்களுக்கு முன்னர் உதவி ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டு இற்றை வரைக்கும் உதவீ ஆசிரியர்களாகவே கடமையாற்றி வரும் பலருக்கு இதுவரை நிரந்தர நியமனம் எதுவும் வழங்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட உதவி ஆசிரியர்கள் மிகவும் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றிய ஆசிரியர்களில் ஒரு தொகுதியினர் தகுதி அடிப்படையில் நேர்முகத் தேர்வின் மூலம் தெரிவுசெய்யப்பட்டு கல்வி அமைச்சினால் உதவி ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர். இவ்வாறு உதவி ஆசிரியர்களாக நியமனம் பெற்றவர்களில் குறிப்பிட்ட ஒரு தொகையினர் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ஆசிரியர் சேவைக்கு உள்வாங்கப்

(19) ஆம் பக்கம் பார்க்க

## தமிழ் குடும்பத்தைச் சேர்ந்த மூவர் கொழும்பில் சடலங்களாக மீட்பு

(கொழும்பு)

கொழும்பு வெள்ளவத்தை ராமகிருஷ்ணன் வீதியிலுள்ள டெரஸ் பகுதியில் தமிழ் குடும்பமொன்றைச் சேர்ந்த மூவர் நேற்றையதினம் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

ஹட்டன் கொட்டக்கலை டெரிக்கிளயர் தோட்டத்தை சேர்ந்த குமாரசாமி (வயது-60), அவரது மனைவி பூபதி (வயது-56) மகள் அமிர்தப்பிரியா (வயது-23) ஆகியோரே சடலங்களாக மீட்கப்பட்டவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்கள் தற்கொலை செய்து கொண்டார்களா? அல்லது கொலை செய்யப்பட்டார்களா? என்ற ரீதியில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

ஹட்டன் - கொட்டகலை பகுதியைச் சேர்ந்த அவர்கள் மூவரையும், குடும்பத்தின் மூத்த மகன் சில தினங்களுக்கு முன்னர் கொழும்புக்கு அழைத்து வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் தங்கியிருந்த வீட்டிலிருந்து துர்நாற்றம் வந்ததையடுத்து அயலவர்கள் பொலிஸாருக்கு தெரிவித்ததன் பின்னரே பொலிஸார் இச்சடலங்களை மீட்டுள்ளனர்.

சம்பவம் இடம்பெற்ற பகுதிக்கு (19) ஆம் பக்கம் பார்க்க

# நிறையப் பயிற்சிகள் எடுத்தால் யாழ். மாணவர்களும் சாதிக்கலாம்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாணவர்களிடத்தில் இசைத்துறையில் நிறைய ஆர்வம் இருக்கிறது. நிறையப் பயிற்சிகள் எடுத்தால் அவர்களும் சாதிக்கலாம் என்று பிரபல தென்னிந்திய திரையிசைப் பின்னணிப் பாடகரும் கர்நாடக சங்கீத வல்லுநருமாகிய உன்னிகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

நல்லூர் கோவில் திருவிழாவை முன்னிட்டு வடமாகாண கலாசார திணைக்களமும் யாழ். இந்திய துணைத்தூதரகமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த 'தெய்வீக சுக அனுபவம்' எனும் கலாசார நிகழ்விற்கு வந்திருந்த அவர் நேற்று யாழ். இந்திய துணைத் தூதுவராலயத்தில் நடைபெற்ற பத்திரிகையாளருடனான சந்திப்பில் கலந்துகொண்டே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் ஆரம்பத்தில் கர்நாடக இசையில்தான் பாடிக்கொண்டிருந்தேன். சினிமாவில் பாடுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. அதனால் பிரபல்யம் அடைந்து விட்டேன். அதன் பின்னர் நிறையப் பேர் கர்நாடக சங்கீதத்தைக் கேட்க ஆரம்பித்துவிட்டனர்.

நல்ல கலைஞராக வேண்டும் என்றால் நிறையப் பயிற்சிகள் எடுக்கவேண்டும். கர்நாடக இசையைக் கற்கவேண்டும். அப்படியானால் இசைத்துறையில் சாதிக்க முடியும்.

யாழ்ப்பாணத்தில் இருக்கின்ற மாணவர்களிடம் இசைத்துறையில் நிறைய ஆர்வம் இருக்கிறது. நிறையப் பயிற்சிகள் எடுத்தால் அவர்களும் சாதிக்கலாம். எனவே இசையை முறைப்படியாகக் கற்கவேண்டும். ராகங்களை முழுமையாகக் கற்கவேண்டும். அப்படியானால் எல்லாவற்றிலும் பாடலாம்.

சினிமாவில் நான் பாடத் தொடங்கியது முதல் இதுவரை 1500 பாடல்கள் வரை பாடியிருக்கின்றேன். தமிழ்நாடு பாலக்காடு எனது கிராமம். எனக்கு இசைக்கல்லூரி ஒன்று உள்ளது. இங்கு இலங்கை மாணவர்கள் என்னிடம் இசை பயின்று வருகின்றனர்.

யாழப்பாணத்திலும் இசைக் கல்லூரி ஒன்றை ஆரம்பிக்க அனுமதி கிடைத்தால் நிச்சயம் ஆரம்பிக்க ஆவலாக உள்ளதாகவும் தெரிவித்த உன்னிகிருஷ்ணன் யாழ். மாணவர்களுக்கு இசை சார்ந்த விடயங்களைக் கற்றுக்கொடுக்க தயாராக இருப்பதாகவும் சந்தர்ப்பம் கிடைத்தால் இசைப்பயணம் தொடரும் என்றும் தெரிவித்ததுடன், இசைத் துறையில் எவரும் நிரந்தரம் இல்லை பழையவர் போக புதியவர்கள் பிரகாசிப்பது இயற்கையின் நியதி என்றார். (பா)

# நயினை அறங்காவல் சபை மின் இணைப்பிற்கு உதவி

(நயினாதீவு)

நயினாதீவு முதலாம் வட்டாரம் வல்லிக்காடு வீதிக்கு மின்சார இணைப்பு வழங்குவதற்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிதியுதவி நயினாதீவு நாக பூசணி அம்மன் ஆலய அறங்காவலர் சபையினால் 3 இலட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி வீதிக்கு மின் விளக்குகள் இல்லாமல் வீதி இருளில் காணப்படுவதுடன், இரவு வேளைகளில் பயணம் செய்யும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்கி வந்தனர்.

இந்தநிலையில் வேலணைப் பிரதேச சபையிடம் மக்கள் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க அறங்காவலர் சபையினால் இந்நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மொத்தமாக 4 இலட்சத்து 4 ஆயிரம் ரூபா செலவாவதால் ஒரு இலட்சத்து 4 ஆயிரம் ரூபா மக்களினால் வழங்கப்பட்டுள்ளதாக வேலணைப் பிரதேச சபை உறுப்பினர் சி.ந.கருணாகரகுருமூர்த்தி அறிவித்துள்ளார். (175)

# தேவாலயத்திலும் சிலைகள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் தேவாலயத்திலிருந்து மரத்தினால் செய்யப்பட்ட இரண்டு சிலைகள் திருட்டுப்போயுள்ளதாக ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 11 ஆம் திகதி நடைபெற்ற இந்த சிலைத்திருட்டுடன் தொடர்புடையவர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் தெரியவருகின்றது.

நேற்று யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக இவ்வாறான சிலைத்திருட்டுச் சம்பவங்கள் குறைந்திருந்த நிலையில் மீண்டும் இத்தகைய திருட்டு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (பா)

# நக்கீரன் முன்பள்ளி விளையாட்டு விழா

(வடமராட்சி)

அல்வாய் வடக்கு நக்கீரன் சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கிவரும் நக்கீரன் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நக்கீரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நக்கீரன் முன்பள்ளி பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் தலைவர் திருமதி நளினி பிரதீபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வடக்கு கால நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் எஸ்.சுபேந்திரா, சிறப்பு விருந்தினராக நக்கீரன் சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் இ.கணேசன் மற்றும் நக்கீரன் முன்பள்ளியின் முன்னை நாள் ஆசிரியர் திருமதி ஜேம்ஸ் இந்திரகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (116)

# பொலிஸாரின் ஏற்பாட்டில் நல்லூரில் வைரவர் திருவிழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோயிலின் வைரவர் திருவிழா இன்று முற்பகல் 10.00 மணிக்கு யாழ். பொலிஸாரினால் நடத்தப்படவுள்ளது.

ஏற்கனவே கடந்த மாதம் 24 ஆம் திகதி ஆரம்பமாகிய நல்லூர் திருவிழா நேற்று முன்தினம் நிறைவுபெற்றது.

இத்திருவிழா நிகழ்வுகளில் பெருமளவு பொலிஸார் பக்தர்களின் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கவனிப்பதற்கு ஈடுபடுத்தப்பட்டனர்.

இந்தத் திருவிழா நிறைவு பெற்றதனைத் தொடர்ந்து நல்லூர்க் கந்தனின் வைரவர் பெருமானுக்கு இன்று மடை வைத்து பூசை வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

இதற்கான ஒழுங்குகளை யாழ். பொலிஸார் மேற்கொண்டுள்ளதாக யாழ். பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார். (பா)

# நல்ல நூல்களைத் தெரிவுசெய்து பல்கலைக்கழகம் வெளியிடவேண்டும்

## நூல் வெளியீட்டு விழாவில் பேராசிரியர் மா.வேதநாதன்





(திருநெல்வேலி)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் எதிர்காலத்தில் நல்ல பெரும் நூல்களைத் தெரிவுசெய்து வெளியிட வேண்டும். முதுகலை மாணிப் பட்டத்துக்கு சைவ சித்தாந்தத்தைக் கற்கைநெறியாகக் கொண்டு வந்த பெருமை யாழ். பல்கலைக்கழகத்திற்கு உண்டு என்று தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் பேராசிரியர் மா.வேதநாதன்.

நேற்று முற்பகல் நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் சைவ சித்தாந்த ஆய்வு நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாபூஷணம் சைவப் புலவர் சு.செல்லததுரை தலைமையில் இடம் பெற்ற சைவப் புலவர் கு.றஜீபன் எழுதிய 'பெரியபுராண சூசனத்தில் சைவ சித்தாந்தம்' எனும் நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு வெளியீட்டுரை நிகழ்த்தும்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து உரையாற்றிய பேராசிரியர், சைவ சித்தாந்தக் கற்கைநெறியை முதுகலை மாணிப் பட்டத்துக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் இப்போது 3 ஆவது அணி மேற்கொள்கின்றது. பேராசிரியர்கள் கந்தசாமி, சத்தியசீலன் மற்றும் குமாரவடிவேல் காலத்தில் இக்கற்கைநெறி யாழ். பல்கலைக்கழகத்தில் தொடங்கி வைக்கப்பட்டது.

பெரியபுராண சூசனத்தின் தனிச்சிறப்பு அச்சூசனம் இரு பெரும் சித்தாந்த மேதைகளின் பங்களிப்பு என்பதேயாகும். நாவலர் பெருமான் பெரியபுராண நாயன்மார்களுக்குள் முதல் 23 பேருக்கு சூசனம் வரைந்த அளவில் சிவபதம் அடைந்தார்.

அவர் விட்டுச்சென்ற பணியை இலக்கியக் கலாநிதி பண்டித மணி ஏழாலை மு.கந்தையாவே எஞ்சிய 40 சிவனடியார்களின் வரலாற்றுக்கு சூசனம் வரைந்து முற்றுவித்தார். பாட்டனார் ஏழாலைப் ப்ண்டிதரின் வழிநின்று பெரியபுராண சூசனத்தில் சைவ சித்தாந்தம் எனும் அரிய நூலை சைவப் புலவர் கு.றஜீபன் எமக்குத் தந்துள்ளார் எனக் கூறினார்.

இவ்வெளியீட்டில் ஆசியுரையை பண்டிதர் அ.தங்கமயிலும், வாழ்த்துரையை கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரனும், ஆய்வுரையை பேராசிரியர் சு.குமாரவடிவேலும், ஏற்புரையை நாவலாசிரியர் கு.றஜீபனும் நிகழ்த்தினர்.

நூலின் முதற்பிரதியை லண்டன் கு.சுஜீபன் பேராசிரியர் மா.வேதநாதனிடமிருந்து பெற்றுக்கொண்டார். (137)

# முஸ்லிம் மக்களுக்கு ரமழான் உதவிகள்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொம்மை வெளியில் நேற்றைய தினம் மீள்குடியேறி வசிக்கும் முஸ்லிம் மக்களுக்கு ரமழான் உதவிகள் வழங்கப்பட்டன.

இவ் உதவிகளை ஐக்கிய இராச்சியத்திலுள்ள முஸ்லிம் அகதிகள் உதவியமைப்பினால் மேற்கொள்ளப்பட்டன.

சுமார் 250 வறிய மற்றும் விதவைகளுக்குமாக 800 ரூபா பணமும், 2 கிலோ அரிசியும் வழங்கப்பட்டன. இவை இலங்கைப் பிரதிநிதிகளான எம்.எஸ்.எம்.ரஹீம், ஏ.எம்.எம்.அலி ஆகியோரின் மேற்பார்வையில் நடைபெற்றன.

யாழ்ப்பாணம் ஜே/86 கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் எம்.எம்.மிஸ்னூன் யாழ். முஸ்லிம் மக்களுக்கு வழங்கினார். (105)

# பலசரக்கு கடையில் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் சிவசாந்தன் வீதியில் அமைந்துள்ள பலசரக்குக் கடை ஒன்றில் இருந்து 7000 ரூபா ரொக்கப் பணமும் 5 தங்கக் குண்டுகளும் களவாடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் மறுநாள் கணவனும் மனைவியும் கடையைத் திறந்து வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சமயம் மனைவி பின்புறமாக சோடாப் போத்தல் எடுப்பதற்காகச் சென்றுள்ளார். அந்த வேளை பின்பக்கக் கதவு திறந்திருப்பதனை அவதானித்து கடையின் இலாச்சியைப் பார்த்தசமயம் 7000 ரூபா ரொக்கப் பணமும் 5 தங்கக் குண்டுகளும் களவு போயிருப்பது தெரியவந்துள்ளது. (பா)

# வடக்கில் திருப்தியான தபால் சேவை தபால் மா அதிபர் புகழாரம்

(வேலணை)

மக்களினது சேவைகளில் தபால் திணைகளத்தின் சேவையும் முக்கியமான இடத்தினை வகித்துக் கொண்டிருக்கிறது. எனவே தபால் திணைக்களத்தின் சேவைகளில் ஈடுபட்டுள்ள அனைத்து ஊழியர்களும் ஒன்று சேர்ந்து ஒற்றுமையாக உழைத்தால் தபால் திணைக்களத்தின் சேவை அதிஉண்ணதமான இடத்தினை அடையுமென தபால் திணைக்களத்தின் தபால் மா அதிபர் ரெகான் அபயரத்தின தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் பிரதான தபால் காரியலயத்தில் இடம் பெற்ற தபால் திணைக்களத்தின் துரித தபால் சேவை பற்றிய அறிமுக விழாவில் பிரதம விருந தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகை யில்,

யாழ்ப்பாண தபால் நிலையத்தின் பிரதி அஞ்சல் அதிபர் நல்லதம்பி இரத்தின சிங்கம் அவர்களது பெரும் முயற்ச்சியால் யாழ்ப்பாணம் தபால் காரியாலயம் வெகு சிறப்பாக இயங்கி வருகின்றது. இலங்கையில் நஷ்டத்தில் இயங்கிவருகின்ற நிறுவனங்களில் தபால் திணைக்களமும் ஒன்று. ஆனால் தபால் திணைக்களம் மக்களுக்கான சிறப்பான சேவைகளை செய்து வருவதினால் இந்த நிறுவனம் நஷ்டத்தில் இயங்கியபோதும் கூட மக்களுக்கான சேவைகளை ஆற்றி வருவதினால் அந்த சேவையால் நஷ்டங்களை பார்க்காமல் தொடர்ந்தும் சேவைகளை மேற்கொண்டு வருகின்றது.

எனினும் எதிர்காலத்தில் புதிய புதிய திட்டங்களை உருவாக்கி அதன் மூலமான சேவைகளை மேற்கொள்வதினால் எதிர்காலத்தில் வருமாணங்களை அதிகரிக்கச் செய்து நஷ்டமடைந்து போய் கொண்டிருக்கும் தபால் திணைக்களத்தை நஷ்டத்தில் இருந்து மீட்டெடுக்க முடியும் என எதிர்பார்க்கின்றேன் என்றும் அவர் தெரிவித்தார். (05)


# தெல்லிப்பழை துர்க்கையம்மன் 2 ஆம் திருவிழா



**வேண்டும் வரம் வேண்டும்**

ஆயிரம் நாமங்கள் கூறி - தாயே
ஆருயிரில் உனை இருத்தித்
தொழுதேன்
தாலிப்பாக்கியம் முதல்தாரப்
பாக்கியமெலாம் - தந்தாய்
துர்க்காதேவி என தேடி
வருவோர்க்கு வேண்டும்
வரம்தாருமம்மா...!

பிரசாத் - கோண்டாவில்


# இலங்கை வங்கியினால் குழந்தைகளுக்கு முதலீடு

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் 73ஆம் ஆண்டு கொண்டாட்டத்தை முன்னிட்டு வரையரையில் பிறக்கும் குழந்தைகளின் தரவுகளை வங்கிக்கிளைகள் வைத்தியசாலைகள் ஊடாக விண்ணப்பங்களை கோரியுள்ளனர்.

இவ்வருடம் யூலை 31 ஆம் திகதி நள்ளிரவு தொடக்கம் ஓகஸ்ட் 31 ஆம் திகதி நள்ளிரவு வரையான ஒருமாத காலத்துக்குள் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைகளுக்கும் பெற்றோரினால் இலங்கை வங்கியில் கணக்கு ஆரம்பிக்கப்படும். நிலையில் வைப்பு தொகைக்கு சமமான தொகையை அவர்களது கணக்கின் வெகுமதியை வரவேற்கும் முகமாக குறிப்பாக ஆகக்கூடிய அன்பளிப்பாக ஒவ்வொரு குழந்தைக்கும் 5ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது. மேலும் இலங்கை வங்கியினால் சிறப்பு முதலீட்டு சேமிப்பு என்ற ஒரு கணக்கை அறிமுகம் செய்துள்ளது, அந்த கணக்கில் 1000 ரூபா வைப்பு தொகையாக செலுத்தபடல் வேண்டும் பின்பு மாதாந்த வைப்பு பணமாக 100 ரூபா வைப்பு செய்யவேண்டும். இந்த கணக்கினுடைய முடிவு காலம் மூன்று வருடமாகும்.

அத்துடன் வருடாந்த மேகாவாசி சீட்டிலுப்பின் திட்டத்தின் கீழ் இரண்டாவது காலாண்டு திட்டத்தில் பருத்தித்துறை கிளை சார்பாக 8 வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதில் முரளிதரன் மற்றும் திவ்வியநந்தம் ஆகியோர்களுக்கு 15 ஆயிரம் ரூபாவும், தியாகராசா சியாமலாதேவி, சரோஜினிதேவி, சந்தியாப்பிள்ளை, பாலநரேஸ், மரியசதுர்சன் ஆகியோர்களுக்கு 10 ஆயிரம் ரூபாவும் கணக்கு வைப்பில் இடப்பட்டுள்ளது.

மேலும் இலங்கை வங்கி வறுமைகோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு கடன் திட்டம், சுயதொழில் ஊக்குவிப்பு போன்றனவும், அடகு சேவை, சீட்டிழுப்பு போன்ற இதர சேவைகள் செய்து வருகின்றது என பருத்தித்துறை இலங்கை வங்கி கிளை முகாமையாளர் எஸ். தர்மராஜா தெரிவித்துள்ளார். (116)

## ஆன்மீக சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த உற்சவத்தை ஒட்டி சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் உற்சவ தினங்களில் ஆன்மீக சொற்பொழிவுகள் இடம்பெற்று வருகின்றன.

இச் சொற்பொழிவு வரிசையில் இன்று முற்பகல் 10.00 மணியளவில் ''உதித்தனன் உலகம் உய்ய'' என்னும் தலைப்பில் ஸ்ரான்லிக் கல்லூரி ஆசிரியர் காரை எம்.பி.அருளானந்தம் சொற்பொழிவாற்றுகிறார்.

## பாலபண்டிதர் பரீட்சை

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினரால் ஆண்டுதோறும் நடாத்தப்பட்டு வரும் சைவ சித்தாந்த பிரவேச பண்டிதர், பாலபண்டிதர், சித்தாந்தபண்டிதர் பரீட்சைகள் இவ்வாண்டு டிசம்பர் 10 ஆம் 11 ஆம் 12 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

இப்பரீட்சைக்குத் தோற்ற விரும்புவோர் இல 66, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள சைவ பரிபாலனசபை அலுவலகத்தில் அதற்கான விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று விண்ணப்பிக்கலாமென பரீட்சைச் செயலாளர் பொ.கமலநாதன் தெரிவித்துள்ளார். (10)


# திஷானி நகை மாளிகை

**அசல் 22 கரட் தங்க நகைகளை**
**விரும்பிய டிசைன்களில்**
**உத்தரவாதத்துடன் செய்து**
**பெற்றிட நாடுங்கள்**



இல.187, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9510
பக்ஸ் : 021 221 9511



# செல்வச்சந்நிதி முருகனுக்கு இன்று 3 ஆம் திருவிழா



## அடி பணிந்திடுவோம்

சந்நிதியான் திருத்தலத்தில்
எந்நாளும் திருநாள்தான்
அழகிய முருகனவன்
அற்புதக் கோலம் கண்டால்
தொல்வினைகள் எல்லாம்
தொலைந்தோடி போய் விடுமே
வந்தோர்கள் எல்லோரும் பசியாறி
அன்னதானக் கந்தனின்
அருளாசி பெற்றிடும்
அற்புதத் திருத்தலத்தில்
அடி பணிந்திடுவோம்

தி.துஷ்யந்தி
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.


# யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்தால் பயிற்சிநெறிக்கு விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தில் செயற்கை அவயவம் மற்றும் சார்புறுப்பு உற்பத்தி பயிற்சி நெறிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தகைமையுடைய பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி நிறுவனத்தில் செயற்கை அவயவம் மற்றும் சார்புறுப்பு உற்பத்தியில் பயிற்சி பெற்ற பெண் தொழில்நுட்பவியலாளர் பதவியில் வெற்றிடமொன்று இருப்பதினாலும் தற்போது ஸ்ரீலங்கா செயற்கை அவயவ உற்பத்திப் பயிற்சி கல்லூரியில் (SLSPO) முன்னுரிமை வழங்கி 3 வருடகால கற்கை நெறிக்கு 18 முதல் 30 வயதுக்குட்பட்ட மாற்றுவலுவுள்ள பெண்களிடமிருந்து விண்ணப்பங் கோர்ப்பட்டுள்ளது.

பயிற்சி நெறிக்குரிய தகைமைகளாக க.பொ.த.(சா.த) பரீட்சையில் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழி ஆகிய பாடங்களில் திறமைச்சித்தியுடன் இரு அமர்வுகளுக்கு மேற்படாது 6 பாடங்களில் சித்தி பெற்றிருப்பதோடு, க.பொ.த (உ.த) பரீட்சையில் ஒரே தடவையில் பௌதீகவியல் அல்லது உயிரியல் பாடங்களில் திறமைச் சித்தியுடன் 3 விஞ்ஞான பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

மேற்படி ஆலோசனைக்கு அமைவாக விண்ணப்பிக்க விரும்புவோர் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களை இல 5, பழைய பூங்கா வீதி, சுண்டிக்குளியில் உள்ள யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளலாம் என ஜெய்ப்பூர் நிறுவனப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.


அன்னதானக் கந்தா அருள் புரிந்திடுவாய்

# மக்கள் வங்கி

"ஜயஸ்ரீ" உடன் சேமித்து
மனதிலுள்ள பரிசுகளை
கைகளிலே பெற்றிடுங்கள்

நிலையான வைப்பு
சேமிப்பு வைப்பு
சிறுவர் வைப்பு
நடைமுறைக் கணக்கு
சேமிக்க இன்னும் பல கணக்குகள்

021 226 3299 மக்கள் வங்கி
வல்வெட்டித்துறை கிளை

*கண் பார்வையற்றவன் குருடன் அல்ல. தன் குற்றம் குறையை உணராமல் எவன் இருக்கிறானோ அவனே சரியான குருடன்.*
*- மகாத்மா காந்தி.*

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## பொய்யிலே பிறந்து போலியாய் வளர்ந்து...

சமீபத்தில் யாழ்ப்பாணப் பத்திரிகை ஒன்றில் வீதிவிபத்துக்கள் சம்பந்தமான ஆய்வுக்கட்டுரை ஒன்றைப் பார்க்க நேர்ந்தது. வீதிகளைப் புனரமைத்து நவீனப்படுத்தி வருவதை அபிவிருத்தி, மக்களுக்கு வசதி என்றெல்லாம் அரசாங்கம் சொல்லக் கூடாது; அது விபத்துகளுக்கும் உயிரிழப்புகளுக்கும் தான் காரணமாகியிருக்கிறது. வீதி அபிவிருத்தி என்று இந்த அரசாங்கம் செய்வது மக்களுக்குப் பாதகமான ஒரு நடவடிக்கையே என்று விலாவாரியாக விளக்கும் கட்டுரை.

வீதிவிபத்துகள் அதிகரித்து உயிர்ப்பலிகளுக்குக் காரணம் வீதிகள் அகலிக்கப்பட்டிருப்பதுதான் என்று அந்தக் கட்டுரை சொல்கிறது. வீதிகள் அகலமாகப் போடப்பட்டு வருவதால் அதில் செல்லும் வாகனங்கள் அருகருகாக முந்திச் செல்ல முனைவதாலேயே அதிக விபத்துகள் ஏற்படுவதாக அந்தக் கட்டுரையாளரின் ஆய்வில் கிடைத்த முடிவாக எழுதப்பட்டிருக்கிறது.

அதாவது ஒரு வாகனம் மட்டும் செல்லக்கூடியதாகவும் மெதுவாகவே பயணிக்கக் கூடியதாகவும் முன்பு போல வீதிகள் இருந்தால் முன்பு போல விபத்துகளும் குறைவாக இருக்கும் என்பதாக இருக்கிறது கட்டுரையாளரின் வாதம். “கப்பல்களை துறைமுகத்திலேயே நங்கூரமிட்டு வைத்திருந்தால் அவை பாதுகாப்பாகத்தான் இருக்கும்; ஆனால் அதற்காகவா கப்பல்கள் கட்டப்படுகின்றன?” என்று கேட்கும் ஆங்கிலப் பழமொழியைத்தான் அவருக்குச் சொல்ல வேண்டும்.

வீதிகள் காப்பெற் இடப்பட்டு வாகனங்கள் அதிவேகமாகச் செல்லும்படியாக வைத்திருப்பது விபத்துகளை அதிகரிக்கத்தான் என்கிற ரீதியில் போகிறது ஆய்வு. அரசாங்கம் தமிழ் மக்களுக்கு வீதிகளைப் போட்டுக் கொடுப்பது எப்படி நல்ல நோக்கத்திற்காக இருக்க முடியும்? என்ற உணர்ச்சிகரமான கேள்வியிலிருந்து பிறக்கின்றன இந்த ஆய்வுகளும் அதன்மூலமான குற்றச்சாட்டுகளும். ‘குற்றம் கண்டுபிடித்தே’ பேப்பர் விற்கும் பணிக்கு முக்கியம் என்னவென்றால், அபிவிருத்திகளிலும் நுணுகி ஆய்ந்து பாதகமான அம்சங்களைக் கண்டுபிடிக்கக் கூடிய திறமையாகும்.

வீதிகளை அகலித்து காப்பெற் இட்டு நவீனப்படுத்துவதால் விபத்துகளே அதிகரிக்கின்றன என்று குற்றம் கண்டு கூறுபவரின் தேவையும் ஆலோசனையும் என்னவாக இருக்கும்? மணல் வீதிகளைப் போட்டு மாட்டு வண்டில்களில் பயணம் செய்தால் விபத்துகள் எதுவும் இருக்காது; எனவே அதைத்தான் இங்கு செய்யப்பட வேண்டும் என்பதா?

சரி, வீதிகள் நவீனப்பட்டதால் வாகனங்களை வேகமாக ஓட்டுகிறார்கள்; வேகத்தால் விபத்துகள் வருகின்றன என்ற குற்றச்சாட்டைக் கேட்ட அரசாங்கமும் போக்குவரத்துக் காவல் துறையினரும் என்ன செய்ய வேண்டும்? வீதிகள்தோறும் நின்று கண்காணித்து வேகமாக வாகனம் ஓட்டிச் செல்பவர்களைத் தடுக்க வேண்டும். இதற்கு உடனேயே அடுத்த குற்றச்சாட்டையும் வீசுகிறார்கள். ‘போக்குவரத்து இடங்களிலெல்லாம் பொலிசார் நிற்கிறார்கள்; வாகனங்களை மறிக்கிறார்கள்; பணம் வசூலிக்கிறார்கள்; இந்த அரசாங்கம் இப்படியா தமிழ் மக்களைக் கொடுமைப்படுத்த வேண்டும்?

நமது ஊடகங்களும், உணர்ச்சி வீரவசன அரசியல்வாதிகளும் தர்க்கரீதியான சிந்தனையையும் யதார்த்தத்தை அறிவதையும் கைவிட்டுப் பல காலமாகிவிட்டது. அல்லது ஆதிநாட்களிலிருந்தே இவர்கள் பொய்யிலும் போலியிலும்தான் திளைத்து வருகிறார்களா தெரியவில்லை.

அரசாங்கத்தை எதிர்த்து எதைச் சொன்னாலும் கேட்டுப் புளகமடைந்துவிட்டு, வீட்டுக்குப்போய் அவரவர் வாழ்வுக்கஷ்டம் தொடர்வதை நினைத்துப் புலம்புபவர்களாகவே பெரும்பாலான மக்களும் இருந்துவருகிறார்கள். யாரை நோவது?

- ஆசிரியர்

# வடக்கு ஒபாமாவுக்கு கிழக்கு சோனியாவுக்கா?

## போர்க்கொடி தூக்கும் தேசியவாதிகள்

(கொழும்பு)

வடக்கு ஒபாமாவுக்கும், கிழக்கு சோனியாவுக்கும் உரித்தான பிரதேசங்கள் அல்ல என்பதை அந்நிய சக்திகளுக்கு மீண்டும் ஒருமுறை தெளிவாக கூறிவைக்க விரும்புகின்றோம் என எச்சரிக்கை விடுத்துள்ள தேசிய அமைப்புகளின் ஒன்றியம், நாட்டின் இறையாண்மையைக் கூறுபோடுவதற்கு இடமளிக்கப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளது.

எவ்வாறான அழுத்தங்கள் வந்தாலும் அரசு, நாட்டுக்குப் பொருந்தாததை ஒருபோதும் செய்யக்கூடாது என தேசிய அமைப்புகளின் ஒன்றியத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

“டெசோ” என்ற பிரிவினைவாத அமைப்பால் நிறைவேற்றப்பட்ட இலங்கை குறித்தான தீர்மானங்களை ஐ.நா.வுக்கு அனுப்பிவைப்பதற்கு தி.மு.க. தீர்மானித்துள்ளது என அறிய முடிகின்றது.

இலங்கையை ஆள்வது ஐ.நா.வோ அல்லது அமெரிக்காவோ அல்ல என்பதை கருணாநிதி போன்ற அரசியல் பச்சோந்திகள் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

எமது நாட்டின் உள் விவகாரங்களில் தலையிடும் அந்நிய சக்திகளுக்கு வடக்கு ஒபாமாவுக்கும், கிழக்கு சோனியாவுக்கும் உரித்தான பிரதேசம் அல்ல என்பதைத் தெளிவாகக் கூறிவைக்க விரும்புகின்றோம் என அமரசேகர கூறியுள்ளார்.

# கருத்தரங்கும் பரீட்சையும்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ அற்புதன் நர்தின விநாயகர் சனசமூக நிலையமும், குமரர் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் அமரர் க.வே.சரவணமுத்து ஞாபகார்த்தமாக புலமைப்பரிசில் வழிகாட்டல் கருத்தரங்கும், பரீட்சையும் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே மாணவர்கள் இதில் கலந்து கொண்டு பயனடையுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

# தொடரும் தேர்தல் வன்முறை இதுவரை 28 முறைப்பாடுகள்

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தலுடன் தொடர்புடைய 28 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.இவற்றில் எட்டு முறைப்பாடுகள் தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பிலானவை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித்ரோஹண தெரிவித்துள்ளார்.

இதனைத் தவிர சிறியளவிலான தாக்குதல் மற்றும் அச்சுறுத்திய சம்பவங்கள் தொடர்பில் 20 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் தேர்தலை முன்னிட்டு மேலும் 20 ஆயிரம் உத்தியோகத்தர்களை கடமையில் இணைத்துக்கொள்ள எதிர்பார்த்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

அதிக தேர்தல் முறைகேடுகள் பதிவாகும் மற்றும் அச்சுறுத்திய சம்பவங்கள் இடம்பெற்ற பகுதிகளில் அதிகளவான பொலிஸார் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தேர்தல் தொடர்பான வன்முறைகளில் ஈடுபடும் நபர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

அத்துடன் தேர்தல் இடம்பெறவுள்ள பகுதிகளில் நடமாடும் சேவைகள் மற்றும் ரோந்து நடவடிக்கைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்படுவதாக அவர் மேலும் கூறினார்.

# சிறுநீரக நோயைத் தடுக்க சுத்தமான குடிநீர் விநியோகம்

## - ஜனாதிபதி அதிரடி உத்தரவு

(கொழும்பு)

சிறுநீரக நோய் அதிகளவில் பரவும் பகுதிகளுக்கு சுத்தமான நீரை விநியோகிப்பதற்கான விசேட திட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளதாக நீர் வழங்கல், வடிகாலமைப்புச்சபை குறிப்பிடுகின்றது.

வன்னி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி வழங்கிய ஆலோசனைக்கமைய இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக சபையின் தலைவர் கூறினார்.

வவுனியா, அநுராதபுரம், அம்பாந்தோட்டை மாவட்டங்களிலுள்ள கிராமங்களில் இந்தத் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சுத்தமான நீரை விநியோகிப்பது தொடர்பிலான நடவடிக்கைகளை நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை தாமதமின்றி மேற்கொள்ளவுள்ளதாக சபையின் தலைவர் சுட்டிக்காட்டினார்.

இதனூடாகக் குறித்த பகுதிகளில் வாழும் மக்களுக்கு சுத்தமான குடிநீர் மற்றும் ஏனைய தேவைகளுக்கான நீரை வழங்க முடியுமென தெரிவிக்கப்படுகின்றது.

# மாநகரசபை ஏற்பாட்டில் விசேட இப்தார் நிகழ்வு

யாழ்.மாநகரசபை கலாசார பிரிவின் ஏற்பாட்டில் கடந்த திங்கட்கிழமை மானிப்பாய் வீதியிலுள்ள பெரிய முஹிதின் ஜும்மா பள்ளியில் விசேட இப்தார் நிகழ்வு இடம்பெற்றது.

மௌலவி ரொசனின் வரவேற்புரை நிகழ்த்தினார். இந்நிகழ்வில் யாழ்.மாநகர முதல்வர் தலைமையுரையாற்றுகையில்,

எமது கலாசாரப் பிரிவு பொங்கல் விழா, கிறிஸ்மஸ் விழாக்களை கொண்டாடியது போல் இவ் வருடம் இப்தார் நிகழ்வை ஏற்படுத்தி சமூகங்களுக்கிடையில் சுமுகமான புரிந்துணர்வை ஏற்படுத்த பங்களித்து வருகிறது. முஸ்லிம் மக்களுடன் தமிழ் மக்கள் நீண்ட காலமாக ஒற்றுமையுடன் வாழ்ந்து வருகின்றனர் என்றார்.

மேலும் கடந்த காலங்களில் தமிழ் மக்கள் பட்ட துயரம் போன்று தற்போது சிறுபான்மையாக எம்மத்தியில் வாழும் முஸ்லிம் மக்களும் பல்வேறு இன்னல்களை சந்திக்கிறார்கள். தமிழ் அதிகாரிகள் இவர்கள் விடயத்தில் பாகுபாடு காட்டாமல் அவர் களுக்கு உதவுதல் வேண்டும் என்று மாநகரசபை ஆணையாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரையாற்றும் போது முஸ்லிம், தமிழ் உறவு பற்றியும் புனித ரமழான் மாத நோன்பின் மகிமை பற்றியும் எடுத்துரைத்தார்.

நோன்பு திறக்கும் நேரமாகிய மாலை 6.33 மணிக்கு பள்ளிவாசலில் அதான் ஒலித்த பின்னர் அமைச்சர், மாநகர முதல்வர், இந்திய உயர்ஸ்தானிகராலய யாழ்.அதிகாரி, ஆணையாளர், கலாசார பிரிவினர், மாநகர சபை உறுப்பினர்கள் அனைவரும் இப்தார் உணவை நோன்பு நோற்ற முஸ்லிம் சகோதரர்களுடன் சேர்ந்து நோன்பை திறந்து இன ஒற்றுமைக்கான கலாசார விழுமியங்களை எடுத்துக்காட்டினர்.

மௌலவி ரொசனின் மார்க்க உபதேசமும் (பயான்) விசேடமாக இடம்பெற்றன. இந்நிகழ்விற்கான ஏற்பாடுகளை மாநகரசபை உறுப்பினர் மௌலவி சுபியான் மேற்கொண்டார்.

இறுதியாக மாநகரசபை உறுப்பினர் சரபுல் அனாமின் நன்றியுரையும் இடம்பெற்றன. (105)



**அரசியலில் வெகுஜன விருப்புவாதம் என்று ஒரு பதப்பிரயோகம் உண்டு. மக்கள் எதை விரும்புகின்றார்களோ அல்லது எதையிட்டு அதிகம் உணர்ச்சிவசப்படக் கூடியவர்களாக உள்ளார்களோ அதைப் பற்றி அவர்களுக்குத் திருப்தியளிக்கும் வகையில் (யதார்த்தத்துக்கு முரணாகவும்) பேசி அவர்களின் ஆதரவை/வாக்குகளைப் பெறுவதையே வெகுஜன விருப்புவாத செயற்பாடு என்பர்.**

# தீர்வு எது என்று தெரியாமல் தீர்வுக்கான போராட்டம்

**- சங்கர சிவன்**

எல்லாத் தேர்தல்களையும் போலவே கிழக்கு மாகாண சபைத் தேர்தலிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களைத் தவறாக வழிநடத்தும் பிரசாரத்தைக் கச்சிதமாக மேற்கொள்கின்றது. பாதிப்புக்கு உள்ளாகியிருக்கும் மக்களுக்குத் தலைமை தாங்குபவர்கள் அம்மக்களின் பிரதான பிரச்சினைகளுக்கான தீர்வையும், அதை அடையும் வழிமுறைகளையும் தெளிவாக மக்களுக்கு எடுத்துக் கூறக்கடமைப்பட்டுள்ளனர். பிரதானமாகத் தேர்தல் காலங்களில் இக்கடப்பாடு முக்கிய மானது. மக்களின் விருப்பம் யதார்த்தத்துக்கு அமைவானதாக இல்லாமலிருக்கலாம். அதை மக்களுக்குத் தெளிவு படுத்துவதுதான் உண்மையான தலைமைப் பண்பு. ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்பிரசாரம் இத்தலைமைப் பண்புகளுக்கு உட்பட்டதாக இல்லை. வாக்குகளுக்காக எதையும் பேசலாம் என்ற வகையில் இவர்களின் பிரசாரம் இருக்கின்றது.

அரசியலில் வெகுஜன விருப்புவாதம் என்று ஒரு பதப்பிரயோகம் உண்டு. மக்கள் எதை விரும்புகின்றார்களோ அல்லது எதையிட்டு அதிகம் உணர்ச்சிவசப்படக் கூடியவர்களாக உள்ளார்களோ அதைப் பற்றி அவர்களுக்குத் திருப்தியளிக்கும் வகையில் (யதார்த்தத்துக்கு முரணாகவும்) பேசி அவர்களின் ஆதரவை/வாக்குகளைப் பெறுவதையே வெகுஜன விருப்புவாத செயற்பாடு என்பர். கிழக்கு மாகாண சபைத் தேர்தல் களத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரசாரம் வெகுஜன விருப்புவாத அடிப்படையிலும் பிழையான நம்பிக்கைகளைக் கொடுத்து மக்களைத் தவறாக வழிநடத்துவதாகவும் உள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களின் இணைப்பு உச்சி நீதிமன்றத்தினால் இரத்துச் செய்யப்படும் நிலை ஏற்பட்டதற்குத் தமிழ்த் தலைவர்களும் சம அளவில் பொறுப்பேற்க வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியினதும் புலிகளினதும் கூட்டுச் சதியினால் வடக்கு -கிழக்கு மாகாண சபை செயற்பட முடியாமற்போன தன் பின்னர் அந்த மாகாண சபையைச் செயற்படுத்துவதற்கு இன்று தேசியம் பேசும் எந்தத் தலைவரும் முயற்சி மேற்கொள்ளவில்லை. பிற்காலத்தில் அரசாங்க மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளுக்கு கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்ததால் அம் முயற்சிகள் கைவிடப்பட்டன. மாகாண சபையைத் தமிழ்த் தலைவர்கள் நிராகரிக்கையில் மாகாணங்களின் இணைப்பு எதற்காக என்று கடுங்கோட்பாட்டாளர்கள் கேள்வி எழுப்புவதற்கு இத் தலைவர்கள் இடமளித்தார்கள்.

வடக்கு-கிழக்கு மாகாண சபை தொடர்ந்து இயங்கியிருந்தால் இணைப்பு நிரந்தரமாகுவதற்குச் சாதகமான சூழ்நிலை உருவாகியிருக்கவும் முடியும். இரண்டு மாகாணங்களையும் இணைப்பது இன்றைய நிலையில் சாத்தியமில்லை. படிப்படியான நடைமுறைக்கூடாக முழுமையான அரசியல் தீர்வை அணுகிச் செல்லும் கட்டத்தில் அது சாத்தியமாகலாம். வடக்கு-கிழக்கு மாகணங்களை இணைப்பதற்காகத் தங்களுக்கு வாக்களிக்கும் படி கூட்டமைப்புத் தலைவர்கள் பிரசாரம் செய்கின்றார்கள். கூட்டமைப்பு வெற்றி பெற்றால் இரண்டு மாகாணங்களையும் இணைக்க முடியும் என்ற போலியான நம்பிக்கையை மக்களிடம் தோற்றுவிக்கின்றார்கள். வெகுஜன விருப்புவாதப் பிரசாரத்துக்கு இது ஒரு உதாரணம்.

எவ்வளவு தான் முயன்றாலும் மாகாண சபை நிர்வாகத்தைத் தங்களால் கைப்பற்ற முடியாது என்பதைக் கூட்டமைப்புத் தலைவர்கள் இப்போது விளங்கிக் கொண்டுள்ளனர். அதனால், வேறு கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து மாகாண சபை நிர்வாகத்தை ஏற்கப்போகின்றார்களாம். இந்த முடிவு கூட்டமைப்பின் போலித் தன்மையை வெளிப்படுத்துகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து மாகாண நிர்வாகத்தை அமைக்கப்போவதாக சம்பந்தன் ஒரு நாள் சொல்கிறார். முஸ்லிம் காங்கிரசுடன் கூட்டுச் சேர்ந்து மாகாண சபையைத் கைப்பற்றப் போவதாக அடுத்த நாள் சொல்கிறார். தமிழ் மக்களின் உரிமைகளுக்காகப் போராடப் போவதாகக் கூறிக்கொண்டு தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை எந்தக் காலத்திலும் அங்கீகரிக்காததும் கறுப்பு ஜூலை இன சங்காரத்தை அரங்கேற்றியதுமான ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டுச் சேர்வதும் அரசாங்கத்தைக் கடுமையாக விமர்சித்துக் கொண்டு அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியுடன் கூட்டுச் சேர முயல்வதும் எந்த வகை அரசியல் என்று விளங்கவில்லை.

**வடக்கு-கிழக்கு மாகாண சபை செயற்பட முடியாமற் போனதன் பின்னர் அந்த மாகாண சபையைச் செயற் படுத்து வதற்கு இன்று தேசியம் பேசும் எந்தத் தலை வரும் முயற்சி மேற்கொள்ளவில்லை. மாகாண சபையைத் தமிழ்த் தலைவர்கள் நிராகரிக்கையில் மாகாணங்களின் இணைப்பு எதற்காக என்று கடுங்கோட் பாட்டாளர்கள் கேள்வி எழுப்புவதற்கு இத்தலைவர்கள் இடமளித்தார்கள்.**

இக்கட்டுரையின் ஆரம்பத்தில் கூறியதுபோல, பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தலைமை தாங்குபவர்கள் அம்மக்களின் பிரதான பிரச்சினைக்கான தீர்வையும்அதை அடைவதற்கான வழிமுறைகளையும் மக்கள் விளங்கிக் கொள்ளும் வகையில் எடுத்துக்கூற வேண்டும். இனப் பிரச்சினை தான் தமிழ் மக்களின் பிரதான பிரச்சினை. இப்பிரச்சினையின் தீர்வு பற்றிக் கூட்டமைப்பினர் தொடர்ச்சியாகப் பேசுகின்ற போதிலும் அந்தத் தீர்வு என்ன என்பது பற்றியோ அதை அடையும் வழிமுறைகள் பற்றியோ எந்தச் சந்தர்ப் பத்திலும் கூறவில்லை. தங்களால் தெரிவு செய்யப்பட்ட தலைமை தங்கள் பிரச்சினைக்கு முன்வைக்கும் தீர்வு என்ன என்பதைத் தெரிந்துகொள்ளும் உரிமை மக்களுக்கு உண்டு. தீர்வு எது என்பதை மக்களுக்குத் தெரியப்படுத்தாத வரை கூட்டமைப்பு அம்மக்களின் அடிப்படை உரிமையை மறுக்கின்றது என்பதே அர்த்தம்.

சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்று கூறுகின்றார்கள். எந்தத் தீர்வைச் சர்வதேச சமூகம் பெற்றுத் தரும் என்ற கேள்விக்கு இவர்களிடம் பதில் இல்லை. தமிழ் அரசியலில் நீண்ட கால அனுபவம் உள்ளவர்களான இத் தலைவர்கள் தமிழ் மக்களின் பிரதான பிரச்சினைக்கான தீர்வு எது என்று சொல்ல முடியாமல் தடுமாறும் நிலைக்கு வந்திருப்பதையிட்டுஅவர்கள் வெட்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்று கூட்டமைப்பு கூறுவது நடைமுறைச் சாத்தியமானதா எனப் பார்ப்போம்.

இலங்கையில் தமிழ் மக்களுக்குத் தனிநாடு அமைத்துக் கொடுக்கச் சர்வதேச சமூகம் ஒரு போதும் முன்வரப் போவதில்லை. இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஐக்கிய இலங்கைக்குள் அரசியல் தீர்வொன்றை நடைமுறைப்படுத்தச் சர்வதேச சமூகம் விரும்பினாலும் அதை நேரடியாகச் செய்ய முடியாது. சில பிரதான அம்சங்களை உள்ளடக்கிய தீர்வொன்றை நடைமுறைக்குக் கொண்டு வருமாறு இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுப்பதுதான் சர்வதேச சமூகம் மேற்கொள்ளக் கூடிய ஆகக் கூடுதலான செயற்பாடு. இலங்கை அரசாங்கம் அந்த அழுத்தத்துக்கு விட்டுக்கொடுத்துச் செயற்படுகின்றது என வைத்துக்கொள்வோம்.சர்வதேச சமூகம் சிபார்சு செய்த தீர்வு அரசியலமைப்புத் திருத்தத்துக்கூடாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டியதாயின் அரசாங்கம் அத்திருத்தத்தை மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றும். பதின்மூன்றாவது திருத்தத்துக்கு மேலான அரசியல் தீர்வு அரசியலமைப்புத் திருத்தத்துக்கூடாகவே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. சர்வசன வாக்கெடுப்பில் மக்களின் அங்கீகாரத்தைப்பெற்ற பின்னரே மேற்படி அரசியலமைப்புத் திருத்தம் நடைமுறைக்கு வர முடியும்.

திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களிக்கும் படி அரசாங்கம் மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கலாம். ஆனால், மக்களின் தீர்ப்பு எவ்வாறு இருக்கும் என்பது பற்றி எதிர்வுகூற முடியாது. சர்வசன வாக்கெடுப்பில் மக்கள் திருத்தத்தை நிராகரித்தால் சர்வதேச சமூகம் மக்களின் தீர்ப்பை ஏற்பதைத் தவிர வேறு எதுவும் செய்ய முடியாது.

அரசியல் தீர்வின் இறுதித் தடைக் கட்டம் வரை மாத்திரம் சர்வதேச சமூகத்தினால் பங்களிப்புச் செய்ய முடியும். இறுதித் தடையைத் தாண்டுவதற்குச் சிங்கள மக்களின் ஆதரவு அவசியம். சர்வதேச சமூகம் பற்றியே பேசிப் பேசிக் காலத்தை விரயமாக்காமல் நடைமுறைச் சாத்தியமான தீர்வுத் திட்டமொன்றைத் தயாரித்து முற்போக்கு சக்திகளுடன் இணைந்து சிங்கள மக்களின் ஆதரவை வென்றெடுப்பதற்கு முயற்சிப்பது தான் அரசியல் தீர்வை அடைவதற்கான வழி.





# முஸ்லிம் அடிப்படை வாதம் கிழக்கில் வேர் விடுகின்றது

## பௌத்த தேரர் எச்சரிக்கை

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில், அமைச்சர் ரவூப ஹக்கீம், முன்னாள் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் ஆசாத் சாலி ஆகிய அரசியல்வாதிகள் இனவாதத்தையும்; மத வாதத்தையும் பயன் படுத்தி, வெளியிட்டு வரும கருத்துக்களை உடனடியர்க் நிறுத்த வேண்டும் என பொதுபல சேனா அமைப்பின் தலைவர் கிரம விமலஜோதி தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் அவர் இதனை குறிப்பிட்டுள் ளார்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் பல தரப்பினர், இனவாதத்தையும், மத வாதத்தையும் தூண்டி விட்டு, வாக்குகளை பெற முயற்சித்து வரும் விதத்தை காணமுடிகிறது. முக்கிய மாக நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம், ஆசாத் சாலி போன்ற அரசியல்வாதிகள் முஸ்லிம் அடிப்படை வாதத்தை மாகாணத்திற்கு பரப்பி வருகின்றனர் இவற்றை அவர்கள் உடனடியாக நிறுத்த வேண்டும். 30 வருட போரின் பின்னர், நாடடில் இனவாதம் மற்றும் மத வாதம் ஏற்படும் விதத்தில் கருத்துக்களை வெளியிடக்கூடாது.

இவை குறித்து அரசாங்கமோ, அதிகாரிகளே தேடி பார்ப்பதில்லை. அரசாங்கம் இதனை விட பொறுப்பான வகையில் இவை குறித்து தேடி பார்க்க வேண்டும் எனவும் விமலஜோதி தேரர் கூறியுள்ளார்.

அதேவேளை இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அமைப்பின் செயலாளர் கலகொட ஹத்தே ஞானசார தேரர், கிழக்கு மாகாணத்தில் தற்போது முஸ்லிம் அடிப் படைவாதத்தின் நிழல்கள் அச்சுறுத்த ஆரம்பித் துள்ளன. மாகாண தேர் தலுடன் இது வெளிப்பட ஆரம்பித்துள்ளது என தெரிவித்துள்ளார்.

ரவூப் ஹக்கீம், ஆசாத் சாலி ஆகியோர் இன வாதத்தை தூண்டும் வகையில் செயற்பட்டு வருகின்றனர். இதனை பொதுபல சேனா வன்மை யாக கண்டிக்கின்றது. அதிகம் துள்ள வேண்டாம் என நாம் ஆசாத் சாலியை கேட்டுக்கொள்கிறோம். அரசியல் செய்வதற்கு முன் னர், அவர் நாட்டின் வரலாறை படிக்க வேண்டும். நாட்டின் பௌத்த வரலாற்றை பற்றி கூற அவர் யார்? ஊராபொ, அனுராத புரம், தம்புள்ள குறித்து விவாதிக்க வருமாறு ஆசாத் சாலிக்கு சவால் விடுகின்றோம். இலங்கையில் முடியாவிட்டால், மத்திய கிழக்கில் கூட விவாதத்தை நடத்தலாம். கிழக்கு மாகாணத்தில் பௌத்த உரிமைகள் உள்ளன. கிழக்கில் உள்ள பௌத்த விகாரைகளை கண்டுப்பிடித்து, சிங்களவர்களின் தாய் மண்ணை எவ்வாறு கண்டு பிடித்தோம். இவற்றை நாம் பொறுத்து கொண்டிருககும் போதுதான் அவரகள் கூப்பாடு போடுகின்றனர்.

பௌத்தர்களை மேலும் காயப்படுத்த வேண்டாம் என இவர்களை கேட்டுக் கொள்கிறோம். இந்த சகல சக்திகளுக்கும் எதிராகவே பொதுபல சேனா எனற அமைப்பு தேவைப்படுகிறது. அதனை நாம் படிப்படியாக கட்டியெழுப்பி வருகிறோம் என கலகொடஹத்தே ஞான சார தேரர் தெரிவித் துள்ளார்.

# ஆர்ப்பாட்டத்தில் குதித்தனர் மருத்துவ மாணவர்கள்



வைத்தியர் லலந்த ரணசிங்கவின் வீட்டின் மீது மேற் கொள்ளப்பட்ட கைக்குண்டு தாக்குதலை கண்டித்து வைத்திய பீட ம்ாணவர்களின் ஒரு குழுவினர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு முன்னால் நேற்றுமுன் தினம் வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மாலபே தனியார் மருத்துவ கல்லூரி அமைவதற்கு குறித்த வைத்தியர் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் காணி பகிர்ந்தளிப்பு சன்னார் கிராம மக்களுக்கு விமோசனம்



(கொழும்பு)

மன்னார் மாவட்டம் சன்னார் கிராம மக்களது தொடர் போராட்டம் முற்றுப பெற்றுள்ளது. நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றினில் மாந்தை மேற்கு பிரதேச செயலர் ஒவ்வொரு குடும்பத்திற்கு மான அரை ஏக்கர் காணியினை தமிழ் குடும்பங்களுக்கு பகிர்ந்தளித்ததுடன் அதற்கான பெமிட் துண்டுகளையும் வழங்கியிருந்தார். சுமார் 142 குடும்பங்களுக்கான பெமிட் அனுமதி பத்திரமே வழங்கப்பட்டுள்ளது.

மிகவும் வறிய பின் தங்கிய நிலையினில் வாழ்ந்து வரும் இம் மக்களுக்கு மாற்றிடத்தில் வீடு மலசலகூட மென பல ஆசை வார்த்தைகள் அரசால் கூறப்பட்டபோதும் அவறறை பொருட்படுத்தாமல் தமது நிலம் தமக்கு வேண்டுமென இப் பகுதி மக்கள் கடைசி வரை போராடியே வந்திருந்தனர். அத்தகைய சூழலில் அவர்களது போராட்டத்திற்கு அரசு இறங்கி வந்து அவர்களது காணியை அவர்களிடமே மீளக் கையளித்துள்ளது.

குறித்த காணி விவகாரமே மன்னார் ஆயருக்கும் அமைச்சர் றிசாத் பதியூதீனுக்கும் இடையே யான முறுகல் நிலைக்கும் வித்திட்டிருந்தது. பரஸ்பரம் இரு தரப்புகளும் முட்டி மோதும் நிலையை அடைநதிருந்ததும் அனைவரும் அறிந்ததே.

# தேர்தல்கால விதிமுறைகள் நடத்தைக்கோவை வெளியீடு

(கொழும்பு)

அரசியல் கட்சிகள் மற்றும் ஊடகங்களுக்கென இம்மாதம் வெளியிடப்பட்ட நடத்தைக் கோவை காரணமாக ஏற்பட்ட பிரதிபலிப்பு மிகவும் குறைவாக இருந்ததாக தேர்தல்கள் திணைக்களம் கூறியுள்ளது.

தேர்தல் கண்காணிப்பாளர்களும் ஜே.வி.பியும் மட்டுமே நடத்தைக் கோவை கிடைத்தமை பற்றி அறிவித்துள்ளன.

ஆயினும் இந்த நடத்தைக்கோவை வெளியிடப்பட்ட பின் குறிப்பிட்ட சில வேட்பாளர்களின் மனப்பாங்கில் மாற்றம் ஏற்பட்டதை அவதானிக்க முடிகின்றது என தேர்தல்கள் ஆணையாளர் கூறியுள்ளார்.

இதேவேளை, தேர்தல் கண்காணிப பாளர்களுக்கென தேர்தல் திணைக்களம் வெளியிட்ட நடத்தைக் கோவை குறித்து கருத்து தெரிவித்த "பவ்ரல்" அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் றோகன ஹெட்டியாராச்சி, "தேர்தல்கள் திணைக்களம் வெளியிட்ட கோவை போன்று ஏற்கெனவே எம்மிடம் ஒரு கோவை இருந்தது. எனவே நாம் மாற்ற வேண்டிய தேவை இல்லை" என கூறினார்.

# வளம்கொழிக்கும் அரச காணிகள் அமெரிக்க கம்பனிக்கு விநியோகம்



## அரசு மீது சோமவன்ச சீற்றம்

(கொழும்பு)

அமெரிக்காவின் சி.ஜ.சி எனப்படும் நிறுவனத்திற்கு வாழைத்தோட்ட செய்கைக்காக 5000 மற்றும் 10,000 ஏக்கர் காணிகளை வழங்கியுள்ளது.

இலங்கையிலுள்ள காணிகள் அமெரிக்காவுக்கு அரசாங்கத்தினால் தாரை வார்த்துக் கொடுக்கப்பட்டுள்ளதுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபகஷவின் சகோதரர்களும், அமைச்சர் டளஸ் அழகப்பெருமவும் அமெரிக்காவின் பிரஜாவுரிமையையும் பெற்றுள்ளனர் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிலுளள பாலமுனை பிரதேசத்தில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

இந்நாட்டிலுள்ள அனைத்து மக்களின் பிரச்சினையாக காணிப்பிரச்சினை உள்ளது. கிழக்கு மாகாணத்திலும் கூட தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் காணிப்பிரச்சினையை எதிர் நோக்கி வருகின்றனர்.

இந்த நிலையில்தான் இந்த அரசாங்கம் வெளிநாடுகளுக்கு காணிகளை வழங்கியுள்ளது. அமெரிக்காவின் சி.ஜ.சி எனப்படும் நிறுவனத்திற்கு வாழைத் தோட்ட செய்கைக்காக 5000 மற்றும் 10,000 ஏக்கர் காணிகளை வழங்கியுள்ளது.

இந்தக் காணிகளில் செய்யப்படும் வாழைப்பங்களை கூட இந்த நாட்டு மகளால் சாப்பிடமுடியவில்லை. அதையும் கூட வெளிநாடுகளுக்கு அனுப்புகின்றனர்.

இதேபோன்று பல காணிகள் அமெரிக்காவுக்கு இந்த அரசாங்கத்தினால் தாரை வார்த்து கொடுக்கப் பட்டுள்ளன.

மேலும் ஜனாதிபதி யுத்த வெற்றியை தனது தனிப்பட்ட சொந்த வெற்றியாக காட்டி வருகின்றார்.

யுத்த வெற்றியை ஜனாதிபதி தனது குடும்பத்திற்கும் தனது சுற்றுப்புறத்திலுள்ளவர்களுக்கும் பயன்படுத்தி வருகின்றார். இந்த நாட்டிலுள்ள முப்படைகளும் மக்களும் செய்த தியாகம் தான் இந்த யுத்த வெற்றிக்கு காரணமாகும்.

இந்த நாட்டிலுள்ள அனைத்து மக்களும் வரிப் பணம் செலுத்துகின்றனர் என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். இந்த நாட்டில் ஒரு புறம் பொருளாதாரப் பிரச்சினை மற்றொருபுறம் இளைஞர் யுவதிகளின் பிரச்சினைகளாகும். இளைஞர்கள் இன்று போதைப்பொருட்களுக்கு அடிமையாகி சமூகச் சீரழிவுக்குள் தள்ளப்பட்டுள்ளனர். யுவதிகள் பாலியல் துஷபிரயோகம் செய்யப்படுவதும் இடம்பெற்று வருகின்றன.

இன்று நீதிமன்றத்திற்கு கற்கள் வீசப்படுகின்றன. நீதித்துறை கூட மலினப்படுத்தபபடும் அளவுக்கு இந்த நாட்டு அரசாங்கம் செயற்படுகின்றது.

இதனால் சட்டத்தரணிகளும் வீதிகளில் இறங்கி போராடுகின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. பொலிஸாருக்கு கூட அரசியல் தலையீடுகள் இன்றி சுதந்திரமாக செயற்படமுடியாத நிலைமை உள்ளது.

இன்று இந்த நாட்டிலுள்ள புத்தி ஜீவிகள் விவசாயிகள், மின்சார சபை ஊழியர்கள், பல்கலைக் கழக ஊழியர்கள், அதன் பேராசிரியர்கள், சுகாதாரத் துறையினர் அனைவருமே வீதிகளில் இறங்கி இந்த அரசாங்கத்திற்கு எதிராக போராடுகின்ற ஒரு நிலையை பார்க்கின்றோம என அவர் மேலும் தெரிவித்தார்.

இதன்போது, மக்கள் விடுதலை முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட தலைமை வேட்பாளர் மோகன் மற்றும் வேட்பாளர்களான ஏ.றவூப், எம்.அஸ்மி உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

## கூழ்முட்டை வீச்சு



(கொழும்பு)

தம்புல்லையில் இடம் பெற்ற ஒன்றிணைந்த எதிர்கட்சியின் கூட்டம் ஒன்றில் கலந்துக் கொண்ட புதிய சமத்துவக் கட்சியின் தலைவர் விக்ரமபாகு கருணாரட்ண மீது முட்டைத் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இந்த நிகழ்விற்கு பின்னர் எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவும் வந்திருந்தார்.

இந்த தாக்குதல் குறித்து தாம அறிந்திருக்கவில்லை எனவும், தமக்கு எதிரான சிலர் இந்த தாக்குதலை மேற்கொண்டதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை டெசோ மாநாட்டில் கலந்துக் கொண்டமை தமது சுய உரிமை எனவும் விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்தார்.

# பின்தங்கிய பிரதேச மக்களின் தேவைகள் நிவர்த்தி செய்யப்படும்

(யாழ்ப்பாணம்)

பின்தங்கிய பிரதேச மக்களின் மேம்பாட்டுக்காக நாம் அரசியலுக்கு அப்பால் சென்று மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்ய தயாராகவுள்ளோம் என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.



கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி கிருஸ்ணபுரத்தில் பாலத்திற்கு அடிக்கல் நாட்டி வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் துரித மீள்ச்சித் திட்டத்தின் மூலம் சுமார் 44 இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டில் அமையப் பெறவுள்ள இப்பாலத்தை அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பாலம் வரும் இருமாத காலத்திற்குள் கட்டி முடிக்கப்பட்டு மக்களின் போக்குவரத்திற்காக கையளிக்கப்படும். இவ்வாறான பின்தங்கிய பகுதிகளை மேம்படுத்தும் நோக்கில் எம்மால் மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்பாடுகளில் இக் கிருஸ்ணபுரம் கிராமத்தினையும் நாம் முன்னிலைப்படுத்தியுள்ளோம்.

எமது மக்களின் வாழ்வியலை மேம்படுத்தவும் பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதிலும் நாம் முழுக்கவனத்தை செலுத்தியுள்ளோம். அதற்கமைவாக நாம் இப்பகுதியில் மேலும் பல திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் எண்ணியுள்ளோம். அதாவது விளையாட்டு மைதானத்தை புனரமைத்தல் மற்றும் ஆரம்பப்பாடசாலையினை அமைத்தல் போன்ற செயற்பாடுகளை விரைவுபடுத்தவுள்ளோம். அதில் வரும் ஆண்டின் ஆரம்பத்தில் இங்கு பாடசாலை இயங்கக்கூடிய வகையில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இங்கு உரையாற்றிய அப்பகுதி கிராம அலுவலர் சேந்தன் மக்களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாருக்கும் இடையேயான நெருக்கமான உறவின வெளிப்பாடாகவே கிருஸ்ணபுரத்தில் அமைக்கப்படும் பாலம் அமைந்துள்ளதென குறிப்பிட்டார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் துரித மீள்ச்சித்திட்டத்தின் மூலம் சுமார் 44 இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டில் அமைக்கப்பட்டு வரும் இப்பாலமானது கிருஸ்ணபுரம், மலையாள்புரம் தொடக்கம் அதைத் தொடர்ந்து வரும் பல பிரதேசங்களின் போக்குவரத்து மையப்பகுதியில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் கரைச்சி பிரதேசசபையின் கௌரவ உறுப்பினர் கிருஸ்ணசாமி ஈ.பி.டி.பி யின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் மீள் எழுச்சித் திட்ட பொறியியலாளர் கிசாந்த் கிராம சேவையாளர்களான சேந்தன், அம்பிகைபாலன், வைரமுத்து ஆகியோரும் கிளிநொச்சி சந்தை வர்த்தக சங்கத்தலைவர் இரத்தினமணி மற்றும் கிராம அபிவிருத்தி சங்கத்தினர், பொது மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# அங்கத்தவர்கள் கூட்டம்

(வடமராட்சி)

வடமராட்சி லயன்ஸ் கழகத்தினரால் மாதந்த அங்கத்தவர் கூட்டமும் சேவைத்திட்டமும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு பருத்தித்துறை பொது நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வின் போது பொதுமக்களுக்கான இலவச வைத்திய சேவைகள், மற்றும் இலவச மூக்குக்கண்ணாடி வழங்கல் நடவடிக்கைகளும் நடைபெறவுள்ளது.

மேலும் எதிர்கால வேலைத்திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடல் இடம் பெறும் எனவும் உறுப்பினர்களை தவறாது குறித்த நேரத்திற்கு சமூகமளிக்குமாறும் வடமராட்சி லயன்ஸ் கழக செயலாளர் லயன் கே.மகிந்தன் தெரிவித்துள்ளார். (100)

# சிவகுரு வீதிக்கு விமோசனம் புனரமைப்பு பணிகள் ஆரம்பம்

(சுன்னாகம்)

ஏழாலைப்பகுதியில் உள்ள சிவகுரு வீதி அகலமாக்கப்பட்டு புனரமைப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன.

உள்ளூராட்சித்திணைக்களத்தின் கீழ் உள்ள வீதி நீண்டகாலமாக புனரமைப்புச் செய்யப்பட வில்லை.

கடந்த மாதம் ஒடுங்கிவரும் சிவகுரு வீதி என அவ்வீதியின் நிலைமை பற்றி தினமுரசு பத்திரிகையில் செய்தி வெளிவந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

தற்போது பலதரப்பட்டவர்களின் முயற்சியினால் வலி. தெற்கு பிரதேசசபையின் ஏழாலை உப அலுவலக அனுசரணையுடன் அகலிப்புக்குரிய எல்லைகள் குறித்த அடையாளங்கள் இடப்பட்டு வருகிறது.

ஏழலைப்பகுதியில் காணப்படும் முக்கிய வீதிகளில் ஒன்றாக காணப்படும் இவ்வீதியின் அகலிப்பு பணிக்கு வீதியின் இருபக்கமும் வசிக்கும் குடியிருப்பாளர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருக்கிறது. (148)

# பழவகைகளின் விலைகள் திடீரென அதிகரிப்பு

(வரணி)

குடாநாட்டு சந்தைகளில் இறங்கு நிலையிலிருந்த வாழைப்பழம் திடீர் என விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. ஒரு கிலோ ரூபா 40 முதல் ரூபா 50 வரை விற்பனை செய்யப்பட்ட கதலி வாழைப்பழம் இந்த வாரம் 90 ரூபாவாகவும் மற்றும் பலாப்பழம், மாம்பழம் போன்ற பழவகைகள் என்றுமில்லாதவாறு உச்ச விலையாக விற்பனை செய்யப்படுகிறது.

தற்போது குடாநாட்டில் செலவச்சந்நிதி, தெல்லிப்பழை துர்க்கை அம்மன் அடுத்து வல்லிபுரஆழ்வார், ஆலயங்களில் மஹோற்சவம் நடைபெறுவதாலேயே பழவகைகளின் விலைகள் அதிகரிப்புக்கு காரணம் என பழ வியாபாரிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர். (150)



**பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் திவிநெகும வாழ்வெழுச்சித் திட்டத்தின் கீழ் மூன்றாவது கட்டமாக முருங்கைக் கன்றுகளை ஆனைக்கோட்டை கிராம சேவையாளர் நிசாந்தன், சமுர்த்தி உத்தியோகத்தர் ஸ்ரெலா ஆகியோர் கிராம சேவையாளர் அலுவலகத்தில் வைத்து மக்களுக்கு வழங்கிவைப்பதனைக் காணலாம்.** (104)

# முரசின் இன்றைய பலன்

**(19.08.2012 - ஞாயிற்றுக்கிழமை)**

நந்தன வருஷம் ஆவணி மாதம் 03 ஆம் திகதி. துதிய முன்னிரவு 8.13 வரை.
நட்சத்திரம் பூரம் முன்னிரவு 8.21 வரை. சித்தாமிர்தம்.
இராகுகாலம் 4.35 - 6.05 வரை. சுபநேரம் 09.05 - 10.35 வரை.
எமகண்டம் 12.05 - 1.35 வரை. குளிகன் காலம் 3.05 - 4.35 வரை.
முதலாவது ஆவணி ஞாயிறு

**சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| மேடம் | வாகனத்தால் சுகம், லட்சுமி கடாட்சம், பணப் புழக்கம், வேலைபழு அதிகரிக்கும். |
| ரிஷபம் | புதிய முயற்சி, வெற்றிகள் கிட்டும், எதிர் பாராத பணவரவு, தேக ஆரோக்கியம். |
| மிதுனம் | புதிய முயற்சி, அனுசரித்துப் போகவும், தொழிலில் ஆதாயம், அதிகாரிகள் நட்புறவு. |
| கடகம் | உற்சாகம், பொருளாதார கஷ்டம், நண்பர்கள் உதவி, சிந்தித்து செயற்படவும். |
| சிம்மம் | மனமகிழ்ச்சி, பெற்றோர் ஆலோசனை, ஆடை அணிமணிகள் சேரும், சிறப்பான வியாபாரம். |
| கன்னி | நினைத்தது பலிக்கும், வெளிவட்டார பழக்கம், முட்டுக்கட்டைகள் அகலும், சுப காரியம். |
| துலாம் | நற்கீர்த்தி, தடைப்பட்டவை நிறைவேறும், விருந்துபசாரம், புதிய தொழில் முயற்சி. |
| விருச்சிகம் | சுபதினம், உறவினர் வருகை, புத்திரரால் நன்மை, வருவாய் அதிகரிப்பு. |
| தனுசு | பரிசு கிட்டும், அசம்பாவிதங்கள் ஏற்படலாம், சிக்கல்கள் வரும், குடும்ப சுகம். |
| மகரம் | முன்தினம் போல் கவனம், வழக்குகளில் குழப்பம், குறுக்குவழிப் பணம், நண்பரால தொல்லை. |
| கும்பம் | மனக்கவலை, குடும்பப் பொறுப்பு, நண்பர்கள் உதவி, அயலவர்களால் தொல்லை. |
| மீனம் | பகைவரால் தொல்லை, அதிகாரிகள் பாராட்டு, வீண் மனஸ்தாபம், இல்லச்சிறப்பு. |

# வாகன நெரிசலை குறைக்க பொலிஸாருக்கு ஆலோசனை

(வடமராட்சி)

வடமராட்சி பருத்தித்துறை - யாழ்ப்பாண வீதியில் நெல்லியடிச் சந்தி ஊடாக செல்லும் கனரக வாகனங்களை மாற்றுவழி ஏற்படுத்திக் கொடுத்து நடவடிக்கை எடுக்குமாறு நெல்லியடி பொலிஸாருக்கு வடமராட்சி தெற்கு மேற்கு கரவெட்டி பிரதேச சபையின் உபதலைவர் எஸ்.சாந்தசொரூபன் ஆலோசனை ஒன்றை கடிதம் மூலம் தெரியப்படுத்தியுள்ளார். அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

நெல்லியடி பிரதான வீதியூடாக தினமும் செல்லும் கனரக வாகனங்களால் அங்கு வரும் பொதுமக்கள் பல நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றனர்.

எனவே பொதுமக்களின் பாதுகாப்பு நலன் கருதி கனரக வாகனங்கள் செலுத்துவதற்கு மாற்று வழிப்பாதையாக வல்லிபுர ஆழ்வார் கோவில் - வரணி - கொடிகாமம் வீதி - கலிகைச்சந்தி - சாவகச்சேரி வீதி - ஆயத்துச்சந்தி -துன்னாலை வீதி - வல்வை போன்ற வீதிகள் மக்களுக்கு எவ்வித சிரமமற்ற பாதை எனக்கருதுகிறேன்.

மேற்படி வீதி ஊடாக சிறியரக வாகனங்கள் தவிர்ந்த கனரக வாகனங்கள் செல்வது தவிர்க்கப்பட்டால் நெருக்கடிகள் குறைக்கப்படும்.

மேலும் மாலுச்சந்தி - உடுப்பிட்டி - வல்வை ஊடாக யாழ்ப்பாணம் நோக்கிச் செல்லும் இலகு ஊர்திகளுக்கு காலை மாலை வேளைகளில் செல்வதற்கு மாலிசந்திப் பகுதியில் ஒரு பொலிஸ் உத்தியோகத்தரையும் நியமிக்கும் போது பொது மக்களுக்கு ஏற்படும் இடையூறுகளை இனம் கண்டு நடவடிக்கை எடுக்க முடியும்.

எனவே மேற்படியான நடவடிக்கைகள் நெல்லியடி மையப்பகுதிகளில் வாகன நெரிசல்களை தடுப்பதற்கும் அண்மைக்காலமாக தொடர்ந்து வரும வீதி விபத்துக்களை குறைப்பதற்கும் வீதி போக்குவரத்துப் பொலிஸாரின் நடவடிக்கைகளை தீவிரப்படுத்த ஆவண செய்யுமாறு அவர் பொலிஸாரை கேட்டுள்ளார். மேற்படி விடயங்கள் தொடர்பாக பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் நெல்லியடி நகரப்பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு ஆலோசனை ஒன்றை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (116)



## அடுத்த முறையும் வெல்வேன் தங்கம்

(நியூயோர்க்)

ஒலிம்பிக் விழாவில் தங்கம் வென்றதைத் தொடர்ந்தும் பலரும் எனக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்து வருவது மகிழ்ச்சி. அடுத்த ஒலிம்பிக் போட்டியிலும் தங்கம் வெல் வேன் என அமெரிக்க ஜிம்னாஸ்டிக் வீராங்கனை கெபி டக்லஸ் தெரிவித்துள்ளார்.

இம்முறை ஒலிம்பிக் விழாவில் ஜிம்னாஸ்டிக் பிரிவில் முதல் தங்கப் பதக்கத்தை ஈட்டிக்கொடுத்த பெருமை 16 வயதான கெபியை சாரும்.

2008 ஆம் ஆண்டு பீஜிங் ஒலிம்பிக் விழாவில் ஜிம் னாஸ்டிக் போட்டிகளின் ஒற்றையர் பிரிவில் அமெரிக்கா தங்கப் பதக்கம் வென்றிருக்கவில்லை.

எனினும் இம்முறை கெபி ஒற்றையர் பிரிவில் தங்கப் பதக்கம் வென்றதுடன், குழுநிலை பிரிவிலும் அமெரிக்கா தங்கம் வெல்வதற்கு காரணமாக இருந்தார். நாளாந்தம் தம்மை பலரும் பாராட்டுவது உற்சாகம் அளிப்பதாகவும், 2016 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளுக்கு தற்போதே தயார்படுத்தல்களை ஆரம்பித்துள்ளதாகவும் அமெரிக்க ஜிம்னாஸ்டிக் வீராங்கனை கெபி டக்லஸ் குறிப்பிட்டுள்ளார்.

## சின்சினாட்டி ரென்னிஸ் முர்ரே வெளியேற்றம்



லண்டன் ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற இங்கிலாந்து வீரர் ஆன்டி முர்ரே, சின்சினாட்டி ஓப்பன் ரென்னிஸ் தொடரில் இருந்து வெளியேறினார்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில், யு.எஸ். ஓப்பன் கிராண்ட்ஸ்லாம் ரென்னிஸ் (ஆக., 27 - செப்., 9) தொடர் நடக்க உள்ளது. இதற்கான ஒத்திகை போட்டியாக சின்சினாட்டி ஓப்பன் ரென்னிஸ் நடக்கிறது.

இதன் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்றில், உலகின் நான்காம் நிலை வீரரான இங்கிலாந்தின் ஆன்டி முர்ரே, பிரான்சின் ஜெரிமி சார்டியை சந்தித் தார். இதில் முர்ரே 4-6, 4-6 என்ற நேர் செட் கணக்கில் தோல்வி அடைந்து வெளியேறினார். நடப்பு சம்பியன் அந்தஸ்துடன் களமிறங்கிய முர்ரே, சமீபத்தில் முடிந்த லண்டன் ஒலிம்பிக்கில் தங்கம் வென்று சாதித்தார். மற்றொரு மூன்றாவது சுற்றுப் போட்டியில் உலகின் முதல் நிலை வீரரான சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், அவுஸ்ரேலியாவின் பெர்னார்ட் டோமிக்கை சந்தித்தார். இதில் பெடரர் 6-2, 6-4 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார். மற்ற போட்டிகளில் நோவக் ஜோகோவிச் (சேர்பியா), மரின் சிலிக் (குரோஷியா), மார்டி பிஷ் (அமெரிக்கா), ஸ்டானிஸ்லாஸ் வாவ்ரின்கா (சுவிட்சர்லாந்து), ஜூயன் மார்டின் டெல்போட்ரோ (ஆர்ஜென்ரீனா), மிலோஸ் ராவோனிச் (கனடா) ஆகியோர் வெற்றி பெற்று காலிறுதிக்கு தகுதி பெற்றனர்.

## தங்கம் வென்றமையால் வாழ்க்கையில் திருப்பம்



(நியூயோர்க்)

லண்டன் ஒலிம்பிக் போட்டியில் தங்கம் வென்றதன் மூலம் எனது வாழ் வில் பாரிய திருப்பங்களை ஏற்படுத்தி யுள்ளதாக அமெரிக்காவின் நீச்சல் வீரர் மெத்திவ்ஸ் க்ரேவர்ஸ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மெத்திவ்ஸ் க்ரேவர்ஸ் ஒலிம்பிக் விழாவில் இரண்டு தங்கப் பதக்கங்கள் மற்றும் ஒரு வெள்ளிப் பதக்கத்தை வெற்றிகொண்டார்.

முன்னாள் நீச்சல் சம்பியனான மைக் கல் பெல்ப்ஸ், பெஹவ் ஆகியோர் எனது விளையாட்டு வாழ்வில் பாரிய ஒத்துழைப்புக்களை வழங்கியிருந்தனர்.

ஒலிம்பிக் விழாவில் பின்னர் சர்வதேச ரீதியில் நான் பிரபல்யமாகியுள்ளேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தங்கம் வென்ற சீன வீராங்கனைக்கு அரசியலில் உயர் பதவி

(பீஜிங்)

லண்டனில் நடைபெற்று முடிந்த 200 மீற்றர் தூர பட்டர்பிளை நீச்சல் போட்டியில் தங்க பதக்கம் வென்ற சீனாவை சேர்ந்த நீச்சல் வீராங்கனை ஜியாவோ லியூயாங்கியை சீன அரசு கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியலமைப்பு குழுவில் உறுப்பினராக நியமித்து கௌரவித்துள்ளது.

பெண்களுக்கான 200 மீற்றர் பட்டர்பிளை நீச்சல் போட்டியில் தங்க பதக்கம் வென்ற இவர் 200 மீட்டர் பட்டர் பிளை நீச்சல் போட்டியின் முந்தைய சாதனைகளை முறியடித்தும் உள்ளார்.

இவரது இந்த சாதனை சீனாவுக்கு பெருமை சேர்த்ததையடுத்தே இவருக்கு சீன அரசு கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியலமைப்பு குழுவின் உறுப்பினராக நியமித்துள்ளது.

இப்பதவி சீனாவில் மிக அதிகாரம் படைத்தது. இந்த குழு உறுப்பினர்கள்தான் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் மற்றும் சீனா வின் அதிபர் போன்ற தலைவர்களை தேர்ந்தெடுக்கும் அதிகாரம் படைத்தது. மேலும் கட்சியில் பெண்களின் பங்கு அதிகம் இருக்க வேண்டும் என்பதற்காக இவரை கம்யூனிஸ்டு தலைவர்கள் தேர்வு செய்தனர்.

மிக குறைந்த வயதில் இந்த குழுவின் உறுப்பினரான பெருமை ஜியாவோ லியூயாங்கிற்கு கிடைத்துள்ளது.

## டோனியின் புதிய அவதாரம்

(கொல்கத்தா)

இந்திய கிரிக்கெட் அணியின் கப்டன் டோனி சர்வதேச அளவில் புதிய தொழிலில் குதிக்கிறார். உடலில் நீண்ட நேரம் நறுமணத்தையும், புத்துணர்ச்சியையும் தரும் ஆண் களுக்கான வாசனை திரவியம் (சென்ட்) விற்பனையை, டுபாய் நிறுவனத்துடன் இணைந்து தொடங்குகிறார்.

முதலில் இந்தியா அதன் பிறகு அரபு நாடுகள், பிறகு உலகின் மற்ற இடங்களுக்கும் அவரது நிறுவனம் தொடங்கப்படும். அடுத்த மாதம் இலங்கையில் ருவென்ரி - 20 உலக கோப்பை கிரிக்கெட் போட்டி நடக்கும் போது, டோனி நிறுவனத்தின் சென்ட்டுகள் இந்திய சந்தைகளில் விற்பனைக்கு வந்து விடும்.

இதன் மூலம் சர்வதேச அளவில் இது போன்ற விற் பனையில் குதிக்கும் முதல் இந்திய கிரிக்கெட் வீரர் என்ற சிறப்பை டோனி பெறுகிறார்.

டென்னிஸ் பிரபலங்கள் ரோஜர் பெடரர், மரிய ஷரபோவா ஆகியோர் ஏற்கனவே இது போன்று சென்ட் விற்பனையில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.



## மீண்டது இங்கிலாந்து

(லண்டன்)

தென்னாபிரிக்க அணிகெதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இங் கிலாந்து அணி மீண்டுள்ளது.

இங்கிலாந்து, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் மூன்றாவதும், இறுதியுமான போட்டி லோட்ஸில் இடம்பெற்று வருகின்றது.

இதில் முதல் இனிங்ஸிற்காக ஆடிய தென்னாபிரிக்க அணி சகல விக்கெட் டுக்களையும் இழந்து 309 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டுமினி, பிலாண்டார் தலா 61 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பின் நான்கு, அண்டர்சன் மூன்று, ஸ்வான் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய இங்கிலாந்து அணி முதல் மூன்று விக்கெட்டுக்களையும் குறைந்த ஓட்ட எண்ணிக்கைக்குள் இழந்து தடுமாறியது. இருப்பினும் இதன் பின் இணைந்த இயன் பெல், பய்ர்ஸ்ரைவ் இணை அணியின் நிலையை உணர்ந்து பொறுப்பாக ஆடியது. இறுதியில் இரண்டாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்த வேளை இங்கிலாந்து அணி ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 208 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் பய்ர்ஸ்வைர் ஆட்டமிழக்காது 72 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். இயல் பெல் 58 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். பந்து வீச்சில் மோர்க்கல், ஸ்டெயின் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் தென்னாபிரிக்க அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது. இதேவேளை, இப்போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றிபெறும் பட்சத்திலேயே தொடர்ந்தும் முதல் நிலை அந்தஸ்தை தக்கவைத்துக் கொள்ள முடியும்.

இல்லையோல், தென்னாபிரிக்க அணி முதன் முறையாக டெஸ்ட் தரப்படுத்தில் முதல் இடத்திற்கு முன்னேறும் என்பது குறிப்பிடத்தக்கது.

## நிறைவேறியது கனவு



(சின்சினாட்டி)

லண்டன் ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்றதன் மூலம், எனது நீண்ட நாள் கனவு நிறைவேறியுள்ளது என ரென்னிஸ் வீரர் ரோஜர் பெரடர் தெரிவித்தார். ஒலிம்பிக் ஒற்றையர் பிரிவில் தங்கம் வெல்ல வேண்டும் என்பது தான் எனது இலக்காக இருந் தது. ஆனால் குறைந்தபட்சம் வெள்ளிப் பதக்கம் கிடைத்ததை ஆறுதலாக கருது கிறேன். ஏனெனில் 2016இல் பிரேசி லில் நடக்கவுள்ள ஒலிம்பிக்கில் விளை யாடுவேனா என்பதை உறுதியாக இப் போது கூற முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

## நியூசிலாந்து டெஸ்ட் தொடருடன் கிரிக்கெட்டுக்கு டாட்டா?

(மும்பை)

நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட்தொடருடன்,சர்வ தேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து லக்ஸ்மன் ஓய்வு பெறத்திட்டமிட்டுள்ளதாக தெரிகிறது.

இந்திய டெஸ்ட் அணியில் நடுவரிசை துடுப்பாட்ட வீரர் லக்ஸ்மன் (வயது- 37), கடந்த 1996இல் தென்னாபிரிக்க அணிக்கு எதிரான டெஸ்டில் அறி- முகமானார். இதுவரை 134 டெஸ்டில், 17 சதம், 56 அரைசதம் உட்பட 8781 ஓட்டங்கள் எடுத்துள்ளார். பெரும்பாலான டெஸ்டில், நான்காவது இன்னிங்சில் அசத்தல் ஆட்டத்தை வெளிப்படுத்தி, இந்திய அணிக்கு பல்வேறு வெற்றிகளை தேடித்தந்துள்ளார்.

நான்காவது இன்னிங்ஸ் நாயகன் என்றழைக் கப்படும் இவர், கடந்த ஆண்டு அவுஸ்ரேலியா சென்ற டெஸ்ட் அணியில் இடம் பெற்றபோதும், பெரியளவில் சோபிக்கவில்லை. இத னால், விரைவில் ஓய்வு பெறுவார் என்று நம்பப்பட்டது.

தொடர்ந்து அணியில் இருப்பதால், இளம் வீரர்களுக்கு பெரும் தடையாக உள்ளார் என்ற விமர்சனங்கள் இவரை பாதித்து விட்டதாம்.

நியூசிலாந்து டெஸ்ட் தொடரில் பங் கேற்கவும் இவருக்கு விருப்பம் இல்லை யாம். இதனால், இந்த டெஸ்ட் தொடருடன், ஓய்வை அறிவிக்க திட்டமிட்டுள்ளார். இதுகுறித்து, தனது நெருங்கிய நண்பர்களிடம் ஆலோசித்து வருவதாக தெரிகிறது. இறுதி முடிவை விரைவில் அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



# கடற்கரை கரப்பந்தாட்டத்தில் மன்னார், வவுனியா சம்பியன்

விளையாட்டுச் செய்திகள்





(முல்லைத்தீவு)

வடக்கு மாகாண அணிகளுக்கிடையில் இடம்பெற்ற கடற்கரை கரப்பந்துப் போட்டியில் ஆண்கள் பிரிவில் மன்னார் மாவட்ட அணியும், பெண்கள் பிரிவில் வவுனியா மாவட்ட அணியும் மாகாண சம்பியன்களாகின.

முதன் முறையாக வடக்கு மாகாணத்தில் நடத்தப்பட்ட இக்கடற்கரை கரப்பந்துப் போட்டியில் மாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டத்தைச் சேர்ந்த ஆண், பெண் அணிகள் பங்குகொண்டன.

இதன் இறுதிப் போட்டி கடந்த வியாழக்கிழமை முல்லைத் தீவு கடற்கரை மைதானத்தில் வடக்கு மாகாண விளையாட்டுப் பணிப்பாளர் சி.அண்ணாத்துரை தலைமையில் நடைபெற்றது.

ஆண்களுக்கான இறுதிப்போட்டியில் மன்னார் மாவட்ட அணியும், யாழ. மாவட்ட அணியும் மோதியது. முதலாவது சுற்றில் யாழ் மாவட்ட அணி 21 - 18 என்ற புள்ளியடிப்படையில் முதல் சுற்றைக்கைப்பற்றியது. இரண்டாம் சுற்றில் மன்னார் மாவட்ட அணி 21 - 14 என்ற புள்ளியடிப்படையில் கைப்பற்றியது.

இறுதிச்சுற்றில் மன்னார் மாவட்ட அணி 15 - 4 என்ற புள்ளியடிப்படையில் எளிதாகக் கைப்பற்றி சம்பியன் பட்டத்தை வென்றெடுத்தது.

பெண்கள் பிரிவின் இறுதியாட்டத்தில் வவுனியா மாவட்ட அணியும், முல்லைத்தீவு மாவட்ட அணியும் மோதியது. வவுனியா மாவட்ட அணி முதலாவது சுற்றை 21 - 5 என்ற கணக்கில் எளிதாக கைப்பற்றியது. இரண்டாம் சுற்றையும் 21 - 13 என்ற கணக்கில் கைப்பற்றி சம்பியன் பட்டத்தை வென்றெடுத்தது.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக முல்லைத்தீவு அரச அதிபர் நா.வேதநாயகம் கலந்துகொண்டார். (93)

## மன்னாரில் எம்.பி.எல்.

(மன்னார்)

மன்னார் பெரியகடை ஸ்டார் ஈகிள் விளையாட்டு கழகம் மன்னார் மாவட்டத்தின் கிரிக்கெட் வளர்ச்சி கருதி தொடர்ந்து இரண்டாவது முறையாக நடத்தும் பிரமாண்டமான மன்னார் பிறிமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி இன்றைய தினம் இடம்பெறவுள்ளது.

இரண்டு நாட்களாக இடம்பெறும்இப் போட்டித் தொடரில் 40 போட்டிகள் இடம்பெறவுள்ளதாகவும், இப்போட்டியில் மன்னார் மாவட்டத்தின் முன்னனி அணிகளான ஸ்டார் ஈகிள், சென். விக்டறிஸ், சென்.அன்ரனிஸ், சென். ஜோசப், இந்து முன்னனி, யங்ஸ்டார், ஏசியன் மற்றும் கிறீன் பீல்ட் ஆகிய அணிகளும் கிளிநொச்சி மாவட்ட அணியும் இதில் களமிறங்கவுள்ளன என்றும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

கிண்ணம் வெல்லும் அணிக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்களும் வழங்கப்படும் என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

## ஹைதர் மிரட்டல்

(லாகூர்)

ஆட்ட நிர்ணய சதியில் ஈடுபட்ட பாகிஸ்தானியக் கிரிக்கெட் வீரர்களின் பெயர்களை வெளியிடப் போவதாக பாகிஸ்தான் அணியிலிருந்து புறக்கணிக்கப்பட்டுள்ள விக்கெட் காப்பாளர் சுல்கர்னைன் ஹைதர் மிரட்டியுள்ளார்.

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக கிண்ண ருவென்ரி -20 தொடருக்கான மற்றும் அவுஸ்ரேலியாவிற்கு எதிரான தொடருக்கான பாகிஸ்தான் அணியின் தெரிவுகளை விமர்சித்துள்ள ஹைதர், குறிப்பாக கம்ரன் அக்மலின் தெரிவைக் கடுமையாக விமர்சித்துள்ளார்.

கம்ரன் அக்மல் இன்னமும் சர்வதேசக் கிரிக்கெட் சபையால் குற்றமற்றவர் எனத் தெரிவிக்கப்படவில்லை. எனத் தெரிவித்த ஹைதர் கம்ரன் அக்மல் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையாலேயே குற்றமற்றவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவித்தார்.

அத்தோடு சர்வதேசக் கிரிக்கெட் சபையின் அனுமதியை அவர் பெற்றிருப்பாரானால் அதைப் பகிரங்கமாகத் தெரிவிக்க வேண்டும் எனவும் அவ்வாறு அவர் செய்யாவிடில் ஸ்பொட் பிக்சிங்கில் சம்பந்தப்பட்ட பாகிஸ்தான் வீரர்களின் பெயரை வெளியிடப் போவதாக அவர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் அணி நேர்மையான அணியாக இருக்க வேண்டும் எனத் தான் விரும்புவதாகத் தெரிவித்த ஹைதர் தனது மனதில் காணப்பட்டதையே தெரிவித்ததாகக் கூறினார். இது வரை தான் அமைதி காத்ததாகத் தெரிவித்த அவர், கம்ரன் அக்மலின் தெரிவைத் தன்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை எனவும் தெரிவித்தார்.

## கிண்ணம் வென்றது மணற்காடு அன்ரனிஸ்





(அல்வாய்)

பருத்தித்துறை வாலிபர் கிறிஸ்வத சங்கத்தினால் நடத்தப்பட்ட கால்பந்தாட்டப் போட்டியில் மணற்காடு அன்ரனிஸ் அணி கிண்ணம் வென்றது.

பருத்தித்துறை வாலிபர் கிறிஸ்தவ சங்கத்தினால் நடத்தப்பட்ட கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை அல்வாய் நண்பர்கள் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இதில் மணற்காடு அன்ரனிஸ் அணியும் அல்வாய் நண்பர்கள் அணியும் மோதின. ஆட்டம் தொடங்கியபோது இரு அணிகளும் மிகச் சிறப்பாக தமது ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இதில் 13ஆவது நிமிடத்தில் அன்ரனிஸ் அணியைச் சேர்ந்த மரியதாஸ் தனது அணிக்காக முதல் கோலைப் போட்டார். இதனால் 1-0 என்ற கோல் கணக்கில் இடைவேளைக்கு முன்னர் முன்னிலை வகித்தது.இடைவேளையின்பின்னர் ஆட்டம் தொடங்கியபோது அல்வாய் நண்பர்கள் தமது ஆட்டத்தை வேகப்படுத்தியபோதும் கோல் போடும் வாய்ப்பு பயனளிக்கவில்லை. இருந்தபோதும் மறுமுனையில் சிறப்பான பந்துப் பரிமாற்றத்தை வெளிப்படுத்திய அன்ரனிஸ் அணி 26ஆவது நிமிடத்தில் மற்றுமொரு ஜெறிநோல்ட் போட்டு அணியின் வெற்றியை உறுதி செய்தார். இறுதியில் 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்ற மணற்காடு அன்ரனிஸ் அணி கிண்ணத்தைக் கைப்பற்றியது. இரண்டாமிடத்தை அல்வாய் நண்பர்கள் அணி பெற்றுக் கொண்டது. (12)





தெல்லிப்பளை கிழக்கு கலைச்செல்வி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நிகழ்வு கடந்த 12ஆம் திகதி கலைச்செல்வி சனசமூக நிலையத் தலைவர் சிறிஸ்கந்தராஜா தலைமையில் நடைபெற்றது. இதில் சிறார்கள் ஓடுவதையும், வினோத உடை நிகழ்வையும் காணலாம்.

# ஈதுல் பித்ர் சிறப்

## ஈகைத் திருநாள் எமக்கு புத்துணர்வூட்டுகின்றது

உலகத்தின் படைப்பாளன் ஒருவன்! உலகை சிருஷ்டி கர்த்தா ஒருவன் உலகை பரிபாலனம் செய்யும் ஆற்றல் மிக்கவன் ஒருவன்! உலகில் எல்லா மாற்றங்களையும் ஏற்படுத்துபவன் ஒருவன் அவனே ஏக இறைவன் அல்லாஹ்! இணையும் துணையும் அல்லா! உருவங்கள் அல்லா! அல்லாஹ்வை புகழ்கின்றேன் அல்ஹம்து லில்லாஹ்.

மனிதர்களை உலகில் ஏக இறைவனே படைத்தான், அவர்களுக்கு உலகில் ஒரு வாழ்வையும் வழங்கினான். அதற்கான ஒரு சீரான வழிகாட்டலையும் வழங்கினான், உலகில் படைக்கப்பட்ட நோக்கத்தையும் தெளிவாக எடுத்துரைத்தான் அதன்படி வாழும் மனிதர்களுக்கு சுவனத்தில் சுகபோகமான நிரந்தரமான வாழ்வை பரிசளிப்பதாக உத்தரவாதம் தருகின்றான். எனவே உலகில் படைக்கப்பட்டதன் நோக்கம் அல்லாஹ்வின் வழிகாட்டல்களின்படி வாழ்தலேயாகும்.

இஸ்லாம் அடுக்களையில் சமைப்பது முதல், ஆட்சிக்கட்டில் அதிகாரம் செலுத்துவது வரை, திருமணம், மணவாழ்க்கை, குடும்ப வாழ்க்கை, குழந்தை வளர்ப்பு அயலவருடனான உறவுகள் என மிகவும் விரிவான வழிகாட்டல்கள் இஸ்லாத்தில் வழங்கப்பட்டுள்ளன. அகதிகளாய் செல்லும்போதும் அகதிகளை வரவேற்கும்போதும், மீளவும் குடியேறும் போதும் மனிதர்கள் கடைப்பிடிக்கவேண்டிய ஒழுங்குகள் குறித்தும் இஸ்லாம் வழிகாட்டியிருக்கின்றது. இதுவே இஸ்லாத்தில் காணப்படும் விஷேட தன்மையாகும்.

இஸ்லாத்தை தமது வாழ்வியலாக கொள்கின்ற முஸ்லிம்கள் 1990 களின் பலவந்த வெளியேற்றத்தின் பின்னர் மீளவும் யாழ். மண்ணில் குடியேறி வருகின்றனர். இந்த மண்ணின் அபிவிருத்தி, அமைதியான வாழ்வொழுங்கு, வர்த்தகம், நல்லிணக்கம் போன்ற பல்துறைகளிலும் தாக்கம் செலுத்தும் சமூகமாக பங்களிப்பு செலுத்தும் சமூகமாக யாழ். முஸ்லிம்கள் திகழ்வார்கள். இந்த நிலையில் எம்மை எதிர்நோக்கும் ஈகைத்திருநாள் எமக்கு புத்துணர்வு அளிக்கின்றது. ஈகைத்திருநாள் எம்மை மென்மேலும் ஐக்கியப்படவும் முன்னோக்கி நகரவும் வாய்ப்பளிக்கும் என்ற நம்பிக்கையுடன் அனைவருக்கும் ஈகைத்திருநாள் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.



**'ஈத் முபாரக்'**

**அஷ் - ஷெய்க் அஸ்மின் அய்யூப் (நளீமி)**
**பணிப்பாளர் - தகவல் வழிகாட்டல் மத்திய நிலையம்**

## "ஈதுல் பித்ர்" வாழ்த்துச் செய்தி

வருடத்தில் பன்னிரண்டு மாதங்கள். அந்த மாதங்களில் முத்தாக ஒரு மாதம் பூக்கும் அந்த மலர்களுக்கு பெயர்தான் நோன்பு. ஒவ்வொரு முஸ்லிமும் இறையடிமை என்பதை இறைவனிடமும் உலகப் பார்வையாளர்களிடமும் பதித்துக்கொள்ளும் மாதம். அனுமதிக்கப்பட்ட உணவுகளைக்கூட ஒதுக்கி வைப்பதில் ஆனந்தம் கொள்ளும் மாதம் இந்த மாதம்.

மனிதன் தன் உள்ளத்தையும் உடலையும் பக்குவப்படுத்தக்கூடிய தாகவே நோன்பு அமைந்துள்ளது.

பசியின் தன்மை உணரப்படுகிறது. வேண்டா கொழுப்புக்கள் குறைக்கப்பட்டு உடல் நலம் காக்கப்படுகின்றது. தீய எண்ணமும் செயலும் மனிதனை விட்டு விலகி ஓடுகின்றன. பிறர்மீது அக்கறையும் இல்லாதோருக்கு கொடுத்துதவும் மனப்பக்குவம் கூடுகிறது.
அதிகமான இறைவணக்கங்களால் மனம் அமைதியடைகிறது. பாவக்கறைபடிந்த நிலையில் மரணம் வந்தடையாமல் இருக்க இறை நம்பிக்கையாளர்களின் பாவங்களை அவனே அகற்ற நோன்பு வழிசமைக்கின்றது. இவ்வாறான நோன்பை நோற்ற நன்மக்களுக்கும், புரிந்துணர்வுடன் பழகுகின்ற அனைத்து மக்களுக்கும் எனது ஈதுல்பிதர் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.



**மௌலவி எம்.ஐ.மஹ்முதுலெவ்வை**
**(பலாஹி)**
**முகம்மதிய்யா ஜும்ஆபள்ளிவாசல்**
**யாழ்ப்பாணம்.**





அனைவருக்கும் நோன்பு பெருநாள் வாழ்த்துக்கள்

**UNION BANK**

நிலையான சேமிப்பு மற்றும்
நடைமுறை வைப்புக் கணக்குகள்
தங்க நகை அடகுச் சேவை
Western Union பணப் பரிமாற்றல் சேவை
பாதுகாப்பு பெட்டக (Safety Lockers)
வசதி மற்றும் வெளிநாட்டு நாணய வைப்பு
கணக்குகள் போன்றவற்றுடன்
உங்கள் தேவைகளுக்கான
கடன் வசதிகள் என்பவற்றிற்கு

**யூனியன் வங்கி**
இல. 62/ 17 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
021 2224567/8

**Pilaws**
பிளவ்ஸ்
கிறீம் ஹவுஸ்
355, மானிப்பாய் வீதி,
ஐந்து சந்தி,
யாழ்ப்பாணம்
Tel: 0775976619

வாடிக்கையாளர்கருக்கு
வாழ்த்துக்கள்
MADEENA H
சிக்கன் புரியாணி, ...ட்டன்
பிரைட்றைஸ், கொத்துரொ
வகைகள், கட்லட் ரோல், ...
ஆகியவைகளை விஷேடமா
தயாரித்து வழங்கும் ஸ்
மதீனா ஹோ
ஐந்து சந்தி, யாழ்

**Afshan's**
அப்ஷான்ஸ்
Dress for gentlemen
45, New Market Inside Jaffna
Mob: 0772329313
0717874089
e-mail: afshans19@yahoo.com

**TOPAZ**
Specialist in
Wedding Sarees and Party Sarees
Wedding Frocks and Party Frocks
and All kinds Items
No. 70, Grand Bazaar, Jaffna
T.P: 021 222 4347

**A.H.M. REST**
ROOMS AVAILABLE
432/35, NEAR THE POST OFFICE
Kilinochchi.
Tel - 077 2023771 / 0776286771

அனைவருக்கும் நோன்
நல்வாழ்த்துக்
**சியானா**
ரெயிலறிங் அன் ரெக்
கஸ்தூரியார்
யாழ்ப்பாண

**ஆப்தீன்**
நவநாகரீக ஆடவர்களுக்கான
தையலகம்
இல. 54, பெரியகடை வீதி,
உட்புறம்,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 077-4945423

SHAHANA'S MULTY CITY
**சஹ்னாஸ் மல்டி சிட்டி**
Fancygoods, Cosmatics,
Stationarry,
Silvers,
Electronics & Textiles etc.....
No.54, Muslim College Road, Jaffna.
M.H.M.Sifasil
(fasil)
T.No: 0776502366

TE
TATA ENTERPRISES
ටාටා එන්ටප්‍රයිසස්
டாடா எண்டர்பிரைஸஸ்
503, Manipay Road,
Jaffna
Tel: 0777 870418

STA
PHONE REPA
124 பெரிய கடை
நவீன வகை கை
விற்பனையாளர்களு
T.P : 077

# ...ப்பு மலர் – 2012






## ஈதுல் பித்ர்
## இனிய பெருநாளே! வருக....

காத்திருந்து நோன்பிருந்து
கணக்கற்ற அமல் புரிந்து
கவலைகள் பல தீர்த்தே
கவனயீனங்கள் களைய வந்த ஈதே!
இனிய பெருநாளே உன்னை..

வாழ்த்திப் போற்றி வருகவென்றே வரவேற்கின் றோம்! நிறைவுடைய வாழ்வளித்து நெடு நிலம் காத்தே மறையளித்த வல்லவன் அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் - அல்ஹம்துலில்லாஹ்.

பாவங்களைச் சுட்டெரித்த இந்த றம்ழானை அன்போடு அரவணைத்த நாம், இன்றைய இப்புனித திருநாளாம் ஈதுல்பித்ர் பெருநாளை இன்பமுடன் கொண்டாடி நிற்பதில் பேருவகை கொண்டுள்ளோம். புத்தாடை பூண்டு புதுமணம் கமழ புன்னகைத்தவர்களாக எமது பெருநாள் தொழுகையை நிறைவேற்றிய மகிழ்வில் திளைத்திருக்கும் இவ்வேளையில் இதுநாள் வரை பேணி வந்த ஒழுக்கத்துடன், பசிதாகம் தந்த படிப்பினைகளை மறந்து விடாது உற்றார் உறவினர்களுடன் உறவுகளைப் பேணி, அயலவர்களையும் மதித்து பண்புடன் பழகி நோன்பின் மாண்பு தந்த இந்த பெருநாளை சந்தோஷமாக கொண்டாடுவோம். இதைத் தவிர்த்து கேலி, கும்மாளங்களுடன் பொழுதுபோக்கு விளையாட்டுக்களில் ஈடுபட்டு பெற்ற நன்மைகளை வீணடிப்பதில் முனையக்கூடாது. இதையே எம் பெருமானார் ரசூல் (ஸல்) அவர்களும் புத்தாடை அணிந்து நல்ல உணவுகள் உண்பவனுக்கு அல்ல பெருநாள் - யார் மறுமையை பயந்து நடக்கிறார்களோ அவர்களுக்குத்தான் பெருநாள் எனும் திருநாள் சொந்தமானது எனக் கூறியுள்ளார்கள். எம்மை ஆண்டில் இரண்டு பெருநாட்களைக் கொண்டாடப் பணித்த இஸ்லாம் அந்நாளில் எந்த விதமான தீச்செயலுக்கோ, ஆபாசத்திற்கோ, அனாச்சரத்திற்கோ, உடன்பாடு வைக்கவில்லை என்பதை நாம் கவனத்தில் கொள்வோமானால் - அந்நிய மத நண்பர்களுடன் சேர்ந்து கூட நாம் சந்தோஷமாக இத்திருநாளை கொண்டாடலாம். வீண் விவாதங்கள், சண்டை சச்சரவுகளிலிருந்து தவிர்த்தும் கொள்ளலாம். சாந்தி,சமாதானத்தை எடுத்தோதும் இஸ்லாம் அனைவரையும் ஒற்றுமை எனும் கயிற்றையே பற்றிப் பிடிக்கச் சொல்கிறது!

அடுத்து. இப்பெருநாள் தொழுகைக்கு செல்லும் முன் சிறிதளவு உணவு உட்கொள்ள வேண்டும். அத்துடன் எம்முடைய உடலின் ஸக்காத்தான, ஸக்கா துல்பித்ராவை இத் தொழுகைக்கு முன்னதாக கொடுத்துவிட வேண்டும். இது எம் நோன்பின் குறைகளை நிவர்த்தி செய்வதால் இதனை வழங்கிவிட வேண்டும்.

நிச்சயமாக ரமழான் மாதத்தின் நோன்புகள் அனைத்தும் வானத்துக்கும் பூமிக்குமிடையில் தொங்கிக் கொண்டிருக்கும் ஸக்காதுல்பித்ரா கொடுப்பது கொண்டு அந்த நோன்பு வானத்தின் பக்கம் உயர்த்தப்படும் என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

எனவே, எமது ஈதுல்பித்ர் இனிய பெருநாளை இலட்சிய திருநாளாக இனிதே கொண்டாடி இறைவனிடம் நல்லருள் பெறுவோம்!

அனைவரும் ஒற்றுமையாக சந்தோஷ மாக ஏற்றத் தாழ்வின்றி ஒரு தாய் பிள்ளைகளாய் சமத்துவத்துடன் வாழவல்ல அல்லாஹ் அருள் பாலிப்பானாக! ஆமீன்!



மௌலவி ஏ.எம்.அப்துல்அஸீஸ் (காஸிமி)
சிவலை பள்ளிவாசல்
(பேஷ்இமாம்)



மலரமைப்பு:
எம்.எல்.லாபிர்
பக்க வடிவமைப்பு: தினமுரசு

...யாளர்கருக்கு ஈத்முபாரக் வாழ்த்துக்கள்
...EENA HOTEL
...புரியாணி, மட்டன் புரியாணி, ...றஸ், கொத்துரொட்டி, சூப் ...ட்லட்ஈ ரோல், சம்சா. பற்றிஸ், ...களை விஷேடமாக ருசியாக ...து வழங்கும் ஸ்தாபனம்
...னா ஹோட்டல்
...சந்தி, யாழ்ப்பாணம்.

அனைவருக்கும் ஈதுல் பித்ர் வாழ்த்துக்கள்



எம்.எம். நிலாம்
தலைவர் : யாழ். கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனம், மஸ்ஜித் அபூபக்கர் பள்ளிவாசல். (புதிய சோனக தெரு)
மானிப்பாய வீதி, யாழ்ப்பாணம்.

...க்கும் நோன்புப் பெருநாள் நல்வாழ்த்துக்கள்
...பானாஸ்
...ங் அன் ரெக்ஸ்ரைல்ஸ்
...ஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

யாழ். என்ரபிரைஸ்
YARL ENTERPRISE
தங்களுக்குத் தேவையான சகலவிதமான புதிய, பழைய தையல் இயந்திரங்களையும் உதிரிப்பாகங்களையும் பெற்றுக்கொள்ளவும். தையல் இயந்திரங்களை சிறந்த முறையில் திருத்திப் பெற்றுக்கொள்ளவும் மேலும் கணினி உதிரிப்பாகங்களைப் பெற்றுக்கொள்ளவும், சிறந்த முறையில் திருத்திப் பெற்றுக்கொள்ளவும் நம்பிக்கையான ஸ்தாபனம்
0759828828, 0729305150
இல. 56, வெஸ்ட் மார்க்கட், பெரியகடை, யாழ்ப்பாணம்

Aaysha Salwar Choice
Wholesale Dealer in Chudithar Dress Material
யாழ். நகரில் மங்கையர் மனதை கொள்ளைகொள்ளும் புதிய வகை பஞ்சாபித் துணி வகைகளுக்கு, நெற் சல்வார் கும்டும் திரட்வேக் கொட்டன் சில்க் மற்றும் பலவித தெரிவுகளுக்கும்
ஆயிஷா சல்வார் சொய்ஸ்



T.P: 0772289966
125, Grand Bazar, (Power House Road), Jaffna

Aasha Marketing
தரமான வீட்டுப் பாவனைப் பொருட்களை தவணைக்கட்டண அடிப்படையில் பெற்றுக்கொள்ள யாழ். மண்ணில் நம்பிக்கை மிகுந்த நிறுவனம்
11B Muslim College Road, Muslim ward, Jaffna
0770525391

...STAR
...NE REPAIR SHOP
...24 பெரிய கடை, யாழ்ப்பாணம்
...வின வகை கைத்தொலைபேசிகள் ...னையாளர்களும் திருத்துனர்களும்
T.P : 0772727700

REXINE SPOT
ரெக்ஸின் ஸ்பொட்
மோட்டார் வாகனங்களின் உள் அலங்காரப் பொருட்கள்,ரெக்சின்கள் வெல்வெட் வகைகள், காபட் வகைகள், சோபா செட்டிகளுக்குத் தேவையான துணிவகைகள், கட் குசன் வேலைகளுக்குத் தேவையான அனைத்துப் பொருட்கள், மோட்டார் சைக்கிள் சீட் கவர்கள் எல்லாவற்றையும் மொத்தமாகவும்சில்லறையாகவும் பெற நாடவேண்டிய இடம்



32 A, ஜும்மா பள்ளி வீதி, யாழ்ப்பாணம்.
021 2219095, 0776912493

M.S.Jarpir
077-4895797
City Timber Dealers and S.M meeran Sahib Transport
Dealers of Imported Malaysian Swan Timber and Local Timber
No. 119,Manipay Road, Jaffna.
T.P:- 077-4895797
84, 1st Mosqut Lane Colombo - 13

BRIGHT ELECTRICAL
No.E/1,Stanley Road,Jaffna.



Prop: M.H.M
Tel: 0215670145, 0728952489, 0779295699




A.J.Nimalrajan

கணினி பயன்பாட்டு தேவைக்கு வெளியிடப்படும் மென்பொருள்கள் அனைத்துமே விண்டோஸ் ஓபரேட்டிங் சிஸ்டத்தை சார்ந்தே உள்ளது.

இதற்கு காரணம் கணினி பயனாளர்கள் பெருமளவில் விண்டோஸ் ஓபரேட்டிங் சிஸ்டத்தை பயன்படுத்துவதே ஆகும். இவ்வாறு அதிகளவில் பயன்படுத்தப்படும் ஓபரேட்டிங் சிஸ்டத்தில் பெருமளவு குறைபாடுகள் உள்ளன. இதில் முக்கியமான குறை என்னவெனில் விண்டோஸ் ஓபரேட்டிங் சிஸ்டத்தை லொக் செய்யும் வசதி இல்லை.

பொதுவாக பயனர் கணக்கு தொடங்கி கடவுச்சொல் இட்டு பயன்படுத்தி வருவோம். இதுபோன்று பயன்படுத்தினால் பிரச்சினை இல்லை. ஆனால் கடவுச்சொல் உருவாக்காமல் இருந்தால் என்ன ஆகும்.

அந்த கணினியை யார் வேண்டுமானாலும் பயன்படுத்த முடியும். அந்த கணினிக்கு

# விண்டோஸ் ஓபரேடிங் சிஸ்டத்தை லொக் செய்வதற்கு...!



எந்த ஒரு பாதுகாப்பும் இல்லை. அவ்வாறு உள்ள கணினிகளில் கோப்புகளை மறைத்து வைத்து பயன்படுத்தி வருவோம். சில நேரங்களில் ஓபரேட்டிங் சிஸ்டத்தையே பிறர் பயன்படுத்தாதவாறு செய்ய நினைப்போம். அதுபோன்று ஓபரேட்டிங் சிஸ்டத்தினை லொக் செய்ய சில மென்பொருள்கள் உதவி செய்கிறன. அந்த வகையில். ஒரு மென்பொருள்தான் WinLocker.

மென்பொருளை இணையத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து மென்பொருளை ஒப்பன் செய்யவும். இந்த WinLocker அப்ளிகேஷனானது போர்டபிள் அப்ளிகேஷன் ஆகும். பின் விருப்பமான கடவுச்சொல்லை உள்ளிடவும்.

கடவுச்சொல்லை உள்ளிட்டு பின் எந்த போர்மட்டில் இயங்குதளத்தை லொக செய்ய வேண்டும் என்பதை தேர்வு செய்யவும். கடவுச்சொல் மற்றும் USB என்ற இரு வேறுபட்ட முறைகளில் லொக் செய்ய முடியும். அடுத்து Lock windows என்னும் பொத்தானை அழுத்தவும். அவ்வளவுதான் விண்டோஸ் இயங்குதளமானது லொக் செய்யப்படும். நீங்கள் கடவுச்சொல் இட்டு இயங்குதளத்தை லொக் செய்தால் கடவுச்சொல் இட்டால் மட்டுமே ஒப்பன் செய்ய முடியும். USB மூலமாக லொக் செய்தால் USBயை அகற்றினால் மட்டுமே இயங்குதளத்தை பயன்படுத்த முடியும்.

இவ்வாறு விண்டோஸ் ஓபரேட்டிங் சிஸ்டத்தை லொக் செய்வதன் மூலமாக பிறர் நமது கணனியை திருட்டுதனமாக அனுகுவதை தடுக்க முடியும். இதில் முக்கியமான விடயம் என்னவெனில் USB ட்ரைவினை பயன்படுத்தினால் மட்டுமே லொக் செய்ய முடியும்

# நவீன தொழில் நுட்ப வசதியுடன் எச் பி எலைட் நோட்புக் அறிமுகம்

சமீபத்தில் எச்பி நிறுவனம் ஒரு புதிய நோட்புக்கை சந்தையில் களம் இறக்கி இருக்கிறது. இந்த புதிய நோட்புக்கிற்கு எலைட்புக் 2170பி என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. ரூ,69,000க்கு விற்கப்படுகிறது. 8 மணி நேர இயங்கு நேரம் கொண்ட இந்த நோட்புக் மிகவும் குறைந்த எடையில் வருகிறது.

இந்த எலைட் நோட்புக் பல அருமையான தொழில் நுட்ப வசதிகளைக் கொண்டு வருகிறது. இன்டக்ரேட்டட் எச்பி மொபைல் ப்ராட்பேண்ட் வசதி உள்ளதால் இந்த நோட்புக்கில் மிக எளிதாக இன்டர்நெட்டை அக்சஸ் செய்ய முடியும்.

அதுபோல் கார்பரேட் நெட்வொர்க்குகள், இமெயில் போன்றவற்றையும் மிக விரைவாக செய்ய முடியும்.

3ஜி அல்ட்ரா லோ வோல்டேஜ் ப்ரொசஸர் உள்ளதால் இது மிக நீடித்த இயங்கு நேரத்தைக் கொண்டுள்ளது. எச்பி பிட்டைட் பற்றரி லொக் கொண்டிருப்பதால் அதிர்ச்சி மற்றும் கீழே விழுதல் போன்றவ்வற்றால் பாதிப்பு அடைந்தாலும் இதன் பற்றரியும் நோட்புக்கும் அதிகம் சேதம் அடைவதில்லை.





நீங்க புதிதாக வீடு கட்ட திட்டமிட்டுக் கொண்டிருந்தாலோ அல்லது இது சம்பந்தமான தொழிலில் இருந்தாலோ உங்களுக்கு இந்த SWEET HOME 3D மென்பொருள் மிக உபயோகமாக இருக்கும். இது இலவசமாக கிடைக்கும். இண்ட்டீரியர் சொப்ட்வேர். மிக எளிதில் மனதில் தோன்றுவதை வரைபட மாக வரைய உதவும் அதே நேரத்தில் கட்டிடத்தின் முப்பரி மாண தோற்றத்தையும் நமக்கு தரும். மேலும் கதவு ஜன்னல், போன்ற வற்றை பில்ட் இன்னாகவே வைத்திருப்பதும் இந்த மென்பொருளின் சிறப்பாக சொல்லலாம். கட்டில் கதிரை போன்ற இண்டீரியர் பொருட்களின் ஸ்டாண் டர்ட் அளவுகளின் பில்ட் இன்னாக கொடுத்திருப்பதால் நம் தேவைக்கேற்ப பொருத்தி பார்த்து அறையின் அளவுகளை மாற்றி கொள்ளவும் மிக எளிதாக இருக்கிறது.

# நீங்கள் கட்ட நினைக்கும் வீட்டின் வரை படத்தை வரைய உதவும் ஸ்வீற் ஹோம் மென்பொருள்



நீங்கள் ஓட்டோகேட் அல்லது 3D Home Architect உபயோகித்திருந்தால் இந்த மென்பொருளை உபயோகிக்க எந்தவித சிரமமும் இருக்காது. அது தெரியர்தவர்கள் உபயோகிப்பதற்காக சிறிய அறிமுக விளக்கம் மட்டும். இதில் உள்ள அளவுகள் அனைத்தும் செ.மீ. ல் உள்ளீடு செய்ய வேண்டும். 10அடிக்கு 10 அடி எனில் அதை முதலில் செ.மீ.க்கு மாற்றிக்கொள்ளுங்கள் 10 அடி = 305 செ.மீ. மேல் வரிசையில் plan மெனுவில் create walls என்பதை க்ளிக் செய்யவும். பின் வலது பக்க பேனலில் க்ளிக் செய்து அறை அளவுகளை கொடுத்து வரைய ஆரம்பியுங்கள். ஒரு அறை போன்ற அமைப்பு மட்டும் வந்தால் போதும் மற்றவற்றை எடிட் பண்ணும் வசதி இருக்கிறது. எந்த சுவரை எடிட் செய்ய வேண்டும் என விரும்புகிறீர்களோ அந்த சுவரை டபுள் க்ளிக் செய்தால் அந்த சுவரின் அளவுகள் தனி விண்டோவில் தெரியும் அதில் நமக்கு தேவையான நீளம், அகலம் மற்றும் உயரத்தை மாற்றிக் கொள்ளலாம்.

சைட் பாரில் இருக்கும் டோர்ஸ் அண்ட் வின்டோஸ் ஒப்ஷனை பயன்படுத்தி தேவைப்படும் கதவை தேர்ந்தெடுத்து ட்ராக் செய்து ப்ளானில் தேவைப்படும் இடங்களில் வைத்து விடுங்கள். விண்டோவிற்கும் இதே முறையில் செய்யுங்கள். இதில் பெட்ரூம், பாத்ரூம், சமையலறை மற்றும் ஹோலகளுக்கான தளபாடங்கள் இன்பில்ட் ஆக இருப்பதால் நமக்கு தேவையானவற்றை தேர்ந்தெடுத்து வைத்து பார்த்து கொள்ளலாம்.



எடிட் ஒப்ஷனை தேர்வுசெய்து நமக்கு தேவையான அளவுகளை மற்றும் கலர்களை மாற்றி பார்த்து கொள்ளலாம். புதிதாக வீடு கட்டப் போகிறவர்கள் மற்றும் வீடு கட்டிக் கொண்டிருப்பவர்களுக்கு மிகவும் உபயோகமான மென்பொருள். குறிப்பாக இண்ட்டீரியர் டிஸைனுக்கு இது மிகவும் உபயோகமான மென்பொருள். இது முற்றிலும் இலவசமாகவே கிடைக்கிறது



# வேர்ட் 2010 ல் எக்சல் சீட்டை இணைக்க

ms office தொகுப்பின் அண்மைய வெளியிடான 2010-ல் பல்வேறு சிறப்பம்சங்கள் நிறைந்துள்ளது. இதில் ஒரு சிறப்பம்சம், வோர்ட் 2010 ல் இருந்தபடியே எக்சல் சீட்டையும் இணைத்துக்கொள்ள முடியும். அதாவது, வேர்ட் தொகுப்பில் இருந்தபடியே எக்சல் தொகுப்பையும் பயன்படுத்திக்கொள்ள முடியும். சில நேரங்களில் வேர்ட் தொகுப்பில் ஒரு சில கணக்குளை போட வேண்டி வரும். அதுபோன்ற நிலையில் பெரும் சிரமப்படுவோம். சதாரண கணக்கென்றால் பராவயில்லை மிகப்பெரிய அளவிலான கணக்குளை செய்ய வேண்டுமெனில் என்ன செய்வது எக்சல் உதவியைத்தான் நாட வேண்டும். இதற்கு பதிலாக எக்சல் சீட்டையே வேர்ட் தொகுப்பில் பயன்படுத்தினால் எவ்வளவு சுலபமாக இருக்கும்.




வேர்ட் 2010 தொகுப்பில் எக்சல் சீட்டை இணைக்க - முதலில் வேர்ட் 2010 தொகுப்பை ஒப்பன் செய்யவும். அடுத்ததாக Insert என்னும் டேபை தேர்வு செய்யவும். அதில் டேபிள் என்னும் தேர்வை தேர்வு செய்து, அதில் Excelspreadsheet என்பதை தேர்வு செய்யவும்.

தற்போது எக்சல் சீட்டானது வேர்ட் டொக்குமெண்டில் இணைக்கப்பட்டிருக்கும். அதை பயன்படுத்தி எளிமையாக எக்சல் பணிகளையும் வேர்ட் தொகுப்பிலேயே செய்ய முடியும்.



எக்சல் தொகுப்பை இணைத்தவுடன், எக்சல் தொகுப்பிற்கு உண்டான டூல்பாரையும் காண முடியும்.




இந்த டூல்பாரின் உதவியுடன் எக்சல் பணிகளை மிக விரைவாக செய்ய முடியும். வேர்ட் தொகுப்பை பயன்படுத்தி வேலை செய்பவர்களுக்கு இந்த வசதியானது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

# குற்றச்செயல்களை தடுக்க பொதுமக்கள் ஒத்துழைக்கவேண்டும்

## - பொலிஸ் பொறுப்பதிகாரி

(வடமராட்சி)

பொலிஸாருடன் கிராமமட்ட அமைப்புகள் நல்லுறவை பேணி வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நிகழும் குற்றச்செயல்களையும் வன்முறைகளையும் ஒழிக்க முன்வர வேண்டும் என வல்வெட்டித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 23 கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள சிவில் பாதுகாப்பு குழுத்தலைவர்கள், கிராம அலுவலர்கள், மதகுருமார்கள் ஆகியோர்களுக்கான விசேட கூட்டம்.'அண்மையில் பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது. பாலியல்வல்லுறவு சிறுவர் துஷபிரயோகம், களவு, கொள்ளை, கொலை சம்பந்தமாக விளக்கமளிக்கப்பட்ட போதே அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகள் மீது அசட்டையீனமாக தனிமையில் வீடுகளில் இருக்கவிட்டு தமது கடமைகளுக்காக வெளியே செல்வதாலும் அறிமுக மில்லாதவர்களை நம்பிக்கை வைத்து அவர்கள் பொறுப்பில் விட்டு செல்வதாலும் சிறார்கள் துஷ்பிரயோகங்களுக்கு உட்படுகின்றனர்.பெற்றோர்கள் தமது பிள்ளைகளில் கவனமாக கண்ணும் கருத்துமாக இருந்தால் சிறுவர் துஷ்பிரயோகங்களில் இருந்து சிறார்களை மீட்டெடுக்கலாம். மேலும் உங்களது பிள்ளைகள் வீட்டில் இருந்து கல்வி நிலையங்களுக்கோ அல்லது தேவை கருதியோ செல்லும் போது அவதானமாக இருக்கவேண்டும் மற்றும் உளதீரியான முறையில் பாதிப்படையும் வித்தில் தொலைக்காட்சி மற்றும் தொலைபேசி பாவணைகளை தவிர்க்கவேண்டும்.

எனவே எதிர்காலத்தில் உங்களது பிள்ளைகளுக்கும் கிராமத்தில் வாழும் இளைஞர் மற்றும் யுவதிகள் வழிப்புணர்வுகளை ஏற்படுத்தி இளம் சமூதாயத்தை பொறுப்புள்ளதாக மற்றியமைக்க முன்வரவேண்டும்.

எனவே இச் செயற்பாடுகள் குறித்து பொதுமக்கள் விழிப்புடன் இருக்கு மாறும் சரியான தகவல்களை 0212263573 என்ற தொலை பேசி இலக்கத்துடனோ நேரடியாகவோ முறைப்பாட்டை பதிவு செய்யுமாறும் அவர் கேட்டுக்கொண்டார். (116)

# மறவன்புலோ பகுதியில் சிறுதானியப்பயிர்ச்செய்கை

(சிகரம்)

பெரும்போக நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படும் தென்மராட்சி பிரதேசசபைக் குட்பட்ட மறவன்புலோ கிராமத்தில் முதல்முறையாக சிறுதானிய பயிர்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இக்கிராம மக்களின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்துவதற்காக இந்த திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மறவன் புலோ விவசாய சம்மேளனத் தலைவர் சி.திருஞானசம்பந்தர் தெரிவித்தார்.

தற்போது மேற்கொள்ளப்படவுள்ள பெரும்போக நெற்செய்கை அறுவடை முடிந்த பின்னர் இந்த சிறுதானிய பயிர்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும், ஐ.ஓ.எம் நிறுவனத்தின் பல இலட்சம் ரூபாய் நிதி உதவியுடன் மறவன்புலோ விவசாய சம்மேளனுத்திற்குட்பட்ட விவசாய நிலங்கள், கால்நடைகள் உள்நுழையாத வண்ணம் சீமெந்து தூண் போடப்பட்டு கம்பிகளினால் சிறந்த முறையில் அடைக்கப்பட்டு வருகின்றதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதன் மூலம் சிறுதானிய பயிர்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகள் கால்நடைகளின் அழிவிலிருந்து தமது பயிர்களை காப்பாற்றிக்கொள்ள முடியும் என விவசாய சம்மேளனம் தெரிவித்துள்ளது.

பரீட்சார்த்தமாக பனங்காய் குளம் முதல் மறவன்புலோ சகல கலாவல்லி வித்தியாசாலை வீதிவரையான நெற்பயிர்செய்கை நிலங்கள் தற்போது அடைக்கப்பட்டுள்ளதாகவும், இம்முறை சிறுதானிய பயிர்செய்கை வெற்றியடைந்தால் ஏனைய பகுதிகளையும் இத்திட்டத்தில் உள்வாங்கவுள்ளதாகவும் விவசாய சம்மேளனம் மேலும் தெரிவித்துள்ளது.



சட்டத்தரணி சபா இரவீந்திரனின் சட்ட நூலான பாதுகாப்பு குடும்ப வன்முறைச்சட்டம் நூலை பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதிநந்தசேகரன் வெளியீட்டுவைப்பதை காணலாம். (01)

# தென்மராட்சியில் தும்புத் தொழிற்சாலை வேலை வாய்ப்பை வழங்க ஏற்பாடு

(ஜெயந்தி- சிகரம்)

தென்மராட்சி பிரதேசசெயலகத்துக்குட்பட்ட மறவன் புலோ கிராமத்தில் வேலையற்றோருக்கு வேலை வாய்பினை பெற்றுக்கொடுக்கும் நோக்குடன் தும்புத் தொழிற்சாலை ஒன்றினை அமைப்பதற்கான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப் பட்டுவருகின்றன.

மறவன்புலோ மத்தி வெண்மை வாணிபர் சங்கத்திற்கு அருகாமையில் அமைக்கப்படவுள்ள இந்த தும்புத்தொழிற்சாலைக்கான இடத்தினை பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கண்காணிப்பு பகுப்பாய்வு அபிவிருத்தி விசேட உத்தியோகத்தர் பார்வையிட்டுள்ளார்.

யாழ் மாவட்ட செயலக உத்தியோகத்தர்களுடன் மறவன்புலோ கிராமத்திற்கு விஜயம் செய்த அவர், அக்கிராம அபிவிருத்திச் சங்க கட்டத்தில் மக்களை சந்தித்து, தும்புத்தொழிற்சாலைக்கு தேவையான மூலதனங்கள் தொடர்பிலும் அதனை பெற்றுக்கொள்வது குறித்தும் விரிவாக கலந்துரையாடியதுடன், வெகு விரைவில் இந்த தொழிற்சாலையை அமைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதாக உறுதியளித்தார்.

இதன்போது, தும்புத்தொழிற்சாலைக்கு வேண்டிய தும்பினை பெற்றுக்கொள்வதற்கு மறவன்புலோவில் தென்னைகளே இல்லாதபோது எவ்வாறு இங்கு தும்புத்தொழிற்சாலையினை சிறப்பாக செயற்படுத்துவது என அதிகாரிகள் கேள்வியெழுப்பினர்?

இதற்கு பதிலளித்த கிராம அபிவிருத்திச்சங்கத்தின் தலைவர் சி.சிவாகுலன்முரளி, கடந்த காலங்களில் மறவன்புலோ மண்ணில் தென்னை மரங்கள் செறிந்து காணப்பட்டன. எனினும் இடையில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக தென்னை மரங்கள் மட்டுமல்ல மறவன்புலோ கிராமமே முற்றாக பாதிப்புக்குள்ளானது என்று கூறியதுடன், எனினும் தற்போது மீளவும் அபிவிருத்தி கண்டுவரும் மறவன்புலோவில் தும்புத்தொழிற்சாலை ஒன்றினை நிறுவுவதன் மூலம் தற்போது பயிரிடப்பட்டுள்ள தென்னை மரங்களிலிருந்து எதிர்காலத்தில் பயன்பெற்று தும்பு திரிக்கும் நடவடிக்கையினை மேற்கொள்ளமுடியும் என்றும் கூறினார்.

அதுவரை கிராமத்தை அண்டிய கச்சாய், கொடிகாமம், நுணாவில், வரணி உள்ளிட்ட பகுதிகளிலிருந்து தற்காலிகமாக தும்பு மட்டைகளை வரவழைத்து தும்பு திரிக்கும் நடவடிக்கையினை மேற்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், இந்த தும்புத்தொழிற்சாலை நிறுவப்படுவதன் மூலம் ஏராளமான கணவனை இழந்த பெண்கள் மற்றும் வேலையின்றி இருக்கும் பலருக்கு தொழில்வாய்பினை வழங்க முடியும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, இந்த தொழிற்சாலையை அமைப்பதற்கான காணியை மறவன்புலோ மத்தியில் வசித்து இறைபதம் அடைந்த அமரர் சிதம்பரப்பிள்ளை (திரவியம்) ஞாபகார்த்தமாக அரவது குடும்பத்தார் இலவசமாக வழங்க முன்வந்துள்ளனர்.

# பதிவிறக்கப் பெட்டகம்

உலகத்திலை உள்ள எல்லா இனத்தையும் போல தமிழரிட்டையும் ஒரு மரபும் தொடர்ச்சியும் இருந்தது. முந்தி தகப்பன்ரை பெயரை தன்ரை மகனுக்கு வைக்கிறது எங்கடை வழக்கம். அதாலைதான் 'பேரன்' என்ட சொல்லு வந்ததாம். தன்ரை பெயரை உடையவன் என்ற அர்த்தமாம். நாங்க தான் எல்லாத்தையும் விட்டிட்டம். காலம் போகப்போக நாகரி கம் வந்திட்டுது. பாஷனாய் பெயர் வைக்க தொடங்கியிட்டினம்.. அப்பா தன்ரை தேப்பன்ரை பேர் முழுசாய் இல்லாட்டிலும பறவாயில்லை. முதல் எழுத்தாவது மிஞ்சட்டும் என்று நினைச்சிருப்பார் போலை. பிறகு நாங்களும் அதையே தொடந்து செய்தோம். – திருமாவளவன்

இன்றைய தமிழ் எழுத்தாளர்களுக்கு எழுத்து என்பது ஒரு மூலதனம்தான். பழப்பழயாகச் செல்வாக்கு பெறும்வரை அவன் தனியன். செல்லும் வழி இருட்டு என்ற புதுமைப்பித்தனின் கவிதை அவனுக்கு முற்றிலும் பொருந்தும். ஆனால் அதற்குப் பிறகு செல்வாக்கு வளர, வளர ஆட்சிஅதிகாரம், சட்டஒழுங்குக்குப் பக்கத்தில் உள்ள இருக்கைகளைப் பகிர்ந்து கொள்வதில் அவனுக்கு ஒரு கூச்சமும் இல்லை.

உலகெங்கும் எழுத்தாளர்கள் விளிம்புநிலையினரோடும் அதன் நிலைமைகளோடும் தம்மை அடையாளம் கண்டு ஒரு அபாயகரமான முனையில் தங்களை வைத்திருக்கிறார்கள். அந்த அனுபவத்தின் மூலவளங்கள் வழியாக வரலாற்றுமௌனத்தைப் பிரதிபலிப்பவர்களாக அவர்கள் போராடிக் கொண்டிருப்பதைக் காணமுடிகிறது. அவர்கள் சிறுபான்மையினராக இருப்பினும், இத்தரப்பின் தொடர்ச்சியாக அதிகாரத்திலிருந்து தொடர்ந்து விடுவித்துக்கொண்டும் புதுப்பித்துக் கொண்டும் இருக்கிறார்கள்.

– ஷங்கர்ராமசுப்ரமணியன்

இப்போது தாதாக்கள், ரவுடிகள் என்று அழைக்கப்படும் மனிதர்களின் குணாம்சங்களுக்குச் சற்றும் வழுவாமல் வாழ்ந்தவர்கள் அந்தக்கால மன்னர்கள். அத்தகைய மன்னர்களின் புகழைப் பாடி அவர்களிடமிருந்து பரிசு பெற்ற அதே ரத்தம் தான் காலம்காலமாக இன்னும் ஓடிக்கொண்டிருக்கிறது போலும்! – சாரு நிவேதிதா

20 ஆண்டுகளுக்கு முன்னர் தமது வழக்கமான வீர ஆவேசத்துடன் 'முற்போக்கு சக்திகள்' பாபர் மசூதியை தொட்டுப் பார்க்க இந்துதத்துவ சக்திகளை அனுமதிக்க மாட்டோம் என மைக் முன்னால் வெடித்தார்கள், கொந்தளித்தார்கள், தீப்பிழம்பானார்கள். தமிழகத்திலிருந்து சென்ற ஒரு செங்கல் வண்டியைக்கூட யாரும் மறித்ததாகச் செய்தியில்லை. ஈழத் தமிழர்கள் முதல் இஸ்லாமியர்வரை இப்படி வீர வசனங்களால் உசுப்பேத்திவிட்டு பிரச்சினை முற்றும்போது காணாமல் போகும் தொடைதட்டிகளின் செயல்பாடுகள் வரலாற்று பூர்வமாக ஆராயப்பட வேண்டும். – காலச்சுவடு கண்ணன்

மதம், மொழி, சாதி அடிப்படைகளில் மக்களைத் திரட்டும் அரசியல் செயல்பாடுகளை இதுகாறும் அடையாளம் மறுக்கப் பட்டவர்களின் அரசியல் இருப்பை உணர்த்தும் முயற்சி என எல்லோரும் பாராட்டினோம். ஆனால் அடையாள அரசியல் இரு பக்கங்களும் கூரான கத்தியைப் போன்றது என அமார்த்யசென் போன்றோர் எச்சரித்தும் வருகின்றனர். ஒரு குறிப்பிட்ட அடையாளத்தின் கீழ் மக்களைத் திரட்டும் போது அந்த அடையாளத்தைத் தாண்டி வேறு யாரும் தம்மிடம் வரமாட்டார்கள் என்பது உறுதியாகிவிடுகிறது. இந்நிலையில் தம்மிடம் வருபவர்களை அதிக பட்சமாக உறுதிப்படுத்தும் பொருட்டு மற்றவர்களிடமிருந்து அவர்கள் பிரித்து நிறுத்தப்படுகின்றனர். ஆக, அரசியல் என்பது "மற்றவர்களுடன் வாழும் கலை" (polity) என்பது போக மற்றவர்களை வெறுக்கும் செயல்பாடாக மாறிவிடுகிறது. – அ.மார்க்ஸ்

அறிவு என்பது ஒவ்வொரு தனி நபருக்கும் உரியது. இருக்க வேண்டியது. அதே சமயம் ஒரு சமூகத்துக்கும் பொதுப் புத்தி என்று ஒன்று இருக்கிறது. இதை வடிவமைப்பதில் அரசு, தனியார் அமைப்புகள், மீடியா முதலியவை பங்கு வகிக்கின்றன. புத்திக்கு ஒரு விஷயம் தவறு என்று தெரிந்தாலும் உணர்ச்சி அடிப்படையில் அதை செய்யும் தவறை தனி மனிதனும் செய்கிறான். சமூகமும் செய்யும். நம் சமூகத்தின் பொதுப புத்தியில் இல்லாத விஷயம் மனித உயிர் மீதான அக்கறை என்றே எனக்குத் தோன்றுகிறது. – ஞாநி

# கடூழிய சிறைத்தண்டனை இரத்து மீள்விசாரணைக்கு உத்தரவு

## காலமாற்றத்தினால் கரையும் தீர்ப்புக்கள்

(திருநெல்வேலி)

திருட்டுக் குற்றம் ஒன்றில் சந்தேகநபராக பெயர் குறிப்பிடப்பட்டிருந்த ஒருவருக்கு வழங்கப்பட்ட சிறைத்தண்டனை யாழ்.நீதவான் மா. கணேசராசாவினால் இரத்துச்செய்யப்பட்டு மீண்டும் புதிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் திருநெல்வேலி தலங்காவல் பிள்ளையார் கோவில் ஒழுங்கையில் உள்ள வீடு ஒன்றில் 2001 ஆம் ஆண்டு யூன் மாதம் தங்க நகைகள் சில களவாடப்பட்டது சம்பந்தமாக கோப்பாய் பொலிஸாரால் 5 பேர் மீது யாழ். நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இவர்களில் ஒருவரான ஐயாத்துரை சிவதாசன் என்பவர் நீதிமன்றுக்கு சமூகமளிக்காத நிலையில் அவர் இல்லாமலேயே வழக்கு நடைபெற்று கடந்த 21.06.2012 இல் அவருக்கு யாழ். நீதவான் மா. கணேசராசா 2 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்திருந்தார்.

ஆனால் கடந்த 11 வருடங்களுக்குப் பின்னர் சென்ற மாதம் 23 ஆம் திகதி கோப்பாய் பொலிஸாரால் இவர் கைதுசெய்யப்பட்டு யாழ். நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் நீதவான் முன்னிலையில் இவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி மு.றெமிடியஸ் நீதிமன்றுக்கு சந்தேகநபர் ஆஜராக முடியாமைக்கான காரணங்களைச் சமர்ப்பித்தார்.

சந்தேகநபர் இயக்கத்தினால் பிடிக்கப்பட்டு வன்னியில் வைக்கப்பட்டிருந்தார் எனவும் யுத்தம் முடிவுற்றதன் பின்னர் வவுனியா நலன்புரி முகாமில் இருந்துள்ளார் என்றும், முகாமிலிருந்து விடுவிகப்பட்டு சவுதி அரேபிய நாட்டுக்கு சென்று வந்தார் எனவும் சமர்ப்பணம் செய்து அதற்கான ஆதாரங்களாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் கடிதம், கடவுச்சீட்டு மற்றும் அடையாள அட்டை என்பவறைக் காண்பித்து அவரைப் பிணையில் விடும்படியும், புதிய விசாரணைக்கு உத்தரவிடும்படியும் குற்ற நடவடிக்கை முறைக்கோவை 192 உப பிரிவு 2 இன் கீழ் விண்ணப்பித்தார்.

வழக்குக்கு அவர் சமூகமளிக்க முடியாமைக்கு அவரது கட்டுப்பாட்டுக்கு அப்பால் அவர் இருந்தமையே காரணம் எனவும் சமர்ப்பணம் செய்தார்.

இதனையடுத்து சந்தேகநபருக்கு ஏற்கனவே விதிக்கப்பட்டிருந்த 2 வருட கடூழிய சிறைத்தண்டனையை இரத்துச்செய்த நீதவான் மா.கணேசராசா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான 2 ஆட் பிணையில் விடுவித்து புதிய விசாரணைக்கு உத்தரவிட்டு வழக்கை அடுத்த மாதம் 28 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

(137)

# பொன்னாடை அணிவித்து கௌரவம்



(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கு வேலணை சரவணை செல்வக்கதிர்காம முருகன் ஆலய பரிபாலன சபையினர் பொன்னாடை போர்த்தி, கௌரவித்துள்ளனர்.

அமைச்சரின் யாழ்.செயலகத்திற்கு கடந்த வியாழக்கிழமை வருகை தந்த மேற்படி ஆலய பரிபாலன சபையினர் அமைச்சருக்கு பொன்னாடை போர்த்தியும் வாழ்த்துப்பா வழங்கியும் கௌரவித்தனர்.

கடந்த மாதம் 13 ஆம் திகதி சரவணை செல்வக் கதிர்காம முருகன் ஆலயத்திற்கான புதிய ஸ்தூபித்தாபனம் செய்து வைக்கப்பட்டதைத் தொடர்ந்து 15 ஆம் திகதி மகாகும்பாபிஷேகமும் இடம்பெற்றது.

இக்கோயிலின் புனரமைப்பு மற்றும் வளர்ச்சியைக் கருத்தில் கொண்ட ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் பல இலட்சக் கணக்கான ரூபா நிதியுதவியை ஏற்கனவே வழங்கியுள்ளார்.

இந்நிலையில் இவ்வாலயத்தின் வளர்ச்சிக்காக நிதியுதவி வழங்கி வருகின்றமைக்காகவும், புதிய ஸ்தூபித்தாபனத்தை செய்து வைத்தமைக்காகவும் அமைச்சர் அவர்களுக்கு இக்கௌரவிப்பு வழங்கப்பட்டது. இதன்போது ஆலய பரிபாலன சபைத் தலைவர் தேவன் உள்ளிட்ட பலரும் உடனிருந்தனர்.

# அம்பிகைநகர் வீதி புனரமைப்பு வேலணை பிரதேசசபை நடவடிக்கை



வேலணை பிரதேச சபையினால் அம்பிகைநகர் 'ப' வீதி குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிவருத்தி நன்கொடைநிதி மூலம் புனரமைப்புச் செய்யப்படுகின்றது. இதனை வேலணை பிரதேச சபையின் தவிசாளர் திரு சி.சிவராசா அவர்கள் நேரடியாகச் சென்று பார்வையிட்டார் இவ்விதி புனரமைப்புச் செய்வதற்கு வீதிகளை அகலிப்புச் செய்வதில் மக்கள் ஆர்வம் காட்டினார்கள் அபிவிருத்தி வேலைத்திட்டங்களானது எமது கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் முயற்சியால் முன்னெடுக்கப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது (85)

# வலிகாமம் மேற்கில் பனை நாற்று நடுகை

(யாழ்ப்பாணம்)

பனை நாற்றுக்களை நாட்டுவதற்கு வலிகாமம் மேற்கு பகுதியில் விசேட செயற்றிட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

இச்சசெயற்றிட்டத்தின் முதற்கட்டமாக பனை நாற்றுக்களை நாட்டுவதற்கு மிகவும் பொருத்தமான இடங்களை அடையாளம் காணும் நடவடிக்கைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டிருக்கிறது.

கடற்கரையோரங்கள் மற்றும் அரச காணிகள், தரிசு நிலங்கள் போன்றவற்றில் பனை நாற்றுக்களை நாட்டுவதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது. இத்திட்டத்துக்கான ஏனைய முன் ஆயத்த நடவடிக்கைகள் சிலவும் தற்போது மேற்கெள்ளப்பட்டிருக்கிறது.

# பெண் நாய்களுக்கு கருத்தடைச் சத்திர சிகிச்சை

## – வல்வெட்டித்துறை நகரசபை நடவடிக்கை

வல்வெட்டித்துறை நகர சபைக்குட்பட்ட பிரதேசங்களில் கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள் அதிகரித்து வருவதாகக் கிடைத்த முறைப்பாடுகளை அடுத்து அவற்றைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை நகரசபை நிர்வாகம் எடுத்து வருவதாக நகர பிதா நடராஜா அனந்தராஜ் தெரிவித்துள்ளார். மகிந்த சிந்தனையில் கட்டாக்காலி நாய்களையும் கவனிப்பாரற்று நோய்வாய்ப்பட்ட நாய்களையும் கொல்லக் கூடாது என்ற கட்டுப்பாடுகள் கடுமையாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருவதால் நாய்களின் தொல்லைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அவற்றின் இனவிருத்தியைக் குறைப்பதற்கான முயற்சியாக பெண் நாய்களுக்கு கருத்தடைச் சத்திர சிகிச்சை வல்வெட்டித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் ஒலிபெருக்கி மூலம் அறிவித்து சுகாதாரப் பகுதியினரால் மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து இரண்டு நாட்கள் இடம் பெற்ற சத்திர சிகிச்சை முகாம்களில் வல்வெட்டித்துறை நகரச்சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் 104 பெண் நாய்களுக்கு கருத்தடைச் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். பெண்நாய்களுக்குக் கருத்தடைச் சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்ட அதேவேளை விசர்நாய்க்கடி தடுப்பு மருந்தும் ஏற்றப்பட்டதாக சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர். செந்தூரன் தெரிவித்தார்.

அதே வேளை குடியிருப்பாளர்கள் தமது வீட்டு நாய்களுக்கு நகர சபையில் இருந்து அவற்றிற்கான உரிமத் தகடுகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. உரிமத்தகட்டினைப் பெற்றுக் கொள்ளாத நாய்களையும், தெருவில் நடமாடும் கட்டாக்காலி நாய்களையும் பிடித்து நாய் வளர்ப்பு நிலையங்களுக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். பொது மக்களுக்கு நாய்க்கடிகளினால் ஏற்படும் தொல்லைகளையும், வீதி விபத்துக்களையும் தவிர்க்கும் வகையில் குடியிருப்பாளர்கள் ஒவ்வொருவரையும் நகர சபை நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பை வழங்குமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

# கள்ளுத்தவறனையின் வருமானம் வீழ்ச்சி; தடுத்து நிறுத்த நடவடிக்கை தேவை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் கள்ளுத் தவறனைகள் பல்வேறு காரணங்களுக்காக பூட்டப்பட்டுள்ளதாகவும் வருமானம் வீழ்ச்சி கண்டுள்ளதாக பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்க பொது முகாமையாளர் ரி.இராசேந்திரம் கவலை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளருக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

கள்ளுத்தவறனை என்பது சமுதாயரீதியான நிறுவனம். இதில் பணியாளர்கள் முக்கியமாக சீவல்தொழிலாளிகள் இன்றைய கால கட்டத்தில் பல்வேறு தொழில்களுக்காக போகவேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

சீவல்தொழிலாளிக்கு வருமான அதிகரிப்பின்மையே யாகும். இதனாலே சீவல் தொழிலாளியின் விகிதம் குறைந்து மாற்றுத் தொழில் செய்து வருகின்றனர். 'அத்துடன தென்னிலங்கையிலிருந்து விதம் விதமான சாராயங்கள் பல்வேறு விலைகளில் விற்பனை செய்வதாலும், பாவனையாளர்களின் பாவனை குறைந்துள்ளது எனவும் பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் கட் டுப்பார்ட்டில் இருக்கும் கள்ளுத்தவறனைகள் மதுவரித் திணைக்களத்தின் உதவியுடன் மற்றும் அரச சார்பான திணைக்களம், கிராம அமைப்புக்களின் உதவியுடன் அமைக்கப்பட்டிருந்த கள்ளுத்தவறனைகள் பாவனையாளர்களின் அநாகரிக செயற்பாடுகளாலும் அமைக்கப்பட்ட கள்ளுத்தவறனைகள் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்காத போதிலும் கிராமமட்ட பொது அமைப்புக்களின் அநாவசியமற்ற செயற்பாட்டினாலும் பல கள்ளுத்தவறனைகள் மூடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்குட்பட்ட கிராமங்களில் 2011 ஆம் ஆண்டுக்கு முன் 20 கள்ளுத்தவறனையும், 2011 ஆம் ஆண்டுக்கு பின்னர் 11 கள்ளுத்தவறனையும் தற்போது 6 கள்ளுத்தவறனைகளும் இறுதியாக செயற்பட்டு வருவதாகவும் இதில் கெருடாவில், பொலிகண்டி, கற்கோவளம், அல்வாய் மேற்கு, அல்வாய் வடக்கு, வராத்துப்பளை ஆகிய 6 இடங்களிலேயே அதுவும் இவ்விடங்களில் சீவல் தொழிலாளர்கள் செறிந்து வாழும் பிரதேசமாகையால் இது சிறப்பாக இயங்கி வருகிறது என்றும் எதிர் காலத்தில் பனை தென்னை வளங்களுடைய பயன்பாடுகள் வீழ்ச்சி காணும் நிலை எமது பிரதேசத்தில் உருவாகிறது இதற்காக மீள ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை செய்து வருவதாகவும் அது நிச்சயம் வெற்றியளிக்கும எனவும் தெரிவித்தார். (116)

விஞ்ஞானம்

க.பொ.த.(சாதாரணதர)
மாதிரிப் பரீட்சை வினாத்தாள்
கல்வி முரசு

34 | T | II
Grade - 11

ஆசிரியர் :
S.T.ஜனார்த்தனன்
(Bsc)

*(தொடர்ச்சி...)*

## பகுதி II

2)




படத்தில் உள்ளவாறு உபகரணத் தொகுதியைத் தயார் செய்யவும் பின் ஒரு எரிகுழாயினுள் மட்டும் மெல்லிய மக்னீசியம் நாடாவை இடவும். பின் இரு எரிகுழாயையும் ஒரேநேரத்தில் வெப்பமேற்றப்படும்.

i. மக்னீசிய நாடாவை வளியில் வெப்பமேற்றும்போது உமது அவதானங்கள் இரண்டு தருக?

ii. மக்னீசிய நாடாவை வளியில் வெப்பமேற்றும்போது நடைபெறும் இரசாயனத் தாக்கத்திற்கான சமன்பாட்டை எழுதுக?

iii. மக்னீசிய நாடாவை வெப்பமேற்றும்போது
a) தோன்றும் விளைபொருள் எவ்வாறு அழைக்கப்படும்?

b) இதனை நீரில் கரைக்கும்போது கரையுமா?

c) இதன் நீர்க்கரைசலுக்கு ph தாளை இடும்போது உமது அவதானம் யாது?

d) மேலே (c) இல் குறிப்பிட்ட நிறமாற்றத்திற்குக் காரணம் யாது?

iv. உலோகங்களை வளியில் வெப்பமேற்றும்போது
a) ஏன் ஒரேயொரு விளைபொருளைத் தருகின்றன?

b) ஏன் நிறை அதிகரிப்பை காட்டுகின்றன?

3) ஆவர்த்தன அட்டவணை ஒன்றின் ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது. இதில் பயன்படுத்தப்பட்ட குறியீடுகள் நியம குறியீடுகள் அல்ல. இதனைப் பயன்படுத்தி கீழே உள்ள வினாக்களுக்கு விடை தருக.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| A | | | | | | |
| | | | B | C | D | E |
| F | | G | | H | I | |
| J | | | | | | |

i. இரண்டாம் ஆவர்த்தனத்தைச் சேர்ந்த மூலகங்களைத் தருக?

ii. விழுமிய வாயுக்கள் இரண்டு தருக? அவற்றின் வலுவள்வு பூச்சியமாக இருப்பது ஏன்?

iii. மூலகங்கள் D,F,G ஆகியன விழுமியவாயு இலத்திரன்-நிலையமைப்பை பெறும் விதங்களை எடுத்துக்காட்டுக?

iv. மூலகம் F உம் மூலகம் C உம் சேர்ந்து உருவாக்கும் சேர்வையின் சூத்திரத்தை எழுதுக?

v. மூலகம் B யும் மூலகம் A யும் சேர்ந்து எவ்வகையான பிணைப்பை தோற்றுவிக்கும்? பிணைப்பில் ஈடுபடும் விதத்தை அணுக்கட்டமைப்பு மூலம் எடுத்துக் காட்டுக?

4) புவியோட்டில் பொதுவாக தாக்குதிறன் கூடிய மூலகங்கள் தூய உலோகமாக காணப்படாது தாதுக்களாக காணப்படும்.

i. கீழே தரப்பட்டுள்ள உலோகங்களின் அவை காணப்படும் தாதுக்கள், பிரித்தெடுப்பு முறை என்பவற்றைத் தருக?

| | உலோகங்கள் | தாது | பிரித்தெடுப்பு முறை |
|---|---|---|---|
| 1. Na | | | |
| 2. Fe | | | |
| 3. Cu | | | |
| 4. Al | | | |

ii. உலோகப் பிரித்தெடுப்பு முறைகள் மூன்றையும் தருக?

iii.




a) மேலே தரப்பட்டுள்ள உபகரணத்தை பெயரிடுக?

b) இங்கு A யினால் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் புகுகின்ற மூன்று பதார்த்தங்கள் தருக?

c) மேலுள்ள உபகரணத்தினுள்ளே உண்டாகின்றதெனவும், திரவவடிவில் இருப்பனவுமான இருவினைபொருள்கள் B,C எனக் குறிக்கப்பட்டுள்ளன. அவற்றைக் குறிப்பிடுக?
B : ..................    C :..................

d) இரும்பைப் பிரித்தெடுக்க இரும்புத்தாது பயன்படுத்தப்படும்
i. இரும்புத்தாதில் இருந்து இரும்பை பெற்றுக்கொள்வதை சமன்படுத்திய இரசாயனச் சமன்பாட்டில் தருக:

ii. 2500 kg இரும்பைப் பெற்றுக்கொள்ள தேவையான இரும்புத்தாதின் அளவைக் கணிக்க? (Fe - 56 O -16)

iii. மின்வடங்கள் செப்பு உலோகத்தினால் ஆக்கப்பட்ட போதிலும் மின்குமிழின் இழை தங்தேனினால் ஆக்கப்பட்டிருக்கும் இதனை விஞ்ஞான ரீதியில் விளக்குக?

iv. சோடியத்தை வளியில் திறந்து வைக்கும்போது பின்வரும் மாற்றங்களுககு உட்படுத்தப்படுகின்றது.

$4Na + O_2 \rightarrow 2Na_2O$
$Na_2O + H_2O \rightarrow 2NaOH$
$NaOH + CO_2 \rightarrow 2Na_2CO_3 + H_2O$

23 g தூய சோடியத்தை வளியில் திறந்து வைக்கும்போது சோடியம் முற்றாக சோடியங்காபனேற்றாக மாற்றப்படும் எனின் உருவாகும் சோடியங் காபனேற்றின் திணிவு யாது?

7) 1. கீழேயுள்ள படம் கார் ஒன்றின் 2000டீ முன்னோக்கிய செலுத்தல் விசையைக் காட்டுகின்றது. காரின் சில்லுகளுக்கும் தெருவின் மேற்பரப்புக்கும் இடையேயான உராய்வுவிசை 400டீ ஆகும். காரின் திணிவு 800மப ஆகும்.




i. காரின் ஆர்முடுகலைக் கணிப்பதுடன் அதன் திசையையும் குறிப்பிடுக?

ii. ஓய்விலிருந்து 10 செக்கன்களுக்கு ஆர்முடுகுமாயின் 10 செக்கன்கள் முடிவில் அதன் இறுதி வேகத்தைக் கணிக்க:

iii. 10 செக்கன்களில் அதன் சராசரிவேகத்தை காண்க?

iv. 10 செக்கன்களில் கார் இயங்கிய தூரத்தைக் காண்க?

v. உமது கணிப்புக்களுடன் சம்பந்தப்பட்ட வகையில் நீர் மேற்கொள்ளும் எடுகோள்களைத் தருக.

2) 200g திணிவுடைய செப்புகலோரிமானி ஒன்றிலுள்ள 2 kg நீரினுள் வலுத்தெரியாத அமிழ்ப்பு வெப்பமாக்கி ஒன்றானது தொடர்ந்து 10 நிமிடங்கள் இயங்கவிட்டபோது நீரின் வெப்பநிலை $50^0$ C க்கு உயர்ந்தது. (சூழல் வெப்ப இழப்பு புறக்கணிக்கத்தக்கது)




- நீரின் தன்வெப்பக் கொள்வனவு 4300$Jkg^{-1}$
- செப்பின் தன்வெப்பக் கொள்ளளவு 600$Jkg^{-1}C^{-1}$

i. மூன்று வெப்ப ஊடுகடத்தல் முறைகளையும் குறிப்பிட்டு கலோரிமானியில் அம்மூன்று முறைகளின் ஊடாக வெப்ப இழப்பை இழிவாக்க மேற்கொள்ளப் பட்டுள்ள நடவடிக்கைகளையும் குறிப்பிடுக?

ii. செப்புப்பாத்திரம் பெற்ற வெப்பசக்தியின் அளவைக் கணிக்குக?

iii. நீர் பெற்ற வெப்பத்தின் அளவைக் காண்க?

iv. அமிழ்ப்பு வெப்பமாக்கியின் வெப்பவழங்கல் வீதத்தை கணிக்குக?

v. அமிழ்ப்பு வெப்பமாக்கியின் ஊடாகப் பாயும் மின்னோட்டத்தின் பருமன் யாது?

3) வான், கார் என்ற இரு சம ஆர்முடுகலுடன் நேர்கோட்டுப் பாதை வழியே செல்லும் வான், கார் தொடர்பான வரைபு கீழே காட்டப்பட்டுள்ளது.




i. வானின் ஆர்முடுகலின் பெறுமானம் யாது?

ii. கார் அதன் நான்காவது நிமிடத்தில் அதன் வேகம் ($V_1$) யாது?

iii. காரைவிட வான் பயணம் செய்யக்கூடிய தூரம் எவ்வளவு?

iv. 100 g திணிவுடைய பலகை (B) ஒன்றானது படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு தளம் (A) ஐ நோக்கி அழுத்தப்பட்டு திடீரெனக் கைவிடும்போது மீண்டும் பலகை 10 cm உயரத்திற்கு மேலெழுந்தது. (புவியீர்ப்பு ஆர்முடுகல் - 10 $ms^{-2}$ ஆகும்)




a) இச்செயற்பாட்டின்போது நடைபெறும் சக்தி மாற்றம் யாது?

b) வினா (a) இல் நடைபெறும் சக்தி மாற்றத்திற்கு ஒப்பான சக்திமாற்றம் நடைபெறும் செயற்பாடு இரண்டைக் குறிப்பிடுக?

c) முற்றாக அழுத்தப்பட்ட நிலையில் பலகையில் காணப்படும் அழுத்த சக்தியின் அளவைக் காண்க?

d) திடீரென கையைவிடும்போது பலகையின் தொடக்க வேகம் யாது?

v. இலத்திரனியல் சாதனங்கள் பற்றி அறிந்திருந்தால் தற்கால மனிதனுக்கு இன்றியமையாதது ஆகும்.




i. மேலே தரப்பட்டுள்ள வரிப்படங்களில் காணப்படும் ஒவ்வொன்றினதும் பெயரை எழுதுக.

A :......................... D :.........................
B :......................... E :.........................
C :.........................

ii. பின்வரும் உபகரணத்தின் மின்னோட்டம் பாயும் திசையை குறித்துக் காட்டுக?




iii. இரு 1.5 V உலர்கலங்கள், சீராக்கும் இருவாயி, 2.5 V மின்குமிழ் ஆகியவற்றைப் பயன்படுத்திச் சீராக்கும் இருவாயினூடாக மின்னோட்டம் ஒரு திசையில் மாத்திரம் பாய்கிறது என்பதைக் காட்டுவதற்கு உகந்த இரு சுற்றுக்களின் பரிப்படங்களை நியம குறியீடுகளை பயன்படுத்தி வரைக? (எந்த மின்சுற்றில் மின்குமிழ் ஒளிரும் என்பதை அதற்கு கீழே எழுதுக)

iv. ஆடலோட்டத்திற்கும் நேரோட்டத்திற்கும் இடையிலான வேறுபாட்டை விளக்குக.

5. மின்னோட்டத்தின் அலைவடிவத்தை அவதானிக்கப் பயன்படுத்தப்படும் உபகரணம் எது? இவ் உபகரணத்தின் மூலம் கிடைக்கும் ஆடலோட்ட வடிவத்தையும், அது சீராக்கும் இருவாயியின் ஊடாக அனுப்பப்படும்போது கிடைக்கும் அலை வடிவத்தையும், முழு அலைசீராக்கலுக்கு உட்படுத்தப்படும் போது கிடைக்கும் அலை வடிவத்தையும் வரிப்படங்களில் காட்டுக?

## பகுதி II (B)
### பகுதி -அ

01) a) தாவரங்களில் இலிங்கமுறை இனப்பெருக்கத்திற்காக விருத்தியடைந்துள்ள விசேட கட்டமைப்பு பூ ஆகும். பூவொன்றின்நெடுக்கு வெட்டுமுகம் கீழே படத்தில் காட்டப்பட்டுள்ளது.




i. A,B,C,D ஆகிய நான்கு பகுதிகளையும் பெயரிடுக?
ii. இதில் எவ்வெப்பகுதிகள் சேர்ந்து ஆணகம் எனப்படுகின்றது?
iii. பூக்களில் பூச்சிகள் காற்று என்பன மகரந்தச் சேர்க்கைக்கு பெரிதும் உதவுகின்றன.
அ) மகரந்தச் சேர்க்கை என்றால் என்ன?
ஆ) காற்றால் மகரந்தச் சேர்க்கை அடையும் பூக்களில் E,A ஆகியன கொண்டுள்ள சிறப்பியல்புகள் ஒவ்வொன்று எழுதுக?

iv. இரவில் மலரும் பூக்கள் பெரும்பாலும் வெண்ணிறமானவை, மணமுள்ள வையாக இருக்கின்றன. இதனால் கிடைக்கும் அனுகூலம் யாது?

i. சோளத் தாவரப் பூவில் மகரந்தச் சேர்க்கைக்கு உதவும் காரணி எது?

vi. மகரந்தச் சேர்க்கையின் பின் கருக்கட்டல் நிகழும்

a) கருக்கட்டல் என்றால் என்ன?
b) கருக்கட்டலின் பின் D என்னவாக மாறும்?

b) தாவரங்களின் தொடர்ச்சியான நிலவுகைக்காக இனப்பெருக்கம் நடைபெறுகின்றது.
i. இலிங்கமுறை, இலிங்கமில் முறை இனப்பெருக்க முறைகளுக் கிடையிலான வேறுபாடுகள் இரண்டு தருக?
ii. இலிங்கமில் இனப்பெருக்கமுறை மூலம் நாம் பெறும் இரு நன்மைகளைக் குறிப்பிடுக?
iii. தாவரங்களினதும், விலங்குகளினதும் ஆண்புணரி, பெண்புணரி ஆகியவற்றை தனித்தனியே தருக?
iv. வித்துக்கள் பழங்கள் பரவல் அடைய வேண்டியதன் அவசியம் யாது?

(தொடரும்...)

# சென்னையில் வேகமாகப் பரவியது வதந்தி ஊர் திரும்பத் துடிக்கும் மக்கள்



(சென்னை)

வடகிழக்கு மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் தாக்கப்படுவதாக சென்னையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் வதந்தி பரவியதைத் தொடர்ந்து சென்னையில் உள்ள அசாம் உள்ளிட்ட வடகிழக்கு மாநிலத்தவர் இடையே பெரும் பீதி ஏற்பட்டுள்ளது.

பெங்களூரில் பரவிய வதந்தி சென்னையிலும் பரவி வருவதால் இங்குள்ள வட கிழக்கு மாநில மக்கள் கலக்கம் அடைந்துள்ளனர். இங்குள்ள இளைஞர்கள், தொழிலாளர்கள், பெண்கள் தங்கள் குழந்தைகளுடன் சொந்த ஊருக்கு புறப்பட்டு செல்கிறார்கள். இதனால் சென்ட்ரல் ரெயில் நிலையத்தில் கூட்டம் நிரம்பி வழிந்தது.

வியாழக்கிழமை இரவு தொடங்கி நேற்று 3ஆவது நாளாக பதட்டம் நிலவி வருகிறது. வடகிழக்கு மாநில மக்கள் பயப்பட வேண்டாம். பீதி அடைய வேண்டாம், போதுமான பாதுகாப்பு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாக முதலமைச்சர் உறுதியளித்தார். ஆனாலும் நேற்று இரவும் சென்ட்ரல் ரெயில் நிலையத்தில் கூட்டம் கூடியது. அவர்களை போலீசார் எவ்வளவோ சமாதானப்படுத்தியும் கேட்கவில்லை.

அவர்கள் சொந்த ஊர்களுக்கு திரும்புவதில் குறியாக இருந்தனர். இதனால் ரெயில்வே அதிகாரிகளும் பொலிசாரும் அவர்களை சொந்த ஊருக்கு அனுப்ப ஏற்பாடு செய்தனர். பெங்களூரில் இருந்து சென்ட்ரல் வழியாக கவுகாத்திக்கு 4 சிறப்பு ரெயில்கள் நேற்று இரவு இயக்கப்பட்டன. அந்த ரெயில்கள் சென்ட்ரல் வந்தபோது நிரம்பி வழிந்தது. சுமார் 4 ஆயிரம் பேர் அதில் பயணம் செய்தனர். சென்னையில் உள்ள வடமாநிலத்தவரை ஏற்ற முடியாததால் கூடுதல் பெட்டிகள் இணைக்கப்பட்டன.

அதில் 8 ரெயில்கள் கூடுதலாக இயக்கப்பட்டன. ஒவ்வொரு ரெயிலிலும் 2 பெட்டிகள் கூடுதலாக இணைக்கப்பட்டு சென்னையைச் சேர்ந்த வடகிழக்கு மாநிலத்தவர்களை ஏற்றினார்கள். நள்ளிரவு 12 மணிக்கு ஒரு சிறப்பு ரெயிலும் அதிகாலை 2 மணிக்கு ஒரு ரெயிலும் காலை 6.30 மணிக்கு மற்றொரு ரெயிலும் இதைத் தொடர்ந்து காலை 8.45 மணிக்கு இன்னொரு சிறப்பு ரெயிலும் சென்ட்ரலில் இருந்து புறப்பட்டு சென்றன.

இந்த 4 ரெயில்களிலும் சென்னையைச் சேர்ந்த சுமார் 2 ஆயிரம் பேர் பயணம் செய்தனர். நேற்று காலை 2 ஆயிரம் பேரும் நேற்று முன்தினம் இரவு 1,500 பேரும் சென்னையில் இருந்து சென்றுள்ளதாக அதிகாரிகள் தரப்பில் தெரிவித்தனர். இதற்கிடையில் சென்ட்ரல் நிலையத்துக்கு வந்த வடகிழக்கு மாநிலத்தவர்களுக்கு பொலீஸ் சார்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

சென்னையை விட்டு வெளியேற வேண்டாம் என்று ஒலிபெருக்கி மூலம் வேண்டுகோள் விடுத்தனர். அவர்களுக்கு உதவி செய்யும் வகையில் காவல் உதவி மையமும் தொடங்கப்பட்டுள்ளது. வடகிழக்கு மாநிலத்தவர்களுக்கு எந்த உதவி தேவைப்பட்டாலும் 98402 95100, 96770 66100, 97890 88100 ஆகிய எண்களில் 24 மணி நேரமும் தொடர்பு கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. சென்ட்ரல் நிலையத்திற்கு நேற்று மிக குறைந்த அளவில்தான் வடகிழக்கு மாநிலத்தவர்கள் வந்து இருந்தனர்.

ஆனாலும் அந்த எண்ணிக்கை அதிகமாக கூடுமானால் சிறப்பு ரெயிலோ, அல்லது கூடுதல் பெட்டியோ இணைக்கப்படும் என்று தெற்கு ரெயில்வே தெரிவித்துள்ளது.

## விலை கொடுத்து வாங்கிய வம்பு பிரிட்டிஷ் உதவிக்கு ஆப்பு




செவ்வாய் கிரகத்திற்கு ராக்கெட் அனுப்பும் முயற்சியில் ஈடுபட்டுள்ள இந்தியாவுக்கு, ஆண்டுதோறும் வழங்கும் உதவித் தொகையை நிறுத்த வேண்டும் என இங்கிலாந்து பார்லிமெண்ட்டில் எம்.பி.க்கள் வலியுறுத்தினர்.

சமீபத்தில், டில்லியில் நடந்த சுதந்திர தின விழாவில் பேசிய பிரதமர் மன்மோகன் சிங், செவ்வாய் கிரகத்திற்கு இந்தியா ராக்கெட்டை அனுப்பும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்தார். இந்நிலையில், இது தொடர்பாக லண்டனில் இருந்து வெளிவரும் டெய்லி எக்ஸ்பிரஸ் என்ற நாளிதழில், இந்தியா செவ்வாய்க்கு ரொக்கெட் அனுப்ப இங்கிலாந்து பணம் தருகிறது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த செய்தி தொடர்பாக இங்கிலாந்து பார்லிமெண்ட்டில் எம்.பி.க்கள் கேள்விகளை எழுப்பினர்.

இது தொடர்பாக கன்சர்வேடிவ் கட்சி எம்.பி. பிலிப் டேவிஸ் கூறுகையில், இந்தியாவுக்கு ஆண்டுதோறும் உதவித்தொகையாக 300 மில்லியன் பவுண்டை இங்கிலாந்து வழங்கி வருகிறது. இது மிகவும் கேலிக்கூத்தானது என்று தெரிவித்துள்ளார். இது போன்ற அதி நவீன திட்டங்களை செயல்படுத்த இந்தியா தங்களது சொந்த பணத்தைத் தான் செலவிட வேண்டுமே தவிர, இங்கிலாந்து வரி செலுத்துவோரின் பணத்தை எடுத்து கொடுக்கக்கூடாது என்று தெரிவித்திருந்தார்.




# தேடிச்செல்ல மாட்டேன் பிரதமர் பதவியை

(அகமதாபாத்)

வருகிற பாராளுமன்ற தேர்தலில் பிரதமர் பதவிக்கு போட்டியிடுவாரா? என்ற கேள்விக்கு நரேந்திர மோடி சுவாரஸ்யமாக பதில் அளித்தார். பாரதீய ஜனதா கட்சியின் தேசிய தலைவர் நிதின் கட்காரி கடந்த வியாழன் பேட்டியளித்தார். அப்போது, வருகிற தேர்தலில் பாரதீய ஜனதா கட்சி சார்பில் பிரதமர் வேட்பாளராக குஜராத் முதல் - மந்திரி நரேந்திர மோடி நிறுத்தப்படுவாரா? என்று கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு பாரதீய ஜனதாவில் அத்வானி, ராஜ்நாத்சிங், சுஷ்மாசுவராஜ், அருண் ஜெட்லி, முரளிமனோகர் ஜோஷி, நரேந்திரமோடி ஆகியோர் பிரதமர் வேட்பாளர் பட்டியலில் உள்ளனர். இவர்களில் யாரை நிறுத்துவது என்று இன்னும் முடிவு செய்யவில்லை என்று கூறினார்.

இந்நிலையில், அகமதாபாத்தில் அகில இந்திய மேலாண்மை கல்வி அமைப்பு சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சியில் நரேந்திரமோடி கலந்து கொண்டார். இந்நிகழ்ச்சியில், அவரிடம் பிரதமர் பதவிக்கு போட்டியிடுவீர்களா? உள்ளிட்ட பல்வேறு கேள்விகள் கேட்கப்பட்டன.அதற்கு அவர் அளித்த பதில் வருமாறு

இதுபோன்ற எந்தவொரு பிரச்சினையும் என்னை பாதித்தது இல்லை. இனியும் பாதிக்கப்போவதில்லை. நான் தினமும் மூச்சு பயிற்சி (பிரணாயம்) செய்கிறேன். பொதுமக்கள் யோகா மற்றும் மூச்சு பயிற்சியில் ஈடுபட வேண்டும். மூச்சுப் பயிற்சியில் ஈடுபட்டு வந்தால் தங்களை சூழ்ந்துள்ள பிரச்சினைகளை மறந்து விடுவீர்கள். மனதை மென்மையாக்கி விடும்.இருட்டையும், வெளிச்சத்தையும் ஒரே நிலையில் பார்ப்பீர்கள்.

எந்த பிரச்சினையும் உங்களை பாதிக்காது. தற்போது எனது கவனம் எல்லாம், 6 கோடி குஜராத் மக்களின் உயர்வு மற்றும் நன்மை பற்றியதுதான். இதுதான் எனது வெற்றியின் அளவு கோலாக இருக்க முடியும். இவ்வாறு அவர் கூறினார்.

தேசிய அரசியலை தானாக நாடிச்செல்லப் போவதில்லை. அதே சமயம் தட்டிக்கழிக்கப்போவதும் இல்லை என்ற நிலையில் தான் மோடி உள்ளார்.

இந்தியச் செய்திகள்

# மதக்கலவரத்துக்கு தூபம் பாகிஸ்தான் மீது குற்றச்சாட்டு



(புதுடெல்லி)

மும்பை தாக்குதல் போல மீண்டும் ஒரு பெரிய தாக்குதலை நடத்த பாகிஸ்தான் தீவிரவாதிகள் முயன்று வருகிறார்கள். அவர்களுக்கு பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. எல்லா உதவிகளையும் செய்து கொடுத்துள்ளது.

பாகிஸ்தான் தீவிரவாதிகள் இந்தியாவுக்குள் ஊடுருவ மேற்கொண்ட எல்லா முயற்சிகளும் கடந்த சில மாதங்களாக வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டன. இதனால் விரக்தி அடைந்துள்ள பாகிஸ்தான் தீவிரவாதிகள் முஜாகிதீன்கள் மூலம் நாடெங்கும் மத கலவரத்தை தூண்டி விடும் முயற்சிகளில் இறங்கியுள்ளனர்.

இந்தியாவில் உள்ள இந்துக்களையும், முஸ்லிம்களையும் மோத செய்து, பொருளாதாரத்தை சீர்குலைத்து குளிர்காயும் நினைப்பில் பாகிஸ்தான் தீவிரவாதிகளும், ஐ.எஸ்.ஐ.யும் மத கலவரத்தை தூண்டும் போலி எம்.எம். எஸ்., எஸ்.எம்.எஸ். தகவல்களை பரப்புகிறார்கள். குஜராத் முஸ்லிம்களிடம் கலவரம் ஏற்படுத்த அவர்கள் செய்த முயற்சிகள் தோல்வியில் முடிந்தன.

இந்த நிலையில் அசாம் மாநிலத்தில் ஏற்பட்ட கலவரத்தை கையில் எடுத்த பாகிஸ்தான் உளவு அமைப்பு அதை பின்னணியாக வைத்து போலி எம்.எம்.எஸ். தயாரித்து வடகிழக்கு மாநில மக்களிடம் தாக்குதல் பீதியை ஏற்படுத்திவிட்டது. பெங்களூரில் இந்த பீதியை கிளப்புவதன் மூலம் இந்திய தகவல் தொழில் நுட்ப துறையில் முடக்கத்தை ஏற்படுத்த முடியும் என்பது ஐ.எஸ்.ஐ.யின் திட்டமாகும்.

பெங்களூரில் பறிமுதல் செய்த எம்.எம்.எஸ். காட்சிகளை ஆய்வு செய்த மத்திய உளவுத்துறையினர், இதில் ஐ.எஸ்.ஐ. பின்னணியில் இருப்பதை கண்டு பிடித்துள்ளனர். எனவே எம்.எம்.எஸ்., எஸ்.எம்.எஸ். தகவல்களை பரப்பி, ஐ.எஸ்.ஐ. சதிக்கு யாரும் உதவிட வேண்டாம் என்று மத்திய உளவுத்துறை எச்சரித்துள்ளது. இந்த எச்சரிக்கையைத் தொடர்ந்தே ஒரே சமயத்தில் ஏராளமான எம்.எம்.எஸ். எஸ்.எம்.எஸ். அனுப்புவதை 15 நாட்களுக்கு மத்திய அரசு தடை விதித்து அறிவித்துள்ளது.



**அசாம்கலவரத்தை கண்டித்து லக்னோவில் நேற்று நடந்த ஊர்வலத்தில், வன்முறையில் ஈடுபட்டவர்கள், பொலீசாரை நோக்கி கற்களை வீசித்தாக்கினர்.**

# தேசிய அச்சுறுத்தல் பட்டியலில் ரஷ்யா உட்பட 16 நாடுகள்

## – ஒபாமா அறிவிப்பு

(மொஸ்கோ)

ரஷ்யா உள்ளிட்ட 16 நாடுகளை தேசிய அச்சுறுத்தல் வாய்ந்த நாடுகள் பட்டியலில் நீட்டிப்பதாக அமெரிக்க அதிபர் பாரக் ஒபாமா அறிவித்துள்ளார். அமெரிக்காவில் இருக்கும் அந்த நாடுகளின் சொத்துக்கள் மீதான முடக்கம் நீடிக்கும் எனவும் ஒபாமா கூறியுள்ளார்.

சர்வதேச அவசர பொருளாதார சக்தி சட்டத்தின்கீழ் கடந்த 2000ஆம் ஆண்டிலிருந்து அமெரிக்கா, ரஷ்யாவை இப்பட்டியலில் வைத்துள்ளது. ரஷ்யா, சிரியா, ஈரான், வடகொரியா, பெலாரஸ் உள்ளிட்ட இந்நாடுகள் யுரேனியத்தை ஏற்றுமதி செய்து அதற்குப் பதிலாக ஆயுதங்களைப் பெற்று வருவதால் அமெரிக்கா இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

வெளிநாடுகளிடமிருந்து அமெரிக்காவுக்கு அச்சுறுத்தல் நிலவினால் தேசிய அவசர நிலை கொண்டு வருவதன்மூலம் இத்தகைய நடவடிக்கையை எடுக்க அமெரிக்க அதிபருக்கு சட்டப்பூர்வமான அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அத்தகைய நாடுகளுடனான பரிமாற்றங்களை தடை செய்யவும், அவற்றின் சொத்துக்களை முடக்கவும் அமெரிக்க அதிபருக்கு அதிகாரம் அளிக்கப்படுள்ளது. மேலும் அமெரிக்கா மீது ஏதேனும் தாக்குதல்கள் நடத்தப்பட்டால், அத் தாக்குதலை நடத்தும் நபர் அல்லது இயக்கம் அல்லது நாட்டின் சொத்துக்களைப் பறிமுதல் செய்யவும் அதிபருக்கு அதிகாரமுள்ளது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க ஜனாதிபதியின் மூக்கை அளவு பார்க்கும் 9மாத குழந்தை



அயோவாவில் நடந்த கண்காட்சிக்கு திடீர் என்று சென்ற அமெரிக்க அதிபர் ஒபாமாவின் மூக்கை 9 மாத குழந்தை தொட்டுப் பார்த்தது. அதற்கு அவர் என்னென் மூக்கு பெரிதாக உள்ளதா என்று கேட்ட சம்பவம் இடம் பெற்றது.

அமெரிக்க அதிபர் தேர்தலில் மீண்டும் போட்டியிடும் தற்போதைய அதிபர் ஒபாமா வாக்கு சேகரிக்க அயோவாவில் 3 நாள் பிரச்சாரம் செய்கிறார். நேற்று முன்தினம் அவர் பேருந்து மூலம் அயோவா சென்றபோது அங்கு நடந்து கொண்டிருந்த கண்காட்சியைப் பார்த்து அங்கே பேருந்தை நிறுத்துமாறு கூறினார். பின்னர் கண்காட்சி நடந்த இடத்திற்குள் சென்ற அவரைப் பார்த்து மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். சுமார் ஒரு மணிநேரம் அங்கு இருந்த அவர் குழந்தைகளுடன் பேசி மகிழ்ந்தார்.

அப்போது டெபோரா என்ற பெண்ணின் கையில் இருந்த 9 மாதகுழந்தை கோல் நில்சனைப் பார்த்து ஒபாமா அதன் முன்பு குனிந்தார். உடனே அந்த குழந்தை அவரின் முகத்தை தன் கையால் தொட்டது. அதன் விரல்கள் தனது மூக்கில் பட்டவுடன் என் மூக்கைப் பற்றி என்ன நினைக்கிறாய். பெரிய மூக்காக இருக்கிறதல்லவா என்று குழந்தையிடம் கேட்டுச் சிரித்தார். அவர் குழந்தைகளுடன் பேசி மகிழ்வதைப் பார்த்த மக்கள் அடுத்த 4 வருடமும் ஒபாமா தான் அதிபர் என்று கோஷமிட்டனர்.

# அமெரிக்கர்களின் நண்பன் ஏ-கே. 47 ரக துப்பாக்கிகள்



அமெரிக்காவில் நிகழ்த்தப்படுகின்ற கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் ஏகே47 ரக துப்பாக்கிகள் அதிகம் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. ரஷ்ய தயாரிப்பான ஏகே47 ரக துப்பாக்கிகளின் விலை 500 டொலர் முதல் 600 டொலர் வரை என்பதால் எப்போதும் பாதுகாப்பற்ற மனோநிலையில் இருக்கும் அமெரிக்கர்களுக்கு இது ஆத்மார்த்தமான நண்பனாகிவிடுகிறது.

ஏ.கே.47 துப்பாக்கிகளை தயாரிக்கும் நிறுவனம்கூட இப்படியெல்லாம் நினைத்திருக்க வாய்ப்பில்லை... அமெரிக்காவின் தனி நபர்களுக்கு கடந்த பல ஆண்டுகளாக ஏகே 47 ரக துப்பாக்கிகள் விற்பனை செய்யப்பட்டு வந்தது. ஆனால் கடந்த ஆண்டு தான் அமெரிக்கர்களுக்கான விற்பனை 50 வீதம் அளவு அதிகரித்திருப்பது ரஷ்ய தயாரிப்பு நிறுவனத்தை ஆச்சரியத்தில் மூழ்க வைத்துள்ளது. இராணுவத்தினருக்கும் காவல்துறைக்கும் போய்க் கொண்டிருந்த ஏகே 47 ரக துப்பாக்கிகள் அமெரிக்கர்களின் கைகளுக்கு சர்வசாதாரணமாக போய்க் கொண்டிருக்கிறது.இந்நிலையில் ஏகே 47 ரக துப்பாக்கிகளின் இறக்குமதிகளுக்கு ஒபாமா அரசாங்கம் தடை விதித்துவிடப் போகிறது என்று இணையதளங்களில் தகவல்கள் உலா வருகிறது. ஆனால அப்படியொரு திட்டம் ஒபாமா அரசாங்கத்துக்கு இல்லை என்கிறது வெள்ளை மாளிகை வட்டாரங்கள்.

# ஈராக்கில் தொடரும் கார்க்குண்டு வெடிப்புக்கள்

## – 59 பேர் உயிரிழப்பு



(பாக்தாத்)

ஈராக் தலைநகர் பாக்தாத் உள்பட பல்வேறு இடங்களில் நடைபெற்ற கார் குண்டுகள் வெடிப்பில் 59 பேர் பலியானார்கள். 150-க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

நேற்று முன்தினம் மட்டும் பாக்தாத் நகருக்கு அருகிலுள்ள தேநீர் விடுதிக்கு வெளியே கார் குண்டு வெடித்தது. இதில் 27 பேர் சம்பவ இடத்திலேயே இறந்தனர். மேலும் 30-க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். இந்த தாக்குதலை அல்-கொய்தா தீவிரவாதிகள் நடத்தி இருக்கலாம் என கருதப்படுகிறது.

அமெரிக்க படைகள் ஈராக்கிலிருந்து வெளியேறியபிறகு அந்நாட்டில் தீவிரவாத தாக்குதல்கள் தொடர்ந்து நடத்தப்படுகின்றன. மேலும் அல்-கொய்தா தலைவரின் சமீபத்திய எச்சரிக்கையைத் தொடர்ந்து, ஈராக்கில் உள்ள தீவிரவாத குழுக்கள் ஒன்றிணைந்து தற்போது தாக்குதல்களை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

உலகச் செய்திகள்

# ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 140 மாணவர்கள் சிலியில் கைது



சிலியின் சன்டியாகோ நகரில் 140 பாடசாலை மாணவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாட்டின் கல்விக்கொள்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடாத்திய மாணவர்களே கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மாணவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் மோதல்கள் ஏற்பட்டதாகவும் தகவல்கள் குறிப்பிடுகின்றன.இதன்போது மாணவர்களின் ஆர்ப்பாட்டத்தை கலைப்பதற்கு பொலிஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் மேற்கொண்டனர்.

சிலியில் கல்வித்துறை வினைத்திறனாக செயற்பட வேண்டும் என வலியுறுத்தி மாணவர்கள் நீண்டகாலமாக போராட்டம் நடாத்திவருகின்றனர்.

இதன் காரணமாக சிலியின் கல்வித்துறை பெரும் பின்னடைவை சந்தித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# இஸ்ரேல் சிறையில் இருக்கும் கணவரின் உயிரணுவை கடத்தி குழந்தை பெற்ற பெண்

(ரமல்லா)

இஸ்ரேல் நாட்டு சிறையில் இருக்கும் தனது கணவரின் உயிர் அணுவை கடத்தி வந்த பாலஸ்தீன பெண் ஆண் குழந்தையை பெற்றெடுத்துள்ளார்.

பாலஸ்தீனத்தைச் சேர்ந்த அம்மர் அல் ஜப்ன்(37) என்பவர் ஹமாஸ் இயக்கத்துடன் தொடர்பு வைத்திருந்ததால் கைது செய்யப்பட்டு இஸ்ரேல் சிறையில் அடைக்கப்பட்டார். அவரது மனைவி தல்லல் ஜிபென்(32). அவர்களுக்கு பஷாயெர் என்ற16வயது மகள் உள்ளார் பஷாயெர் 18 மா்தக் குழந்தையாக இருந்தபோது அம்மர் கைது செய்யப்பட்டார். அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது

இந்நிலையில் ஜிபெனுக்கு தன் கணவர் மூலம் மகன் பிறக்க வேண்டும் என்று ஆசை. ஏற்பட்டுள்ளது. இதையடுத்து அவர் சிறையில் உள்ள தனது கணவரின் உயிரணுவை கடத்தி வந்து செயற்கை கருத்தரிப்பு முறைப்படி கர்ப்பமானார். இந்நிலையில் அவருக்கு நேற்று முன்தினம் பிரசவ வலி ஏற்பட்டது இதையடுத்து நப்லஸில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவருக்கு சிசேரியன் மூலம் ஆண் குழந்தை பிறந்தது. குழந்தைக்கு முஹன்னத் என்று பெயரிட்டுள்ளனர்.

தாயும், சேயும் நலமாக உள்ளதாக டாக்டர் சலிம் அபுஹைசரான் தெரிவித்தார்.

இது குறித்து ஜிபென் கூறுகையில்,

எனக்கு ஆண் குழந்தை பிறந்ததில் மிகவும் மகிழ்ச்சி. அவன் வளர்ந்து என்னையும், அவனது சகோதரியையும் பார்த்துக் கொள்வான் என்றார்.இஸ்ரேல் சிறையில் 4,700 பாலஸ்தீனியர்கள் உள்ளனர். அவர்களில் 500 பேர் ஆயுள் தண்டனைக் கைதிகள் ஆவர்.

# கேளிக்கை விடுதியில் தீ; தாய்லாந்தில் 4பேர் பலி



தாய்லாந்தில் உள்ள இரவு நேர கேளிக்கை விடுதியில் ஏற்பட்ட தீ விபத்தில், வெளிநாட்டவர் நான்கு பேர் கருகி பலியாகியுள்ளனர். 20 பேர் படுகாயமடைந்துள்ளனர்.தாய்லாந்தில் உள்ள புக்கட் தீவு, சுற்றுலாப் பயணிகளை வெகுவாகக் கவரக்கூடியது. இந்த தீவில் உள்ள இரவு நேர விடுதியில் நேற்று முன்தினம் அதிகாலை, டிரான்பார்மரில் ஏற்பட்ட தீ, கட்டடத்தின் இரண்டாவது தளம் முழுவதும் பரவியது. இந்த தீ விபத்தில், வெளிநாட்டைச் சேர்ந்த நான்கு பேர் அடையாளம் காண முடியாத அளவுக்கு கருகி பலியாகியுள்ளனர். காயமடைந்தவர்களில் இரண்டு பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக, மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

# சுயலாப அரசியல் தவறுகள் தொடர்வதற்கு மக்கள் ஒருபோதும் இடமளிக்கக் கூடாது



(சாவகச்சேரி)

சுயலாப அரசியல் தவறுகள் தொடர்வதற்கு மக்கள் ஒருபோதும் இடமளிக்கக்கூடாது என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சாவகச்சேரிப் பிரதேச சபைக்கான புதிய கட்டடத்தை நேற்றுத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடபகுதியின் அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு அரசு பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்ற நிலையில், பிரதேச சபைகளுக்கான புதிய கட்டடங்களையும் அமைத்துக் கொடுத்து வருகின்றது. அந்தவகையில், உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் சாவகச்சேரி பிரதேச சபைக்கான கட்டடமும் புதிதாக அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

முன்னொரு காலகட்டத்தில் தமிழ் மக்கள் புறக்கணிக்கப்பட்டு வந்த நிலையில், இன்று அந்தச் சூழ்நிலை முற்றாக மாறிவிட்டது. அந்தவகையில் வடபகுதியின் அபிவிருத்தியில் அரசு அக்கறை காட்டிவரும் அதேவேளை, அதற்காக அதிகளவு நிதியினையும் செலவிட்டு வருகின்றது.

இதனிடையே, சுயலாப அரசியல்வாதிகள் தமது சுயலாபங்களுக்காக இங்கு அரசினால் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்களை விமர்சித்து மக்களைக் குழப்பி வரும் நிலையில், அது தொடர்பில் மக்கள் விழிப்பாக இருப்பதுடன், இவ்வாறான சுயலாப அரசியல் தவறுகள் தொடர்வதற்கு ஒருபோதும் இடமளிக்கக் கூடாது என்றும் கேட்டுக்கொண்டார்.

பிரதேச சபை மண்டபத்தில் அதன் செயலாளர் தர்சினி, தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், மங்கல விளக்கேற்றி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து புதிய கட்டடத்தை அமைச்சர் திறந்து வைத்தார்.

உள்ளூராட்சி உட்கட்டமைப்பு அமைச்சினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட 29 மில்லியன் ரூபா செலவில் கட்டப்பட்ட இப்புதிய கட்டடம் அமையப்பெற்ற காணியை அன்பளிப்புச் செய்த திருமதி மங்கயற்கரசிக்கு அமைச்சர் மாலை சூட்டி வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

இதன்போது ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்த்திரி அலன்ரின் (உதயன்), உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் வரதீஸ்வரன், உள்ளூராட்சி ஆணையாளர் ஜெகூ, சாவகச்சேரி நகரசபையின் எதிர்க்கட்சித் தலைவரும், ஈ.பி.டி.பி.யின் தென்மராட்சி அமைப்பாளருமான தூசைமுத்து அலெக்ஸ்சாண்டர் (சாள்ஸ்) . உள்ளிட்ட துறைசார்ந்த பலரும் கலந்து கொண்டனர்.

# பொலிஸாரை திணறடிக்கும் சட்டவிரோத மது உற்பத்தி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் சட்டவிரோதமான மதுபான உற்பத்தி அதிகரித்துவரும் நிலையில் பொலிஸார் அதனைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்ற போதிலும் பொதுமக்களின் ஒத்துழைப்பும், விழிப்புணர்வும் இருந்தால் மட்டுமே பொலிஸாரின் நடவடிக்கை வெற்றியளிக்கும் என கிளிநொச்சி பொலிஸ் நிலைய மக்கள் தொடர்பு அதிகாரி கால்தீன் தெரிவித்துள்ளார்.

அதிகரித்து வரும் சட்டவிரோத மதுபான உற்பத்தியைக் கட்டுப்படுத்துவது தொடர்பாகப் பொலிஸாரின் நடவடிக்கை தொடர்பாக தினமுரசு செய்தியாளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக் கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாகத் தெரிவிக்கையில்,

சமீபகாலமாக கிளிநொச்சி மாவட்டத்தில் சட்டவிரோத மதுபான உற்பத்தி அதிகரித்து வருவதைக் கண்டறிந்து பொலிஸார் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

எனினும், இந்தச் சட்டவிரோத மதுபான உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதில் பாரிய சிக்கல்கள் இருக்கின்றது. இதனால் பல்வேறு சமூகச் சீரழிவுகள் இடம்பெற்று வருகின்றது. இதனைத் தடுப்பதற்கு கிராமங்கள் தோறும் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவது அவசியமாகும்.

ஒட்டுமொத்தமாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலமே இதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும்.

எனவே பொலிஸாரின் நடவடிக்கைக்கு அப்பால் கிராம மட்ட அமைப்புக்கள் இது தொடர்பாக விழிப்புணர்வுடன் இருப்பது மட்டுமன்றி மக்களுக்கு விழிப்புணர்வுச் செயற்பாடுகளை வழங்க முன் வரவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (28)

# வெடி பொருட்கள் மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பாரதிபுரம் பகுதியில் உள்ள பாழடைந்த கிணறு ஒன்றில் இருந்து ஒரு தொகுதி இராணுவப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் கிளிநொச்சிப் பொலிஸாரினால் அந்தப் பகுதியில் நடத்தப்பட்ட தேடுதலின் போது குறித்த பாழடைந்த கிணற்றில் இருந்து கிரனேற் லோஞ்சர் ஒன்றும் அதற்கான மோட்டார்க்குண்டு ஒன்றும் மற்றும் ரவைகளும் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது. (பா)

## இலங்கைத்...

இல்லை. அதில் இந்திராவுக்கும் கருணாநிதிக்கும் எந்த முரண்பாடும் எழவும் இல்லை.

1991 ஆம் ஆண்டு கலைப்புக்கு விடுதலைப் புலிகள் விவகாரம் ஒரு காரணமாக ஆக்கப்பட்டது உண்மைதான். தன்னுடைய எதிரியான வி.பி.சிங்கை கருணாநிதி ஆதரிக்கிறார் என்பதால், ஜெயலலிதாவுடன் அதிக நெருக்கம் காட்டினார் ராஜீவ் காந்தி. அன்றைக்கு காங்கிரஸின் தயவில் ஆட்சியில் இருந்தார் பிரதமர் சந்திரசேகர். ராஜீவைத் திருப்திப்படுத்துவதற்காக, தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகள் ஊடுருவி விட்டனர். அதற்குக் கருணாநிதியும் உடந்தை என்று காரணம் சொல்லி ஆட்சியைக் கலைத்தார்கள்.

எனவே, ஸ்டாலின் சொன்னதில் பாதி உண்மைதான் இருக்கிறது என ஜீனியர் விகடன் மேலும் தெரிவித்துள்ளது



யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் தென்னிந்திய பிரபல கர்நாடக இசைப்பாடகர் பி.உன்னிகிருஷ்ணன் கர்நாடக இசை பற்றிய பயிற்சிப் பட்டறையை வழங்குவதையும், அதில் கலந்துகொண்ட ஒரு பகுதியினரையும் காணலாம்.

படம் : கே.நந்தகுமார்.

## காப்புறுதி....

இது குறித்து கிளிநொச்சி மாவட்ட வர்த்தக சங்கத் தலைவர் தெரிவித்ததாவது,

யுத்தத்திற்கு முன்னர் இம் மாவட்டத்திலுள்ள சகல கடைகளுக்கும் ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தில் காப்புறுதி செய்யப்பட்டது. அதன் பின்னர் யுத்தம் இடம்பெற்றதால் கடைகள் சேதமடைந்து தற்போது அவை உரிமையாளர்களால் மீளமைக்கப்பட்டு இயங்கி வருகின்றது.

எனினும் காப்புறுதி செய்யப்பட்ட இக்கடைகளுக்கு மேற்படி நிறுவனத்தால் காப்புறுதி வழங்கப்படவில்லை. இதனால் வர்த்தகர்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 43 கடைகளுக்கு காப்புறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் காப்புறுதிப் பணம் தொடர்பாக மேற்படி நிறுவனத்திடம் தாம் கேட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (35)

## நிரந்தர...

பட்டுள்ள அதேவேளை மீதமாகவுள்ளோர் இதுவரை ஆசிரியர் சேவைக்குள் உள்ளவாங்கப்படவிலலை எனவும் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் இருந்து தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள பல்வேறு கல்வி வலயங்களிலும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பும் வகையில் உதவி ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டவர்களில் ஒரு பகுதினர் மட்டும் இவ்வாறாக நிரந்தரமாக்கப்பட்டும் ஏனையோர் நிரந்தரமாக்கப்படாது தொடந்தும் மூவாயிரம் ரூபா சம்பளத்தில் தொடர்ந்தும் அதே பதவியில் கடமையாற்றி வருவதும் தமக்கு கவலையளிப்பதாகவும் தெரிவிக்கும் சம்பந்தப்பட்ட தரப்பினர், தம்மையும் நிரந்தர ஆசிரியர் சேவையில் உள்வாங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க ஆவன செய்ய வேண்டும் என தாம் விரும்புவதாகவும் தெரிவிக்கின்றனர். (03)

## முஸ்லிம்...

வேதனைக்கு உட்பட்டிருந்தேன். இவ்வாறான நிகழ்வுகள் இனிமேலும் எமது மண்ணில் நிகழாதிருக்க நாம் அனைவரும் ஒன்றி ணைந்து உழைக்க வேண்டிய அவசியத்தை நான் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகின்றேன்.

எமது மண்ணில் நாம் அனைவரும் சமம் என்ற நிலை யில் எமது வாழ்வாதார வசதிகளை மேம்படுத்திக் கொள்வோமாக. அதற்காக எனது அயராத உழைப்பு என்றென்றும் துணையாக அமையும் என்பதை இங்கு நான் தெரிவித்துக் கொள்கின்றேன். எமது முஸ்லிம் சகோதரர்கள் இத்திருநாளை இனிதே கொண்டாட எனது மனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## தமிழ் குடும்பத்தைச் ...

நீதிமன்ற நீதவான் விஜயம் செய்து பார்வையிட்டுள்ளதுடன், விசாரணை அதிகாரிகளும் அங்கு நிலை நிறுத்தப்பட்டுள்ளனர்.

எனினும், அவர்களை அழைத்து வந்த மூத்த மகனின் தகவல்கள் எவையும் இதுவரை கிடைக்கவில்லை. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளும் நோக்கில் வெள்ளவத்தை பொலிஸாரும், கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரும் அடங்கிய இரண்டு குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

## ஐந்து ஏக்கர்...

படையினர் இத்தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்ட போதிலும் அம்முயற்சி வெற்றியளிக்காததனால் மேலும் சுமார் 200 படையினர் வர வழைக்கப்பட்டனர்.

நேற்றுப் பிற்பகல், இத்தீயை படையினர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். இத்தீயினால் 5 ஏக்கர் பரப்பளவான காடு அழிந்துள்ளதாக பாதுகாப்புப் படைகளின் யாழ்.கட்டளைத் தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது.

# தம்பசிட்டி நாவலடியில் கடை உடைத்து திருட்டு

(அச்சுவேலி)

தம்பசிட்டி நாவலடிப் பகுதியிலுள்ள வர்த்தக நிலைய மொன்றில் கடந்த புதன்கிழமை இரவு 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளது.

குறித்த வர்த்தக நிலையமொன்றில் பொருட்களைக் களவாடிய நபர் மறுநாள் மதுபோதையில் பிறிதொருவரிடம் பொருட்களை எங்கு விற்கலாம் எனக் கேட்ட போது மற்றவர் குறித்த கடையில் விற்கலாம் எனக் கூறியதை அடுத்து அவர் உண்மையைப் போதையில் கூறினார்.

இதனையடுத்து கேட்ட நபர் கடை உரிமையாளரிடம் இதனைத் தெரிவித்துள்ளதாகவும். அதன் பின்னரே கடையில் களவு போன சம்பவம் கடைக்காரருக்குத் தெரிய வந்ததாகவும் இது குறித்துப் பொலிஸார் குறித்த நபரைக் கைது செய்து விசாரணை நடத்தியபோது மற்றவரை இவர் குற்றஞ்சாட்டியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (116)

# அவுஸ்ரேலிய புகலிடதாரிகளில் அதிகளவான சிங்கள மக்கள்

(கொழும்பு)

கடந்த காலங்களை விடவும் தற்போது அதிகளவான சிங்கள மக்கள் அவுஸ்ரேலியாவில் புகலிடம் கோருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலங்களில் வடக்கு கிழக்கைச் சேர்ந்த தமிழர்களே படகு மூலம் அவுஸ்ரேலியாவிற்குள் சட்டவிரோதமாக பிரவேசித்து வந்தனர்.

எனினும் தற்போது தமிழர் அல்லாதோரும் வடக்கு, கிழக்கைச் சாராத தமிழர்களும் படகு மூலம் அவுஸ்ரேலியாவிற்குள் சட்டவிரோதமாக பிரவேசித்து வருவதாக கடற்படையினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த மாத ஆரம்பம் முதல் இதுவரையில் சட்டவிரோதமாக அவுஸ்ரேலியா செல்ல முற்பட்ட 214 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், இதில் 21 பேர் சிங்களவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தங்களுக்கு படகில் செல்ல அனுமதி மறுத்தால் படகுப் பயணம் குறித்து அரசாங்க அதிகாரிகளுக்கு முறைப்பாடு செய்வதாக அச்சுறுத்தி இந்தப் படகுகளில் சிங்களவர்கள் ஏறிக் கொளவதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

## போதைப்பொருள் கடத்தல் மூவருக்கு கடூழிய சிறை

(கொழும்பு)

மயக்க மருந்துகள் மற்றும் போதைப் பொருள் கடத்தல் மன்னனும், அவனது இரண்டு சகாக்களுக்கும், மயக்க மருந்துகள் மற்றும் உளவியல்சார் பொருட்கள் சட்டத்தின் கீழ், நீதிபதி எம். மொனியால் முறையே 20 மற்றும் 10 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

இம்மூவரும் 2004 இல் ஹெரோயினை இலங்கைக்கு கடத்தியமை தொடர்பாக மயக்க மருந்துகள் கட்டுப்பாட்டுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர். சிறிஸ்கந்தராஜா (வயது - 38) ரங்கநாதன் பிரபாகரன் (வயது - 45) மற்றும் என். காண்டீபன் (வயது - 27) என்போரே இவ்வாறு கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவர்களாவர்.

## ஆட்கடத்தலில் ஈடுபட்டு கப்பம் பெற்ற குழு கைது

(கொழும்பு)

நபர்களை கடத்திச் சென்று கப்பம் பெறும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்ததாகக் கூறப்படும் நால்வர் கொழும்பில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு கடந்த 15ஆம் திகதி கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சந்தேகநபர்கள் பலரையும் கடத்திச்சென்று பலவந்தமாக தடுத்து வைத்திருந்து கப்பம் பெற்றுக்கொள்வதாக பொலிஸாருக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் மாவனெல்ல, களுத்துறை, கடுகண்ணாவ மற்றும் கிரான்ட்பாஸ் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. 'தடுத்து வைக்கும் உத்தரவிற்கு அமைய சந்தேகநபர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

## நாடு கடத்தப்பட்ட தமிழ் இளைஞன் கைது

(கொழும்பு)

நெதர்லாந்தில் இருந்து கடந்த புதனன்று நாடு கடத்தப்பட்ட தமிழ் இளைஞர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பரமநாதன் ஜெதருசன் என்னும் தமிழ் இளைஞனே இவ்வாறு குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டவராவார்.

எனினும், இதுவரை எந்த நீதிமன்றத்திலும் குறித்த இளைஞனை ஆஜர்படுத்தப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

## பிள்ளையான் மீண்டும் முதல்வரா? வாய்ப்பு இல்லை எனத் தகவல்

(கொழும்பு)

கிழக்கு மாகாணசபைக்கு அடுத்தமாதம் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றி பெற்றால், தற்போதைய முதல்வர் சந்திரகாந்தன் மீண்டும் முதல்வராக வர வாய்ப்புக் கிடைக்காது என கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளி யிட்டுள்ளது.

இதுதொடர்பாக தகவல் வெளியிட்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வட்டாரங்கள், இந்தத் தேர்தலில் பிரதி அமைச்சர் முரளிதரனின் (கருணா) சகோதரி தவமலரும் போட்டியிடுவதால் மீண்டும் முதல்வராகும் வாய்ப்பு சந்திர காந்தனுக்கு மறுக்கப்படலாம் என்று கூறியுள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கீழ்மட்டத் தலைவர்கள் தவமலருக்காக பரப்புரைகளை செய்துவரும் அதேவேளை, சந்திரகாந்தன் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியினர் பலரும் கருணாவுக்கு ஆதரவு வழங்குவதாகவும் அந்த வட்டாரங்கள் கூறியுள்ளன.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியில் இருந்து பலர் வெளியேறியுள்ளதை அடுத்து, கிழக்கில் சந்திரகாந்தனின் செல்வாக்கு வீழ்ச்சியடைந்துள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மேற்கொண்ட ஆய்வில் இருந்து தெரியவந்துள்ளதாகவும் அவ் ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது.

# 4 நாட்களுக்கு இரு பெண்கள் புற்றுநோயால் மரணம்

(கொழும்பு)

இலங்கையில் தொண்டை மற்றும் மார்பகப் புற்றுநோய் காரணமாக நான்கு நாட்களுக்கு இரண்டு பெண்கள் வீதம் உயிரிழப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

வருடம் ஒன்றிற்கு 1,200 பெணகள் தொண்டைப் புற்று நோயினாலும் 2,400 பெண்கள் மார்பகப் புற்று நோயினாலும் உயிரிழப்பதாக சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புற்றுநோய் இனங்காணப்பட்ட போதும், திருமணமான 90 வீதமான பெண்கள் ஆரம்பகட்ட நோய்த்தாக்கத்தின் சிகிச்சைக்கு முகங்கொடுப்பதில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு நாரஹென்பிட்டி பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள புற்றுநோய் பரிசோதனை மத்திய நிலையத்தில் "மமோகிராம்" (mammography) மற்றும் "பப்" பரிசோதனைகளை இலவசமாக பெற்றுக் கொள்ள முடியும் எனவும் நாட்டின் பல பாகங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் "சுவஉதாண" செயற்திட்டத்தின் மூலமாக தொண்டை மற்றும் மார்பகப் புற்றுநோய்களைக் கண்டறியும் பரிசோதனைகளை செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, சகல திருமணமான பெண்களும் இரண்டு வருடத்திற்கு ஒருதடவை புற்றுநோயை கண்டறியும் பரிசோதனைகளை செய்ய வேண்டும் என அமைச்சு மேலும் அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

## 6000 பட்டதாரிகளுக்கு தொழில் ஜனாதிபதியிடம் கோரிக்கை



(கொழும்பு)

தொழில்வாய்ப்பற்ற சுமார் 6000 பட்டதாரிகளுக்கு புதிய சுற்றுநிருபமொன்றை விடுப்பதன் மூலம் தொழில் வழங்குமாறு ஜனாதிபதியை தொழில்வாய்ப்பற்ற பட்டதாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

2010, 2011 ஆம் ஆண்டுகளில் பட்டதாரியானவர்களுக்கு தொழில்வாய்ப்பு வழங்கப்படும் என ஜனாதிபதி அண்மையில் கூறியிருந்தார். ஆனால், அரசாங்கத்தினால் வழங்கப்படும் தொழில வாய்ப்புக் கிடைக்கவில்லை என மேற்படி சங்கத்தின் பேச்சாளர் தம்மிக முனசிங்க கூறினார்.

ஜனாதிபதி இவ்வாறு கூறியதன்பின்னர் பெரும் எண்ணிக்கையான இளைஞர்கள் எதிர்பார்ப்புகளை கொண்டிருந்தனர். இவ்விடயம் உறுதிப்படுத்தப்படுவதற்காக அவர்கள் காத்திருக்கிறார்கள். புதிய ஆட்சேர்ப்புக்காக புதிய சுற்றுநிருபமொன்றை வெளியிடுமாறு அரசாங்கத்தை நாம் வலியுறுத்துகிறோம் என தம்மிக முனசிங்க மேலும் கூறினார்.

# அவுஸ்ரேலியா செல்ல முயற்சித்து நடுக்கடலில் தத்தளித்த 30 பேர் மீட்பு

(கொழும்பு)

அவுஸரேலியாவிற்குச் சென்ற வேளை படகின் இயந்திரம் பழுதடைந்த நிலையில் கடந்த 27 நாட்களாக நடுக்கடலில் தத்தளித்த 30 பேரை மீட்ட கடற்படையினர் அவர்கள் அனைவரையும் தங்காலைத் துறைமுகத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

மீட்கப்பட்டவர்களில் 19 பேர் தமிழர்கள் என்றும், 11 பேர் சிங்களவர்கள் என்றும் கடற்படைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஆண்களான இவர்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், சிலாபம் மற்றும் நீர்கொழும்பு பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

இலங்கைக்கு தென்கிழக்கே 300 கடல் மைல் தொலைவில் சென்று கொண்டிருந்த போது இவர்கள் பயணம் செய்த படகின் புரொப்ளர் உடைந்து போனது.

நீர்கொழும்பில் இருந்து கடந்த மாதம் 17 ஆம் திகதி இந்தப் படகு புறப்பட்டுள்ளது. ஐந்து நாட்கள் கழித்து படகு பழுதடைந்து போனதால், கடந்த 27 நாட்களாக அதில் இருந்த 30 பேரும் நடுக்கடலில் செய்வதறியாமல் தத்தளித்துக் கொண்டிருந்தனர்.

படகில் இருந்தவர்கள் விடுத்த அபாய சமிக்ஞைகளை அடுத்து மற்றொரு மீன்பிடிப் படகு கடற்படைக்கு தகவல் கொடுத்தது.

இதையடுத்து கடற்படையின் அதிவேக ரோந்துப்படகு விரைந்து சென்று அந்தப் படகில் இருந்த அனைவரையும் மீட்டு நேற்று முன்தினம் கரைக்கு கொண்டு வந்தது.

மீட்கப்பட்ட அனைவரும் பசி மற்றும் தாகத்தினால் உயர் நீரிழப்பு ஏற்பட்டு மிகவும் சோர்வுற்ற நிலையில் இருந்தனர்.

இவர்களிடம் இருந்த குடிநீர், உணவு என்பன தீர்ந்து போன நிலையில், சில நாட்களாக, பட்டினி கிடந்துள்ளனர்.

கடற்படையினர் இவர்களுக்கு உணவு மற்றும் அவசர மருத்துவ உதவிகளை வழங்கி கரைக்கு கொண்டு வந்து, மேலதிக விசாரணைகளுக்காக குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

# வீரவன்சவின் தேர்தல் அன்பளிப்பு தடுத்து நிறுத்தினார் டிலான்



(கொழும்பு)

வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சர் விமல் வீரவன்சவின் தேர்தல் பிரசார முயற்சிக்கு அமைச்சர் டிலான் பெரேரா தடை ஏற்படுத்தியுள்ளார்.

வீடமைப்பு அமைச்சுக்கு சொந்தமான பதுளை காரியாலயத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த கூரைத் தகடுகளை, விமல் வீரவன்ச திருகோணமலை மக்களுக்கு வழங்க முயற்சித்துள்ளார்.

எனினும் இந்த முயற்சியை அமைச்சர் டிலான் பெரேரா தடுத்து நிறுத்தியுள்ளார்.

வாக்காளர்களுக்கு இடையே பகிரும் நோக்கில் சுமார் 4000 கூரைத் தகடுகள் திருகோணமலைக்கு எடுத்துச் செல்லப்படவிருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

பதுளை மாவட்ட வறிய மக்களுக்கு விநியோகம் செய்யும் நோக்கிலேயே இந்தக் கூரைத் தகடுகள் களஞ்சியப்படுத்தி வைகப்பட்டிருந்ததாக அமைச்சர் டிலான் பெரோ தெரிவித்துள்ளார்.

தேர்தல் காலத்தில் இவ்வாறு கூரைத் தகடுகளை திருகோணமலைக்கு எடுத்துச் செல்வது சட்ட மீறலாகும் என டிலான் பெரேரா தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

எதிர்வரும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் விமல் வீரவன்சவின் ஜே.என்.பி கட்சி வேட்பாளர் ஒருவர் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.


## மரண அறிவித்தல்

### கந்தையா மகாலிங்கம்

புளியங்கூடல் பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் 10 ஆம் வட்டாரம் புங்குடுதீவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா மகாலிங்கம் நேற்று சனிக்கிழமை (18.08.2012) காலமானார்.

அன்னார் தவநிதி (தவம்) இன் அன்புக் கணவரும், குமார், சசிதரன், சசிக்குமார், சசிகலா, சசிநாதன், சசிகீதன், சசீந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**10 ஆம் வட்டாரம்,**
**புங்குடுதீவு.**
**0775724296**

(C/1708)

**தகவல்:**
**சசிக்குமார் (மகன்)**


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஆகஸ்ட் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.